# உரியவளே இவள் திருமகளே...



ரமணிசந்திரன்

# உரியவளே இவள் திருமகளே

ரமணிசந்திரன்

# அத்தியாயம் - 1

எப்போதுமான வழமை போல வாயிலோரம் வண்டியை நிறுத்திவிட்டு, தன் வேக நடையுடன் மனோரம்யன் பண்ணை வீட்டின் உள்ளே சென்றான்.

சுந்தரவனத்தினுடைய உரிமையாளர் திவ்யப்பிரகாசமும் அவனும் சம வயதினர் அல்ல. சொல்லப் போனால், அவருக்குப் பாதியளவு வயது கூட அவனுக்குக் கிடையாது. ஆயினும் இருவருக்குமிடையே ஒரு சீரிய நட்பு உருவாகியிருந்தது. நெருங்கிய உறவென்று நினைத்தவர் செய்த மோசடியால் செய்வதறியாது அவன் திகைத்து நின்றபோது, பெரியவரின் உதவி இல்லாமல், அவன் மீண்டிருக்கவே முடியாது. அதே போல, வயதினால் மட்டுமின்றி, மன உளைச்சலினாலும் உள்ளூர வதங்கிப் போயிருந்தவருக்கு, மனோரம்யன் செய்துவந்த பல உதவிகள் அவருக்கும் இன்றியமையாதவைகளே.

இருவரின் எண்ணப் போக்குகளும், இயல்புகளும் கூடப் பெரிதும் ஒத்துப் போகவே, இருவருக்கும் வயதைத் தாண்டிய ஓர் உறுதியான நட்பும் ஏற்பட்டிருந்தது.

யாரோ போல "சார் மோர்" எனாமல் "அங்கிள்" என்று அழைக்கச் சொன்னவர் திவ்யப் பிரகாசமேதான்.

தினமும் மாலையில் தன் வேலைகளை முடித்துக்கொண்டு மனோரஞ்சன் சுந்தரவனத்துக்கு வந்தான் என்றால், டீயும் பிஸ்கட்டும் முடிந்து அவன் வீடு திரும்ப வெகு நேரமாகிவிடும். சில சமயங்களில் இரவு உணவையும் அங்கேயே முடித்துக் கொண்டுதான் அவன் வீடுசெல்வான்.

அன்றும் அது போல வந்தவனை, வீட்டின் பக்கவாட்டில் இருந்த சிட்அவுட்டில் ஒரு சிறு வட்ட மேஜையின முன் எதிர் எதிரே கிடந்த இரண்டு நாற்காலிகளில் ஒன்றில் அமர்ந்திருந்த திவ்யப்பிரகாசம், ஆவலோடு நோக்கி, "வாப்பா. உட்கார்." என்று ஒரு வித ஆறுதலோடு வரவேற்றார்.

ஒரு கணம் புருவம் சுருக்கி அவரைப் பார்த்த சின்னவனின் பார்வைக்கு, மேஜை மேல் கிடந்த ஏர்மெயில் கவர் தப்பவில்லை.

லாகவமாக நாற்காலியில் அமர்ந்தபடியே, "ஏன் அங்கிள் சோர்வாகத் தெரிகிறீர்கள்? எதிர்பார்த்த தகவல் வந்துவிட்டதோ?" என்று கேட்டவாறு அமர்ந்து,

பெரியவரை நேராகப் பார்த்து, “எப்போது வருகிறார்களாம்?” என்று வினவினான்.

டீபாய் மேல் கிடந்த கவர் மீது பார்வை பாய்ந்து மீள, “நீ சொன்னது சரிதான், மனோ. வருகிறார்கள்தான். ஆனால் உடனே அல்லவாம். அங்கே சில பலவேலைகளாம். எல்லாவற்றையும் முடித்துவிட்டு வருவதாகத் தம்பியுடைய மகள் எழுதியிருக்கிறாள். பெரும்பாலும், நீ முன்னரே சொன்னது போலத்தான் நானும் நினைத்தேன். . . ஆனால், இந்தக் கடிதத்தை நீயும் படித்துப் பார்.” என்று தெளிவான எழுத்துக்களில் தமிழில் எழுதப்பட்டிருந்த ஒரு கடிதத்தை, அதன் ஏர்மெயில் கவரில் இருந்து எடுத்து, அவனிடம் கொடுத்தார் திவ்யப் பிரகாசம்.

தயக்கத்துடன் கடிதத்தை வாங்கியவன் உடனே அதைப் படிக்கத் தொடங்கி விடவில்லை. “அங்கிள், இது உங்களுக்கு, உங்கள் குடும்பத்தவர் எழுதிய கடிதம். . . . இதை நான் படிப்பது, அவ்வளவு சரியில்லையோ என்று தோன்றுகிறது. எழுத்தில் இருப்பது அவர்கள் வருகிறார்கள் என்கிற விவரம்தானே? அதைத்தான் நீங்களே சொல்லிவிட்டீர்களே!” என்று தயக்கம் காட்டினான் மனோரம்யன்.

குரலில் சிறு கோபம் காட்டி, “பார், பார். அங்கிள் என்று உரிமையாக அழைத்துவிட்டு யாரோ போலப் பேசுகிறாயே! கண்ணால் இதுவரை கண்டிராத அவர்களை விடப் பல ஆண்டுகளாக என் நலத்தை உன்னதாக எண்ணிப் பாடுபடும் நீ என் நெருங்கிய சொந்தம் ஆக மாட்டாயா? அவர்களோடு என்னை இணைக்கக் கூடிய என் தம்பியே இப்போது இல்லை., இந்த நிலையில், அவர்களை நான் எந்த விதத்தில் உறவாக எண்ணுவது? ஆனாலும் இந்தக் கடிதம் என்னை என்னவோ செய்கிறது மனோ. தம்பியிடம் என் பாசம் காரணமாக என்னால் சரியான முடிவுக்கு வர முடியாமல் குழம்புகிறேனோ என்று சந்தேகமாக இருக்கிறது. மனோ, என்னைப் பற்றி நீ அறியாதது எதுவுமில்லை.

“இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன், இந்த வீட்டுக்குள் அவள் அந்தப் பெண் வரக் கூடாது., சொத்தில் என்ன வேண்டுமோ எடுத்துக்கொண்டு போய்விடு என்று சொல்லி, அதிலேயே பிடிவாதமாக நின்றேன். பணத்துக்காக என் திரவியத்தை வலை போட்டுப் பிடித்த அந்தப் பெண்ணைப் பார்க்கக் கூட எனக்குப் பிடிக்காமல் இருந்தது. ஆனால், அப்போது அவள்தான் முக்கியம், உன் சொத்தோ, தந்தையும் தாயுமாக இருந்து வளர்த்த நீயோ அல்ல என்று சொல்லாமல் சொல்வதுபோல, என்னிடம் சொல்லாமலே அவளோடு போய்விட்ட

என் தம்பி, இன்று இந்த உலகத்திலேயே இல்லை எனும்போது, இவர்கள் மட்டும் என்ன உறவு, தேவையே இல்லை, எங்கேயோ எப்படியோ போகட்டும் என்றுதான் முதலில் எண்ணினேன். ஆனால் . . .இந்தக் கடிதத்தைப் படித்துப்பார். என்னவோ, அதைப் படித்த பிறகு, மனதை ஒரு மாதிரிப் பண்ணுகிறது. அந்த அவள் . .தம்பியுடைய மனைவி எப்படியோ? அந்தப் பிள்ளைகள், நான் பிள்ளை போல வளர்த்த என் தம்பியின் ரத்தம்தானே? அவர்களை எப்படி மறுப்பது?

“ஆனால் தம்பியை மயக்கி என்னிடமிருந்து பிரித்த அவள், அந்தப் பிள்ளைகளிடம் என்னைப் பற்றி என்னென்ன திரித்துச் சொல்லி வைத்திருக்கிறாளோ? வீணாக வேதனையை இழுத்துக் கொள்ள நினைக்கிறேனோ . .என்று மனம் குழம்புகிறது. இந்த நிலையில் நான் எடுக்கும் முடிவு சரியாக இருப்பது . . ஊகூம். நிச்சயமாகச் சரியாக இருக்காது., அதனால்தான் இந்தக் கடிதத்தைப் படித்துப் பார் என்கிறேன். படித்து உனக்கு என்ன தோன்றுகிறது என்று சொல்லு. அதன் பிறகு என்ன செய்வது என்று இருவருமாக முடிவு செய்வோம்.” என்றார் பெரியவர்.

“என் மனதில் தோன்றுவதைக் கட்டாயம் சொல்கிறேன். ஆனால் முடிவெடுக்க வேண்டியது நீங்கள் மட்டும்தான்.” என்றவன் அதற்கு மேல் தாமதம் காட்டாமல் கடிதத்தைப் பிரித்துப் படித்தான்.

அவன் எதிர்பார்த்தது போல அன்பு, பாசம் போன்ற உணர்ச்சிகளைக் கொட்டி உருக வைக்கக் கூடிய அடைமொழிகள் இல்லாமல் வெறுமனே “உயர்திரு பெரியப்பாவுக்கு” என்று பெரியவருடைய தம்பி மகள் கடிதத்தைத் தொடங்கியிருந்த விதம் அவனுக்குச் சற்று வியப்பையே அளித்தது.

அறிமுகமே கிடையாது எனும்போது, அன்புக்குரிய, பாசமான, பிரியமுள்ள என்று எதை எழுதினாலும் அது பொய்தானே? அப்படி எதையும் அடைமொழியாக எழுதி பெரியவர் மனதை இளக வைப்பதற்கு, அந்தப் பெண் முயற்சிக்கவே இல்லை!

பலனிராது என்று நினைத்திருப்பாள் என்று எண்ணியவாறு தொடர்ந்து படித்தான் அவன்.

கடிதத்தின் சாரத்திலும், குடும்பத் தலைவரான தந்தையை இழந்து தவிக்கும் தங்கள் அனாதரவான நிலை பற்றியோ, அதனால் அநுபவிக்கும் வேதனைகள் பற்ற்றியோ, முக்கியமாகப் பணக் கஷ்டங்கள் பற்றியோ அவள் எதையும் எழுதவில்லை.

“பின் நாட்களில் அப்பா உங்களைப்பற்றிச் சொன்னதோடு,

எங்களை உங்களிடம் செல்லுமாறு கூறினார். என் அம்மாவும் தம்பியும் நானும் அங்கே வருகிறோம். பழக்கமற்ற எங்கள் வரவு, உங்களுக்கு மிகவும் அசவுகரியமாவே இருக்கும் என்று உணர்கிறேன். ஆனால், கடைசி நேரத்தில் என் தந்தை, என் கையைப் பற்றி, அம்மாவையும் தம்பியையும் உங்களிடம் அழைத்துச் செல்லுமாறு கோரியதைச் செய்யாதிருக்க இயலவில்லை.

“எனவே, அம்மாவையும் தம்பியையும் அழைத்துக்கொண்டு உங்கள் இடத்துக்கு வருகிறேன். தொல்லை தருவதற்குத் தயவு செய்து மன்னிக்க வேண்டும்.” என்று எழுதியவள், முடிக்கும்போதும் உணர்ச்சிகரமான எந்த அடை மொழியையும் பயன்படுத்தினாளில்லை.

அங்கேயும், வெறுமனே, “உண்மையுள்ள திவி” என்றே கையெழுத்திட்டிருந்தாள். இந்தத் “திவி” ஏதோ பெயரின் சுருக்கமாகவே இருக்க வேண்டும். புதியவர்களுக்கு எழுதும்போது முழுப் பெயரில் கையெழுத்திடக் கூடத் தெரியவில்லையே!

அதற்கு மேல், “உண்மையுள்ள”வாம்! அதாவது, அவளை சந்தேகப்படக் கூடாதாம்! அர்த்தமுள்ள வார்த்தைப் பிரயோகம்!

கடிதத்தைப் படித்து முடித்ததும், மடித்து உறையினுள் வைத்த மனோரம்யன், யோசனையோடு கூறினான். “ரொம்பக் கெட்டிக்காரியாக இருப்பாள் போலத் தெரிகிறது! “ என்றான் மெதுவாக.

புரியாத பார்வையுடன் “என்னப்பா சொல்கிறாய்?” என்று பெரியவர் வினவினார்.

“பெற்றோருக்காக . . அவர்கள் செய்த தவறுக்காகக் கெஞ்சி மன்னிப்புக் கேட்கிற மாதிரி ஒரு கடிதத்தைத்தானே நாம் எதிர்பார்த்தோம்? ஆனால், இவளைப் பாருங்கள், தன் பெற்றோரைக் கொஞ்சம் கூட விட்டுக் கொடுக்கவில்லை. அண்ணன் தம்பியின் கடந்த இருபத்தைந்து ஆண்டுகள் பிரிவைப் பற்றிச் சிறு குறிப்பு கூட இல்லை. அது பற்றி நா . . ம் நினைக்கக் கூட அவள் இடம் தரவில்லை. அத்தோடு, இங்கே வருவதற்கு உங்களிடம் அனுமதியும் கேட்கவில்லை. மாறாக அவர்கள் வருவதால் ஏற்படக் கூடிய கஷ்டங்களுக்கு மன்னிப்புக் கேட்டு, அவர்கள் இங்கே வருவதை உறுதிப்படுத்திக் குறிக்கோளை அழகாக நடத்தி முடித்தே விட்டாள்! “ என்றான் ஒரு மாதிரி குரலில்.

“அதாவது எல்லாம் புனைகதை என்கிறாயா? ஆனால் என் தம்பி திரவியத்தின் பழைய கடிதத்தை உன்னிடம் காட்டினேனே. நினைவில்லை? அதில் அவனும் . ..”

சின்னவனிடம் சொல்லும்போதே, அவர் மனதிலும் தம்பியின் அந்தக் கடித வாசகம் ஓடியது. அதுவும் அனாவசிய வசனங்கள் இல்லாத ஒரு சுருக்கமான கடிதமே.

"எனக்குள் ஒரு நோய் வளர்ந்திருக்கிறது. ஒரு வேளை நான் மீளவில்லை என்றால், மீளும் வாய்ப்பு மிகவும்குறைவு., எனவே என் குடும்பத்திடம் உங்கள் முகவரி கொடுத்திருக்கிறேன். ஒருவேளை உங்களைத் தேடி வந்தால், . . முடிந்தால் . . .உங்கள் விருப்பம் போலச் செய்யுங்கள். " என்று முடித்திருந்தார் திரவியம்.

திரவியமும் அங்குள்ள சொத்தில் உரிமை ஏதும் கோரவில்லை. தன் குடும்பத்தைப் பார்த்துக் கொள்ளும்படி வெளிப்படையாகக் கேட்கவும் இல்லை. அதற்கும் தனக்கு உரிமை இல்லை என்று எண்ணியது போல, அண்ணனின் விருப்பத்துக்கே விட்டிருந்தார்.

கடிதத்தைத் தொடர்ந்து தம்பியின் மரணச்செய்தி வந்து மூத்தவரைச் சில நாட்கள் நிலை குலையச் செய்திருந்தது. அப்போதெல்லாம், பெரும்பாலும் அவரோடு கூடவே இருந்து , அவரைப் பழையமாதிரி ஆக்கியது மனோரம்யனேதான்.

எப்போதுமே மனோரம்யனிடம், திவ்யப்பிரகாசத்துக்கு மிகுந்த பாசம் . . . பழகப் பழக சொந்தப் பிள்ளை போலவே ஒரு பிரியம் ஏற்பட்டிருந்தது! இப்போதோ, அவனைத் தன்னுடைய வாரிசு என்று முழுதாக மனதில் ஏற்றுவிட்டதோடு சட்டப்படி அதைச் செய்யவும், அவர் தயாராகவே இருந்தார்.

சொல்லப் போனால், அது பற்றிக் கோடி காட்டி அவர் பேசியபோது, கண்டுகொள்ளாதது போலத் தள்ளிப் போட்டவன் மனோதான்.

இன்னொருவனாக இருந்தால், பறக்காவெட்டித்தனமாக உயில் எழுத வக்கீலையே கூட்டி வந்திருக்கமாட்டானா?

அவரே நேரடியாக ஒரு தரம் கேட்டபோதும், "இதெல்லாம் தீர யோசித்து முடிவு செய்ய வேண்டியது. அவசரம் கூடாது. " என்று அவன் மறுத்துவிட, திவ்யப்பிரகாசத்தின் மனதில் சின்னவன் மீது பாசமும் மதிப்பும் இன்னமும் கூடிப் போயிற்று.

அவன் என்ன தயங்கினாலும், தன் வாரிசு இவனேதான் என்று உறுதியான இறுதி முடிவுக்கே அவர் வந்துவிட்டார்.

எனவேதான் உரிமையோடு மனோரம்யனிடம் ஆலோசனை கேட்டார்.

தனக்குத் தோன்றியதை அவனும் சொன்னான்.

“அங்கிள், ஓர் அன்பான அண்ணன் தம்பியைத் தன்னைப் பெற்றவளே பிரித்தது பற்றி, ஒருவேளை இந்தப் பெண் அறியாமலே இருக்கக் கூடும். ஆனால், இத்தனை காலம் இந்தப் பெரியப்பாவோடு தொடர்பே இல்லாதிருப்பானேன் என்று எண்ணிப் பார்ப்பதுதானே மூளை உள்ளவளின் இயல்பு? அதுவும், அடைக்கலம் என்று அவரிடமே தந்தை போகச் சொல்வதானால் தப்பு யாரிடம் இருக்கக் கூடும் என்று கூடவா யோசிக்கத் தோன்றாது? ஆனால் கடந்துவிட்ட எதற்காகவும் மன்னிப்புக் கேட்க அந்தப் பெண் திவி தயாராக இல்லை, அங்கிள்.

“அதைவிட, ஒரு புது மாற்றத்தால் உங்களுக்கு ஏற்படக் கூடிய கஷ்டம் புரிந்த மாதிரி ஒரு பாவனை. அதற்காக ஒரு மன்னிப்பை வேண்டல். சுய கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல், சும்மா மன்னிப்புக் கேட்கிற பாவனையில் இங்கு வருவதை நிச்சயமாக்கி விட்டாள். பின்னே கெட்டிக்காரிதானே, அங்கிள்? பாருங்கள், அதற்குள் உங்கள் குரல் ஆடிவிட்டது, நேரில் பார்த்து இன்னும் கொஞ்சம் கொஞ்சிக் கெஞ்சிப் பேசினால் போதாதா? நீங்கள் உருகிவிடப் போகிறீர்கள். அதற்காக அவள் என்னென்ன செய்யக் கூடுமோ? நீங்களும் தம்பிப் பாசத்தில் அவர்களுக்காக என்னென்ன செய்யப் போகிறீர்களோ? கட்டாயம் செய்வீர்கள். இதுதான் என் அபிப்பிராயம் அங்கிள்!” என்று முடித்தான் அவன்.

“என்னப்பா சொல்லுகிறாய்? அவள் பெற்றோருக்காக மன்னிப்புக் கேட்டால், அது அவர்களைக் காட்டிக் கொடுப்பது போல ஆகாதா? அந்த அளவு பெற்றோரிடம் விசுவாசம் இருக்க வேண்டாமா?” என்று ஆட்சேபித்தார் பெரியவர்.

அவரை ஒரு தரம் கூர்ந்து பார்த்துவிட்டு, சிறு முறுவலுடன் “அங்கே சாயத் தொடங்கிவிட்டீர்கள் அங்கிள்.” என்றான் சின்னவன்.

“அதாவது, என்னை ஏமாளி என்கிறாய்.”

“இல்லை. ஏமாந்துவிடாதீர்கள் என்று எச்சரிக்கிறேன்.”

“ம்ம்ம். . . என்ன செய்யலாம் என்கிறாய்? தம்பியை நினைக்கையில் இங்கே வரவேண்டாம் என்று சொல்ல மனதுக்குக் கஷ்டமாக இருக்கிறதே!” என்றார் பெரியவர் கலக்கத்துடன்.

அவரைப் பரிவுடன் பார்த்தான் இளைஞன்.

சில மாதங்களுக்கு முன்பாகத் தம்பியின் கடிதம் வரும்வரை, அவரது அறுபத்தைந்து வயதே, அவராகச் சொன்னால்தான் தெரியும்.

அவ்வளவு ஆரோக்கியமான மனிதர் அவர். தெளிவான பேச்சும் உறுதியான நடவடிக்கைகளுமாக, அங்கே பல பேருக்கு அவரே முன்னுதாரணமாக இருந்தார்.

இப்போதும் தூர நின்று பார்ப்பவர்களுக்கு வேறுபாடு அதிகம் தெரிவதற்கில்லை.

ஆனால் மனோரம்யன் தூர நிற்கிறவன் அல்லவே! முக்கியமாக மனதளவில் மிகவும் நெருக்கம் கொண்டவன் ஆயிற்றே!

அவரது குழப்பமும் கலக்கமும், அதற்குக் காரணமானவர்களிடம் அவனுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

தகப்பனும் மகளுமாக ஆளாளுக்கு ஒரு கடிதத்தை எழுதி, இந்த மாமனிதரை என்ன பாடு படுத்துகிறார்கள்! தகப்பனாராவது மரண பயத்தில் குடும்பத்துக்குப் பாதுகாப்புத் தேடி எழுதியிருக்கலாம்.

ஆனால், இந்தப் பெண் என்ன, வாயில் விரலை வைத்தால் கடிக்கத் தெரியாத சின்னப் பாப்பாவா? எப்படியும் வயது இருபதுக்கு மேல் இராது?

தாயையும் தம்பியையும் பார்த்துக்கொள்ள அவளால் முடியாதா? சம்பாதித்துப் போடத் தந்தை இல்லை என்றானதும், ஒட்டுண்ணியாய் உறிஞ்சிச் சாப்பிட இன்னோர் இடம் தேடி ஓடி வருகிறாளே! என்ன மட்டமான புத்தி!

இதில், ஒரு மன்னிப்புக் கேட்கக் கூட மகாராணி இறங்கி வர மாட்டாளாம்!

கும்பிட்டுக் கொடுப்பது என்று ஊர்ப்புறம் ஒரு வாசகம் சொல்வார்கள். ராஜாக்களுக்குக் காலில் விழுந்து காணிக்கை கொடுப்பது. அது போல அல்லவா நடந்துகொள்கிறாள். காணிக்கை கொடுப்பதற்கு அங்கிளும் தயாராகிவிட்டார்!

அந்தத் “திவி” குடும்பத்தின் வரவு மனோரம்யனுக்குப் பிடிக்காமல் போனதற்கு இன்னொரு காரணமும் இருந்தது.

பணமும் சொத்தும் சேரச் சேர, எதையும் எடுத்துக் கொள்ளாமல் வீட்டை விட்டுப் போன தம்பியை நினைத்து திவ்யப்பிரகாசம் அடிக்கடி வேதனைப்படுவார்.

“என் தம்பிக்குப் பணத்தின் அருமை தெரியாது. என்ன செய்கிறானோ? எப்படி வாழ்கிறானோ? இந்தப் பணம் இங்கே பெருகுவதால் என்ன பயன்?” என்று மனோரம்யனிடம் வருந்திக்

கூறுவார்.

இங்கே இவ்வளவு வசதி இருக்கும்போது, தம்பி என்ன கஷ்டப்படுகிறானோ என்ற தவிப்பு அவருக்கு.

பண்ணைப் பணியாளர்களுடைய பிள்ளைகளின் படிப்பு, ஆரோக்கியம் பேணுவதற்காக மனோரம்யன் ஏற்கனவே பல ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தான். மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பள்ளி ஒன்றும் தொடங்கி நடந்து கொண்டிருந்தது.

பல பண்ணை முதலாளிகளுடைய குடும்பத்தவருக்குத் தங்களை உயர்வாகக் காட்டிப் பெருமை பேசிக்கொள்ள ஒரு வாய்ப்பாகத் தோன்றவே, அன்றைய ஃபேஷனாகப் பலரும் இந்த வேலைகளில் பங்கெடுத்துக் கொண்டார்கள். அல்லது பங்கெடுத்துக் கொள்வது போலக் காட்டிக்கொள்ளவேனும் செய்தார்கள்.

குறைந்த பட்சமாக “டொனேஷன்” என்று பணத்தையேனும் பலர் அறியக் கொடுத்தார்கள்.

அந்தப் பொய்மைக் கூட்டத்தின் இடையே சில நல்லவர்களும் இருந்து நிஜமான பணிகளில் ஈடுபடவும் செய்தார்கள். அந்த நல்லவர்களில் ஒருவராகப் பெரியவரை இதில் ஈடுபடச் செய்தான் மனோரம்யன்.

தம்பி திரவியத்துடைய குடும்பம் இதனுடைய புண்ணியத்தை அடையும் என்ற நம்பிக்கையில் திவ்யப்பிரகாசமும் சற்றுத் தாராளமாகவே பண உதவி செய்யலானார்.

ஆனால், யாருக்காக திவ்யப்பிரகாசம் இதைச் செய்தாரோ, அந்தக் குடும்பமே இந்தத் தரும காரியத்தை வீண் செலவு என்று நிறுத்தி விடக் கூடுமோ என்று உள்ளூர ஒரு பயம் மனோரம்யனுக்கு இப்போது வந்தது.

உலகநிலை அறிந்த அவனுடைய அன்னைக்கே இதற்காக மகன் செலவு செய்வது அவ்வளவு பிடித்தம் கிடையாது. இதைச் செய்வதால் அந்த சமூகத்தில் மகனுக்கு மதிப்பு உயர்கிறது என்பதால்தான் பாரிஜாதம் அதில் ஒத்துப் போவதே. வரப் போகும் அந்த சிங்கப்பூர்க்காரி என்ன செய்யப் போகிறாளோ?

எல்லோரையும் போல இவளும் ஒத்துக்கொண்டு நடந்தால் அவர்களுக்கு நல்லது.

அன்றி, நாங்கள் வாரிசுக்ள், எங்கள் பணத்தை வீணாக்குவதா என்கிற ரீதியில் நடக்கத் தொடங்கினால், அப்புறம் இந்த மனோரம்யன்

யார் என்று அந்தப் பெண்ணுக்கு அவன் காட்ட நேரும்!

பெரியவரின் நலனுக்கு இடையூறோ, அவரது பொதுப்பணிக்குத் தடையோ செய்யாமல் இருக்கும்வரை, அவர்கள் எப்படிப் போனாலும் அவனுக்கு அக்கறை கிடையாது. இந்த இரண்டில் எது நடந்தாலும் அவன் சும்மா இருக்க மாட்டான்.

இது விஷயமாக அவனோடு மோதாமல் இருப்பது அவளுக்கு நல்லது!

“என்னவோ, வரட்டும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது, மனோ. ஆனால் மற்றபடி என்ன செய்யலாம் என்கிறாய்? அதைச் சொல்லு.” என்று திவ்யப்பிரகாசம் கேட்ட பிறகே, மனோவுக்குப் பேசிக் கொண்டிருந்த விஷயம் நினைவு வந்தது.

தம்பி குடும்பத்தை வரவேண்டாம் என்று தடுக்க அவருக்கு மனமில்லை. மேலே அந்தக் குடும்பம் இவரை உறிஞ்சிவிடாமல் தடுக்க அவனால் ஆவதைச் செய்யலாமே தவிர, அவரது முடிவில் அவன் தலையிடுவது சரியல்ல.

“ம்ம்ம் . .பணத்தைக் காட்டாதீர்கள், அங்கிள். ஆனால், கஷ்டப்படாத சொகுசு வாழ்க்கை கிடையாது என்று காட்டுங்கள். சொத்து பணத்துக்காகவே அந்த அம்மாள் உங்கள் தம்பியை மணந்ததாக முன்பே சொல்லியிருக்கிறீர்கள். பணத்துக்காகத் தன் மனைவி உங்களிடம் வந்து நின்றுவிடக் கூடாது என்று சுய கௌரவம் காப்பதற்காகவே உங்கள் சகோதரர் அந்தம்மாளை நாட்டை விட்டு வெளி தேசத்துக்கு அழைத்துச் சென்றிருக்க வேண்டும் என்றும் கூறினீர்கள். இப்போது தடுப்பதற்கு உங்கள் தம்பி இல்லாத நிலையில் கட்டாயம் உங்கள் பணத்துக்காக அந்தக் குடும்பம் இங்கே வந்து நிற்கும் என்பதும், நாம் இருவருமே எதிர்பார்த்ததே. அதே போல வரவும் போகிறார்கள். இப்போது, அவர்கள் ஆசைப்பட்ட பணம் இங்கே இல்லை என்று தெளிவாகத் தெரிய வைத்துவிட்டால், எண்ணிப் பத்தே நாட்களில் அவர்களாகவே இங்கிருந்து கிளம்பி ஓடி விடுவார்கள்.” என்று அவருக்குத் தெளிவான விளக்கத்துடன் பதில் சொன்னான். அவன்.

அது சரியே என்று பெரியவரும் ஒத்துக் கொண்டார்.

# அத்தியாயம் - 2

பணத்தைக் காட்டாமல் இருப்பது, திவ்யப்பிரகாசத்துக்கு அப்படி ஒன்றும் கடினமான செயலாகவும் இருக்கவில்லை.

பொதுவாகவுமே, தனித்தே வாழ்வதால் அவர் பார்ட்டி, விருந்து எதையும் பெரிதாக  நடத்துவது இல்லை. தொழில் முறையில் ஏதாவது செய்ய வேண்டி இருந்தாலும், சுற்றி இருந்த தோட்டப் பகுதியிலேயே, ஏற்பாடு செய்துவிடுவார்.

அந்தப் பண்ணைக் குடும்பங்களுள், விருந்துகளுக்கு உணவு ஏற்பாடு செய்து கொடுக்கும் “கேட்டரிங்” குடும்பமும் ஒன்று இருந்தது. கேட்ட உணவுப் பதார்த்தங்களை உரிய முறையில் குறையின்றித் தயாரித்துக் கொடுப்பார்கள். சுவையில், தரத்தில் குறை இராது என்பதோடு, கூடக் குறையத் தேவைப்பட்டாலும் சமாளிப்பார்கள்.

திருமணம் போலப் பெரிய அளவில் நடத்தப் படும் விழாக்கள் தவிர, மற்றவைகளுக்கு எல்லோருமே அவர்களைத்தான் நாடுவார்கள்.

திவ்யப் பிரகாசமும் அப்படித்தான். தன் தேவையை அவர்களிடம் சொல்லிவிட்டுக் கவலையின்றி இருப்பார்.

எனவே, வீட்டில் உபசரிப்புக்காக என்று எந்தப் பகுதியையும் அவர் சிறப்பாகப் பராமரிக்க தேவையும் இருக்கவில்லை., அவர் அதைச் செய்யவும் இல்லை.

வீடு சற்றுப் பெரியதுதான். அதனோடு சேர்ந்த பண்ணையோடு சேர்த்து ஒரு வெளிநாட்டுக்காரரிடம் வாங்கியது. நிறைய அறைகள் இருந்தன. தன் தேவைக்குத் தவிர மற்ற அறைகளை, அவர் சும்மாப் பூட்டித்தான் போட்டிருந்தார்.

மலைப் பாங்கான இடம் என்பதால் காற்றில் தூசி அதிகம் இருப்பதில்லை. பூட்டியிருந்த அறைகளைத் திறந்து, லேசாகத் தட்டிப் பெருக்கினாலே போதுமானது. தம்பி குடும்பத்துக்குத் தேவையான அறைகளைத் தயார்ப்படுத்துமாறு ராக்கனிடம் சொல்ல வேண்டும். அவ்வளவே.

அடுத்து, பெரிய காரை ஒளித்து வைக்க வேண்டும்.

“காரை உன் வீட்டில் வைத்துக் கொள்கிறாயா?” என்று திவ்யப்பிரகாசம் கேட்டதற்கு மனோரம்யன் மறுத்துவிட்டான்.

“உங்களுக்கு என் அம்மாவைத் தெரியும் அங்கிள். அவர்களுக்கு

அந்த மாதிரிப் பொருட்கள் மேல் அசட்டு ஆசை உண்டு. பெரிய காரை எடுத்து ஓட்டத் தொடங்குவதோடு, யார் இருக்கிறார்கள் என்றே பாராமல், உங்கள் கார் பிடித்திருக்கிறது, அப்படி, இப்படி என்று ஏதாவது சட்டெனச் சொல்லி விடுவார்கள். அதைவிடப் பேசாமல் உங்கள் ஷெட்டிலேயே வைத்துப் பூட்டி விடுங்கள். ஜீப் மட்டும் வெளியே இருக்கட்டும். ஒன்றும் இல்லாவிட்டால் நம்பத் தோன்றாது.

“நீங்கள் தனி ஆள் என்பதால், சமையலாள், மற்ற பணியாளர்கள் யாரையும் பணியை விட்டுப் போகச் சொல்ல முடியாது, அங்கிள். யாரும் இல்லாமல் நீங்கள் கஷ்டப்படவும் கூடாது. முடிந்தவரை, இரண்டு மூன்று பேரைப் பண்ணை வேலைக்கு அனுப்பி விடுங்கள். ரொம்பக் குறைந்தாலும் இந்தப் பெரிய வீட்டைப் பார்த்தபின் நம்பத் தோன்றாது. ஆனால், உங்களது எளிமையான சற்று சமையல்தானே? அதையே சமைக்கச் சொல்லுங்கள். அவர்களும் அதையே உண்ணட்டும். ஓசிச் சாப்பாட்டுக்கு அது போதும். அத்தோடு வருமானம் ஓர் அளவுக்கு உட்பட்டதுதான் போல என்றும் தோன்றும்.

“அவர்கள் வருகிற நாள் தெரிந்ததும் சொல்லுங்கள். மதுரை விமான நிலையத்துக்கு நானே போய்க் கூட்டி வருகிறேன்.” என்றுவிட்டுப் போனான் மனோரம்யன்.

திவ்யப்பிரகாசத்துடைய தம்பி இறந்து, தம்பியுடைய குடும்பம் வரப் போகும் விஷயம் வெளியே கசிந்து பரவிற்று.

அவரவர் இயல்புக்கேற்ப, வாழ்த்தியோ வருந்தியோ பேசினார்கள்.

பெரியவரின் மனநிலையும் ஆவலும் கவலையுமாக மாறி மாறித்தான் இருந்தது. வர இருக்கும் பிள்ளைகளில் யார் தம்பியைப் போல இருப்பார்கள்?

ஒருவேளை, தன் சாயல் கூட இருக்கக் கூடுமோ?

யாரையும் பார்த்தது இல்லை. ஃபோட்டோ அனுப்பும்படிக் கேட்க அவருக்குத் தயக்கம் என்றால், முந்திக்கொண்டு அனுப்ப அவர்களுக்கும் தயக்கமாக இருந்ததோ அல்லது மனமில்லையோ? அங்கிருந்தும் எதுவும் வரவில்லை. கடிதம் கூட!

“நாங்கள் ஒன்றும் ஆசைப்பட்டு வந்து விழவில்லை” என்று காட்ட நினைக்கிறார்கள் என்றான் மனோரம்யன். “அவர்களின் வரவுக்காக நாமும் துடித்துக் கொண்டிருக்கவில்லை என்பதாகவே இருக்கட்டும், அங்கிள். இங்கே ராஜ உபசாரத்தை அவர்கள் எதிர்பார்க்கக் கூடாது.”

மேலும் ஆறு வாரங்கள் சென்ற பிறகே, தம்பி திரவியத்துடைய குடும்பம் அவருடைய அண்ணனின் வீட்டுக்கு வருவது பற்றிய தகவல் திவ்யப்பிரகாசத்துக்கு வந்து சேர்ந்தது.

அதன்படி மதுரை வரை அந்தக் குடும்பம் விமானத்தில் வருவதாக இன்னொரு கடிதம் வந்தது. அங்கிருந்து அவரது இருப்பிடத்துக்கு வரும் வழியும் கேட்கப் பட்டிருந்தது.

“உங்கள் உதவியை எதிர்பார்க்கவில்லையாம். அப்படிக் காட்டிக் கொள்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஏதாவது சாக்குச் சொல்லி இங்கே வராமலே இருந்திருக்கலாமே.” என்றான் மனோரம்யன்.

பெரியவரின் மனம் அலைபாய்வதைக் காண்கையில் வர இருக்கும் அந்தக் குடும்பத்திடம் அவனுக்கு உளளூர வெறுப்புக் கூடிக்கொண்டே போயிற்று.

ஆனாலும் திவ்யப்பிரகாசத்திடம் ஒத்துக்கொண்டபடி, அவர்களை வீட்டுக்கு அழைத்துவர அவனே சென்றான்.

பிடிக்காமல்தான். ஆனால், மற்றபடி யாரோடேனும் திவ்யப்பிரகாசமே செல்ல வேண்டியிருக்கும். அது கூடாது.

மனோரம்யனே சென்றால், பாவம் அவரேனும் நிம்மதியாக இருப்பார்!

விமான நிலையத்துக்குச் சென்றபோதும், வருகிறவர்களைத் தேடிக் கண்டுபிடித்துக் கூட்டிவர அவன் முயற்சிக்கவில்லை. அழையா விருந்தாளிகளாக வந்து நிற்பவர்கள் அவர்கள்தானே? அவர்களே தேடி வரட்டும் என்று எங்கோ பார்த்தபடி அலட்சியமாகவே நின்றான்.

குடியையே கிளப்பிக்கொண்டு வருகிறவர்கள். சாமான்களும் நிறைய இருக்கும். அவர்களே வந்து சேரட்டும்!

ஜீன்சும் டாப்பும் அணிந்த ஒருத்தி இங்குமங்கும் சுற்றுவதைக் கண்ணோரம் காட்டியபோதும், அவன் கையிலிருந்த பத்திரிகையை விட்டுப் பார்வையை உயர்த்தவில்லை.

சற்றுப் பொறுத்து, அந்த ஜீன்ஸ் அணிந்த கால்கள் அவன் அருகிலேயே வந்து நின்றன. பெட்டி பைகள் நிரம்பிய தள்ளு வண்டிகளும்.

“எக்ஸ்க்யூஸ் மி சார், நாங்கள் “சுந்தரவன”த்துக்குப் போக வேண்டும். அங்கிருந்து நீங்கள்தான் வந்திருக்க வேண்டும் என்று இங்குள்ள அலுவலர் சொல்லுகிறார். அது சரியே என்றால்,

சாமான்களை எடுத்து வண்டியில் வைக்கலாமா?” என்று கேட்டாள் அந்தப் பெண்.

மனோரம்யன் இங்கே அறிமுகம் ஆனவன். எந்தப் பணியாள் உதவுவதாக எண்ணிக் காட்டிக் கொடுத்தானோ?

பெட்டிகளை எடுத்துக்கொண்டு வெளியே சென்று, காரில் சாமான்களை ஏற்றத் தொடங்கிய போதுதான், வந்திருக்கும் விருந்தாளிகளைப் பற்றித் தான் கொண்ட அபிப்பிராயம் சரியே என்று உணர, மனோரம்யனுக்கு முதல் வாய்ப்புக் கிடைத்தது.

ஜீப் அருகே ட்ராலியைக் கொண்டு சென்று சாமான்களை ஏற்றத் தொடங்கியபோது, “ஐய்யய்யோ ஜீப்! பெரிய கார் உண்டு என்று அப்பா சொன்னார் என்றீர்களே! “ என்று, தன் ஏமாற்றத்தை வாய் விட்டுக் கத்தித் தெரிவித்தான் சின்னப்பையன்.

ஏமாற்றம் மிகுதியாக இருக்கவே, அதன் தாக்கத்தில் உரக்கக் கத்தியே பேசினான் சிறுவன்.

சின்னப் பையன். பத்து வயதுக்குள்தான் இருக்கும். எனவே, அக்கா அம்மா அளவு நடிப்பு சரியாக வரவில்லை போலும் என்று எண்ணிய மனோரம்யனின் கீழுதடு ஏளனமாக வளைந்தது.

அவனது முகத்தில் இதை எதிர்பார்த்தது போன்ற பாவனையைக் கண்டாள் போலும். கூட வந்திருந்த பெண்ணின் முகம் கன்றிச் சிவந்து போயிற்று.

முகத்தின் சூடு உணர்ந்தவள் போலத் திரும்பி நின்று, “தம்பீ, சத்தத்தைக் குறைத்து மெல்லப் பேசு.” என்று அடிக்குரலில் அதட்டினாள்.

வீட்டில் அவளது அதிகாரம்தானோ!

சிறுவனும் உடனே அடங்கி, “ஆனால் பெரியப்பாவிடம் பெரிய கார் உண்டு என்று அம்மா சொன்னார்கள்தானே? நம்மைக் கூட்டிப் போக பெரியப்பா அதை ஏன் அனுப்பவில்லை, அக்கா?” என்று தணிந்த குரலில் கேட்டான்.

என்னதான் குரலை இறக்கியிருந்தாலும், சாமான்களை எடுத்து வைத்தபடி அருகிலேயே நின்றுகொண்டிருந்த மனிதனுக்குக் கேளாமல் இருக்க வாய்ப்பில்லை.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாகவே பெரிய கார் வாங்கி வைத்திருந்த பெரிய தகப்பன் இப்போது எத்தனை கார்களை

எதிர்பார்த்து வந்தனரோ? குறைந்த பட்சம் ஆளுக்கு ஒரு கார்?

"என்ன தம்பி உனக்குப் புரியவில்லையா? மலைமேலே ஏற ஜீப் இன்னும் வசதியாக இருக்குமல்லவா? ஆனால் புரியாத இதையெல்லாம் யோசிப்பதை விடுத்து, உன் சாமான்கள் எல்லாம் உள்ளே வைக்க உதவி செய்யலாமில்லையா?" என்று தமக்கை நயந்த குரலில் கூறவும், சிறுவன் மனோரம்யனிடம் ஓடி வந்தான்.

அவனுக்குப் பழக்கப்பட்ட ஒரு விமான நிலையக் கூலியாள் தூக்கி வைக்க, அப்போதே பெரிய பெட்டிகள் எல்லாம் ஜீப்பில் அடுக்கப் பட்டு விட்டிருந்தன.

கைச் சாமானாகக் கொண்டு வந்திருந்த தோள்ப்பை ஒன்றைத் தூக்கி, "இதை உள்ளே வைக்கவா? அல்லது தோளிலேயே மாட்டிக் கொள்ளவா அண் . . .வவந்து சா . .ர்?" என்று சிறு குழப்பத்துடன் கேட்டான் சிறுவன்.

பத்து வயது இருக்கலாம். பிள்ளைத்தனம் மாறாத விழிகளால் நோக்கி அவன் கேட்கையில், மனம் இளகுவதை மனோரம்யனால் தடுக்க முடியவில்லை.

ஆனால் அவனுக்கே இப்படி என்றால் அங்கிள் என்ன ஆவார் என்று தோன்றவும் இளக்கம் மாறிவிட, "உன் பொருட்கள் மட்டும் என்றால் தோளிலேயே மாட்டிக்கொள். ஆனால், நீ கொஞ்சம் ஒதுங்கி நின்றால், அந்த ஆள் விரைவாக ஏற்றி விடுவார்." என்றவன் வேண்டும் என்றே, தன்னை அழைக்கும் முறை பற்றிச் சொல்லாமல் விடுத்தான்.

"அண்ணா" என்று உறவு கொடுக்க அவனுக்கு மனமில்லை. அதே சமயம், ஒரு சின்னப் பையனிடம் "சார்" என்பதாகப் பெரிய எடுப்புக் காட்டவும் பிடிக்கவில்லை. எல்லாம் இவர்கள் அங்கிளிடம் நடந்து கொள்ளும் விதத்தைப் பார்த்துவிட்டு முடிவு செய்யலாம்.

எப்படியும் இங்கே வருகிற முடிவெல்லாம் தாயும் மகளுமாகத்தானே எடுத்திருப்பார்கள்! இந்தச் சிறுவனுக்கு என்ன தெரியும்?

பொருட்களை அடுக்கி முடித்தவனிடம் மனோரம்யன் பணத்தைக் கொடுக்கும்போதே, சில டாலர் நோட்டுகளை அந்தத் "திவி"யும் நீட்டினாள்.

அவளது கையில் இருந்ததைப் பார்த்துவிட்டு, "இந்த நோட்டு எனக்கு என்னாத்துக்கும்மா? நீ கொடு சார்." என்று பழக்கப்பட்டவனிடம் பணத்தை வாங்கிக்கொண்டு ஒரு சல்யூட்

அடித்துவிட்டுச் சென்றான் கூலியாள்.

“ஓ, இங்கே அமெரிக்கன் டாலர் கூட வாங்க மாட்டார்களா? அதை எங்கேயும் மாற்றலாம் என்று சிங்கப்பூர் டாலரையெல்லாம் அதாக மாற்றிக்கொண்டு வந்தேனே!” என்று ஏமாற்றத்துடன் கூறினாள் திவி.

மனோரம்யனுக்கு எரிச்சல் வந்தது.

இந்த அம்மாள் அதி நாகரீகமாக அமெரிக்க டாலரிலேயே பிறந்து வளர்ந்து புழங்குகிறவள், அதைச் சரியாக ஏற்றுக் கொள்ளத் தெரியாத பட்டிக்காட்டுக்கு வந்துவிட்டதாகக் குத்துகிறாளா?

“சிங்கப்பூர் நாகரீகத்தை எதிர்பார்த்தாய் போல? பாவம்!” என்ற அவனது குரலில் சடக்கெனத் திரும்பி அவனைப் பார்த்தாள் திவி.

குரலில் வெறுப்புத் தெரிந்துவிட்டதோ? தெரியட்டும். அங்கே யாரும் இவர்களுக்கு ரத்தினக் கம்பளம் விரித்துக்கொண்டு காத்திருக்க மாட்டார்கள் என்று புரிந்தால் சரி.

அம்மாக்காரி சரியான கல்லுளி மங்கி! வாயையே திறக்கக் காணோம்! முதலில் அறிமுகப்படுத்திக் கொண்டதோடு சரி.

கணவரோடு போனவள், தனியாக வர நேர்ந்ததே என்று வருத்தம், வேதனையாக இருக்கக் கூடும் என்று ஒரு சிறு குரல் கூறினாலும், இங்கே திவ்யப்பிரகாசத்தின் மன உளைச்சல்களே பெரிதாகத் தோன்ற, மனோரம்யனால் புதியவர்களிடம் இரக்கம் காட்ட முடியவில்லை.

பெரிய பெட்டிகள்தான் என்றாலும் நாலைந்து பெட்டிகளே. கூடவே சில அட்டைப் பெட்டிகளோடு அவர்கள் கொண்டு வந்த சாமான்கள் முடிந்து போயிருந்தன.

இருபத்தைந்து ஆண்டுக் குடித்தனம் நடத்தியவர்களுக்கு இவ்வளவுதான் உடைமைகளா?

கப்பலிலோ, வேறு யாரிடமுமோ கொண்டு வர ஏற்பாடு செய்திருப்பார்களா? அப்படியிருந்தால், அவைகளைக் கொண்டு செல்ல, அவன் இன்னொரு தரம் மதுரைக்கு அலைய நேருமா?

“உங்கள் சாமான் இவ்வளவுதானா? யார் மூலமேனும் இன்னும் வருகிறதா?” என்று பெண்கள் புறம் திரும்பிப் பொதுவாகக் கேட்டான்.

எப்போதும் போல அந்தத் திவியே பதில் சொன்னாள்.

“இவ்வளவுதான், மனோரம்யன் சார். கொண்டு வரும் செலவு மிக அதிகமாக இருந்தது. அதனால் தேவைப்பட்டால் இங்கேயே வாங்கிக் கொள்ளலாம் என்று எண்ணி, அங்கேயே சில இல்லங்களுக்குக்

கொடுத்து விட்டோம். . . “ என்று சொல்லி வந்தவள் சட்டெனப் பேச்சை நிறுத்தினாள்.

இவனுக்கு, இந்த விளக்கம் ஏன் சொல்ல வேண்டும்? “இவ்வளவுதான்” என்ற சுருக்கமான பதிலே இந்தக் கடுமூஞ்சிக்குப் போதுமானது என்று எண்ணம் ஓடவும், அதற்கு மேல் பேசாமல் அவள் வாயை மூடிக் கொண்டாள்.

ஆனால் அதற்குள் மனோரம்யன் காதைத் தீட்டிக்கொண்டு காத்திருந்த வார்த்தை விழுந்துவிட்டது.

“தேவைப்பட்டாலா” என்று மனதுள் பொருமினான் அவன்.

தேவைப்பட்டா . . லா? அப்படி என்றால் தேவைப்படாது என்கிற நிச்சயம் போல! என்று வாய்க்குள் முணுமுணுத்தான் அவன்.

இங்கே திவ்யப்பிரகாசம் சாரை உறிஞ்சி வாழ்வது என்று முடிவு கட்டியே வந்துவிட்டு, அதென்ன சும்மா ஒரு “தேவைப்பட்டால்?”

ஒரு குடித்தனம் வைப்பது என்றால், சின்னதும் பெரிதுமாக எத் . .த்தனை பொருட்கள் தேவைப்படும்?

சென்னை வீட்டை விட்டுவிட்டு இங்கே குடியேறியபோது, வீட்டுக்குச் சாமான்களைக் கொணர்ந்து சேர்க்குமுன், அவனுக்கு வேர்த்து விறுவிறுத்துப் போனதே!

இவனுக்கு ஒன்றும் தெரியாது என்று எண்ணிக் கதை விடுகிறாள் போல!

அங்கிருந்த வீட்டுச் சாமான்களை வேண்டும் என்றே விற்றுப் பணம் பண்ணிவிட்டு, அப்பாவி போல முகத்தை வைத்துக்கொன்டு, இங்கே வந்து நிற்கிறார்கள்

அங்கிளை உறிஞ்சித் தின்ன வந்த கூட்டம் இது. தனித்து வாழுமா?

அதுதான் முன்னேறபாடாக வீட்டுப் பொருட்களை விற்றுவிட்டு வந்திருப்பதிலேயே, இவர்களது நோக்கம் நன்றாகத் தெரிகிறதே!

அந்தப் பணத்தையும் பதுக்கிக்கொண்டு, இங்கே ஓசியில் உண்டு மகிழ வந்திருக்கிறார்கள்!

அப்படி இவர்கள் சுகவாழ்வு வாழ, இந்த மனோரம்யன் விட்டுவிடுவானா?

பெரிய காரா வேண்டும் உனக்கு? பார்க்கிறேன் ஒரு கை!

அது போன்ற வளங்களைக் கண்ணில் கூடக் காட்ட

விடமாட்டேனே!

திவ்யப்பிகாசத்தின் இரண்டு பெரிய கார்களை வைத்துப் பூட்டிய கராஜ் கதவு அவனுக்கு நினைவு வந்தது. அவனது பையினுள் இருந்த அந்தக் கராஜின் சாவியும்.

திவ்யப்ரகாசத்தின் நினைவில் அவன் முகம் சற்றே கனிந்தது. யாரானாலும், அவனைத் தாண்டி அல்லவா அங்கிளிடம் போக வேண்டும்!

அதற்குள் அவர்களை அவன் ஓட ஓட விரட்டிவிட மாட்டான்?

கூட இருந்தே குழி பறித்த அவனுடைய சித்தப்பாவை விரட்டிப் பெரியவர் அவனுக்குச் செய்த உதவியில் கொஞ்சமேனும் அவன் திருப்பிச் செய்ய வேண்டாமா?

கட்டாயம் செய்வான். இந்த ஒட்டுண்ணிகளை விரட்டுவான்!

அவனது கால் அழுத்தத்தில் ஜீப் வேகம் எடுத்தது.

# அத்தியாயம் -3

நடப்பது ஒன்றும் பாரிஜாதத்துக்குப் பிடிக்கவில்லை.

அவளுக்கு நிறைய ஆசைகள்.

ஒரு காலத்தில் சோஷியல் சர்வீஸ் செய்வதாக மேல் மட்டத்தில் பட்டாம்பூச்சியாகச் சுற்றுவதே அவளுக்கு வாழ்க்கையாக இருந்தது. எப்போதாவது எஸ்டேட்டுக்கு வருவதும், பண்ணையைப் பார்த்துக் கொண்டிருந்த ஒன்றுவிட்ட கொழுந்தனார் இந்திரேசன் குடும்பத்தாரின் குளிப்பாட்டலில் மயங்கிச் செலவு போக மிச்சம் என்று அவர் கொடுத்ததைக் கேள்வியின்றி வாங்கிக் கொண்டு வந்து விருப்பம் போலச் செலவு செய்வதுமாக இருந்ததோடு சரி.

கணவர் வைத்துவிட்டுப் போயிருந்த வைப்பு நிதி, சேமிப்புகள் அவ்வப்போது கால முழுமை அடைந்து அவளது கைக்குப் பணமாக வரவர, நன்றாக வேட்டு விட்டுக் கொண்டிருந்தாள்.

அந்த நிதிகள் கரைவது பற்றி, அவள் பெரிதாகக் கவலைப் படவில்லை. எல்லாம் எஸ்டேட்டில் இருந்து வந்த பணம்தானே? ஏதோ சில ஆண்டுகளாகப் பூச்சி வெட்டு, மழை சரியில்லை, அல்லது அதிக மழை கொட்டி அழுகிப் போயிற்று என்று சிலபல காரணங்களால் பண்ணை வருமானம் குறைந்து போயிருக்கிறது. சீக்கிரமே இதெல்லாம் சீராகி, முன்போலப் பண்ணை பணம் காய்ச்சி மரமாகிவிடும்!

இது பாரிஜாதத்தின் நம்பிக்கை. பெற்றவளின் பேச்சை ஏற்று, எந்தக் கவலையும் இல்லாமல் மனோரம்யனும் சந்தோஷமாகப் படித்துக் கொண்டிருந்தான். ஓரளவு உல்லாச வாழ்க்கையே!

இந்தச் சமயத்தில்தான் விதி வேறுவிதமாகச் செயல்படத் தொடங்கியது.

வருமானத்தில் மட்டுமாகக் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கிக் கொண்டிருந்த இந்திரேசனுக்கு இன்னும் இன்னும் என்கிற பேராசையில் மொத்த சொத்தையுமே முழுங்கிவிட எண்ணம் வந்தது.

சும்மாவே பங்காளி முறை. இத்தனை ஆண்டுகளாகப் பராமரித்ததில் மொத்தப் பண்ணையுமே தனது என்கிற எண்ணம் வந்துவிட்டது.

உடையவன் வந்து பார்த்தால்தானே, அந்த இன்னொருவனின் உடைமை இந்தச் சொத்து என்கிற எண்ணம் வரும்?

ஆடுமாடு மேயாமல், காட்டுப் பன்றி குதறாமல் பூச்சி புழு தாக்காமல் அல்லும் பகலும் நிலத்தையும் பயிரையும் காத்தது அடுத்தவருக்குப் கொடுக்கவா?

கடனுக்கு வட்டி கட்டுகிற மாதிரி இவ்வளவு நாள் கொடுத்ததே அதிகம்.

அண்ணன் இருந்திருந்தால், “ஆமாம்ப்பா. இனி நீயே எடுத்துக்கொள்” என்று பெருந்தன்மையாக அவரே கொடுத்திருப்பார்.

ஆனால் அண்ணனுடைய மனைவி, அந்தப் பெண்பிள்ளை சுத்த மோசம். பணம் பணம் என்று பறக்கிறவள். அவளிடம் வேறு மாதிரிதான் வாங்கவேண்டும்!

“வருமான வரிக்காரனுக ரொம்பத் தொல்லை கொடுக்கிறாங்கள், அண்ணி. மண்ணும் சத்துக் கெட்டு விளைச்சல் சரியாக இல்லை. இந்த ஒத்திப் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டீர்கள் என்றால், கொஞ்சம் பணம் கடனாக வாங்கி, உரமும் மருந்தும் அடித்து, அண்ணன் இருந்தபோது வந்த மாதிரி வருமானத்தைப் பலமடங்கு பெருக்கி விடுவேன்.” என்றார் பாரிஜாதத்திடம், இந்திரேசன்.

கணக்குப் பார்ப்பதில் பாரிஜாதம் இப்படி அப்படித்தான் என்றாலும், கையெழுத்துப் போடுவதில் மகா கஞ்சி.

“ஐய்யோ! நான் போட்டால் செல்லாதே தம்பி! வாரிசு எங்கள் மகன்தானே? அவன் வந்ததும் போடச் சொல்லி வாங்கி வைக்கிறேன். பத்திரத்தைக் கொடுத்துவிட்டுப் போங்கள்.” எனச் சொல்லிப் பத்திரத்தை வாங்கி பத்திரப்படுத்திவிட்டு அவரை அனுப்பினாள்.

அந்த முத்திரைக் காகிதங்களை விட்டுவிட்டுப் போக, இந்திரேசனுக்கு மனமே வரவில்லை. ஆனாலும், அந்தச் சமயத்தில் பாரிஜாதத்திடம் பத்திரத்தைத் தர மாட்டேன் என்பதும் நன்றாக இல்லை. என்னவோ என்று சந்தேகம் வந்துவிடும்.

சரி, இந்தப் பாரிஜாதத்துடைய மகன். தாயைப் போலத்தானே இருப்பான்? தந்தை இறந்து பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன. இன்று வரை எஸ்டேட் பக்கம் அவன் வந்ததில்லை. பத்திரத்தை மட்டும் படித்துக் கிழித்துவிடவா போகிறான்?

அப்படியே படித்தான் என்றாலும், அப்போதும் சமாளிக்க அவருக்கு வழியிருந்தது.

கூடவே, இத்தனை காலம் அவருக்கு உதவிவந்த நல்லகாலம், இப்போது மட்டும் மாறாகவா போய்விடும்?

ஒன்றுவிட்ட அண்ணனுக்கு உதவியாளாக இருந்த காலம் தொட்டு, இருபது ஆண்டுகளாகக் கை கொடுத்திருந்த நல்லகாலம்! அசட்டு தைரியத்தோடு அவர் அங்கிருந்து சென்றார்.

வெறும் அசட்டு தைரியம் என்றும் சொல்லிவிட முடியாது.

பண்ணையில் எல்லோரும் அவருடைய ஆட்கள்! அவர் இல்லாமல் அந்த எஸ்டேட்டை ஒரு நாலு நாள் இந்தப் பொடியன் மனோனோரம்யனால் நடத்த முடியுமா? சொப்பனத்தில் கூட முடியாது!

அப்படித்தான் அவர் நினைத்தார். ஆனால், அவரால்தான், அதன் பிறகு “மனோகரம்” எஸ்டேட்டுக்குள் காலடி எடுத்து வைக்க முடியாமல் போயிற்று.

அவர் வருமுன் பத்திரத்தைப் படித்துவிட்ட மனோரம்யனின் முதல் கேள்வி, ஒத்திப் பத்திரம் எப்படி விற்பனைப் பத்திரமாக மாறியது என்பது.

அதற்கு சுந்தரேசன் பதில் வைத்திருந்தார். “இப்போதெல்லாம் ஒத்தி என்றால் யாரும் நம்புவது இல்லை. விற்பனைப் பத்திரமாகத்தான் எழுதுவது. ஆனால் சொன்ன சொல் மாற மாட்டார்கள். பணத்தைத் திருப்பிக் கொடுக்கும்போது, பத்திரத்தை நம் பெயரில் திருப்பி எழுதித் தந்து விடுவார்கள்.” என்று இங்குள்ள நடைமுறை பற்றி விளக்கம் கொடுத்தார் அவர்.

“அதாவது உங்கள் பெயருக்கு. ஏனென்றால் கடனுக்கு நீங்கள் பொறுப்பேற்பதால், கடனைக் கட்டி முடித்ததும், உங்கள் பெயரில்தானே திருப்பித் தந்தாக வேண்டும்?” என்று கேட்டு விஷயத்தை நன்கு தெளிவுபடுத்திக் கொண்டான் மனோரம்யன்.

“நீங்கள் மறுபடியும் என் பேரில் பத்திரத்தைப் பதிவு செய்து என்னிடம் தந்துவிடுவீர்கள். அப்படித்தானே?”

“ஆமாம் ,ஆமாம்! ரொம்பச் சரியாகச் சொன்னாய்! படித்தவன் என்பது நன்றாகத் தெரிகிறது!” என்றார் சித்தப்பன், காதுவரை நீண்ட வாயால்.

“இன்னும் நன்றாகக் கூட என் படிப்பு பற்றி விளக்கிக் காட்டுவேன். ஆனால் அதற்கு இப்போது அவசியமில்லை. ஏன் சித்தப்பா, இதற்குப் பதில் சொல்லுங்கள், இப்போது எஸ்டேட்டை நாங்கள் உங்கள் பேரில் எழுதிக்கொடுத்து, அதை ஒத்தி வைத்து அதாவது இப்போதைய வழக்கம்போல ஒத்தி எடுக்கிற ஆளுக்கு நீங்கள் விற்பனைப் பத்திரம் எழுதிக் கொடுத்து, அப்புறம் நாம் பணத்தைத்

திருப்பும்போது, மறுபடியும் ஒத்தி எடுத்தவர், உங்கள் பெயருக்கு விற்பனைப் பத்திரம் எழுதி . . .அத்தோடும் முடியாதே! கடைசியாக நீங்கள் என் பெயருக்கு எழுதிக் கொடுத்த பிறகுதானே வேலை முடியும்? அதுவரை . ஊகூம். பண்ணைக்குள் ஒரு சிறு கிளையைக் கூட நான் அசைக்க இயலாது. சரியாகத்தான் சொல்கிறேன் இல்லையா?”

“அது . . .வேறு வழியில்லையேப்பா. குருவி தலையில் பனங்காயை வைத்த மாதிரி, பல லட்சக் கணக்கில் கடனை உன் மேல் எப்படியப்பா சுமத்துவது? இந்த அன்புச் சித்தப்பன் மனது தாங்காதும்மா! அதற்காகத்தான் இந்த ஏற்பாடு!” என்று இல்லாத கண்ணீரைச் சுண்டி விட்டுக் கொண்டார் இந்திரேசன்.

கண்ணீர் வராதபோதே சுண்டி விடுகிறாரே என்பது தவிர, அவர் சொன்னது மெய்தானோ என்றும் பாரிஜாதத்துக்குத் தோன்றியது.

எழுபது எண்பது லட்சம் கடனை மகன் எப்படிக் கட்டுவான்? பேசாமல் சித்தப்பன் கடனை ஏற்றுக் கொண்டால், பண்ணை நன்றாக நடந்து பணம் கொட்டும். மகன் வழக்கம் போலக் கவலை இல்லாமல் சுற்றலாமே என்று எண்ணினாள் தாயார்.

அவளது பணக்கணக்கு அவ்வளவுதான்.

ஆனால், மகன் வேறு மாதிரி இருந்தான். சொத்தை அடியோடு முழுங்கச் சித்தப்பன் திட்டம் போடுவதை உணர்ந்து, இனி நிர்வாகத்தைத்தானே பார்க்கப் போவதாக அறிவித்தான்.

பட்டப் படிப்பு முடிந்த நிலைதான். மேலே படிக்க எண்ணியிருந்தான். ஆனால் அடித்தளமே ஆட்டம் கண்டிருப்பதை உணர்ந்துவிட்டதால், மேல் படிப்பைக் கைவிட்டுப் பண்ணையில் போய் அமர்ந்தான்.

சித்தப்பனின் சுரண்டலைத் தாய்க்கும் ஒருவாறு உணர்த்தினான். வற்றாத ஜீவநதியாகப் பண்ணை இனி அள்ளிக் கொடுக்காது என்பது அவளுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது.

அன்றுவரை வாழ்ந்த தாம்தூம் வாழ்க்கைக்குத் தேவையான பணம் வராது என்ற நிலையில், நிலையிறங்கிச் சென்னையில் வாழ விருப்பம் இல்லாமல் அவளும் மகனோடு பண்ணைக்கே சென்றுவிட்டாள்.

ஆனால் இந்திரேசன் சாதாரணத்தில் விலகிப் போகவில்லை. என்னென்ன வழியில் முடியுமோ, அத்தனை வகையிலும் தொல்லை கொடுத்தார். சும்மாவே மனோரம்யனுக்குப் பண்ணை நிர்வாகம் தெரியாத நிலைமை வேறு.

ஆனால் அப்போதுதான் புதிதாகப் பொறுப்பேற்க வந்திருக்கும் பையன் எப்படிச் செய்கிறானோ, ஏதேனும் உதவி தேவையா என்று பொதுவாக விசாரித்துப் போக திவ்யப்பிகாசம் அங்கே, அவனது இடம் “மனோகர”த்துக்குச் சென்றார்.

அவன் இந்தரேசனோடு சென்ற இடம்வரை கேட்டறிந்து போனவர், இந்திரேசன் மட்டும் தூரத்தே செல்வதைப் பார்த்துவிட்டு, மற்றவனைப் பார்க்க வேலை நடக்கும் இடத்துக்குப் போனார்.

வெளியே அரைகுறையாக நாதாங்கி போடப்பட்டிருந்தது மனதை உறுத்தத் திறந்து உள்ளே சென்றால் ஏலக்காய் புழுக்கும் சூட்டின் நடுவே தோல் கன்றிப்போய்ருந்த மனோரம்யன் ஒரு விறைப்பில் நின்றான். உயிர் போகும் சூடில்லை. ஆனால் மனதில் தென்பிழக்கச் செய்யும் மிரட்டல் வேலை! அதற்கு இடம் தராமல் பிடிவாதத்துடன் நின்ற இளைஞன்!

தந்தையோடு பிற பண்ணை வேலைகளையும் எடுத்துச் செய்து படிப்படியாக முன்னுக்கு வந்த பெரியவருக்கு நிலைமை இன்னதென்று, தெள்ளெனத் தெரிந்து போயிற்று.

அந்தப் பிரச்சினை மிகுந்த நிலையிலும் பிடிவாதமாகத் தொழிலை நடத்த முயன்ற இளைஞனின் துணிவும் உழைப்பும், அவன் பக்கம் இருந்த நியாயமும் அவருக்குப் பிடித்துப் போக மனோரம்யனுக்கு முழு உதவி செய்தார்.

பெரிய கையாக அவர் துணை நிற்கிறார் என்றதுமே அவனது பல பிரச்சினைகள் தாமாக விலகின. கடைசியில் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று இந்திரேசன்தான் அங்கிருந்து ஓட நேர்ந்தது.

தொடர்ந்த பன்னிரண்டு ஆண்டுகளாக அவனது பண்ணையைப் போலவே, திவ்யப்பிரகாசத்தோடு அவனுக்குப் பழக்கமும் தழைத்து வளர்ந்தது.

மனோரம்யனும் ஒரு வழிப் பாதையாக உதவிகளை மட்டும் ஏற்றுக்கொண்டு சும்மா இருக்கிறவன் அல்ல. தனியராக வாழ்ந்த அவருக்கு, வலது கையாய் அவரது தேவை பார்த்து, அவருக்குப் பல் வேறு வகையில் உதவலானான்.

இருவருக்கும் இடையே வளர்ந்த இந்த நெருக்கம் பாரிஜாதத்தின் மனதில் வேறு பல ஆசைகளைக் கொழுந்து விட்டு எரியச் செய்யலாயிற்று! இனி நடவாது என்று ஏக்கத்துடன் ஒதுக்கி

வைத்திருந்த பழைய கனவுகள் தலை தூக்கின!

சும்மா என்றால் கண்கொத்திப் பாம்பு போல அவன் எங்கே யாருடன் என்ன பேசினான் என்பதை அறிய, இடைவிடாது கேள்விக் கணை தொடுக்கும் பாரிஜாதம் சுந்தரவனத்துக்குப் போயிருந்தேன் என்று மனோரம்யன் சொன்னால் மேலே குடைந்து கேட்பது இல்லை.

“பாவம் பெரியவர், மனோப் பையா. குழந்தை குட்டி, குடும்பம் என்று யாருமே இல்லை. நீயாவது அடிக்கடி போய்ப் பார்த்து, வேண்டிய உதவிகளைச் செய்துவிட்டு வா.” என்பாள்.

ஏதாவது நல்ல சமையல் செய்தால், “பாவம். அந்த அண்ணனுக்கு வேறு யார் செய்து தருவார்கள்? கொடுத்துவிட்டு வா” என்று கொடுத்தனுப்புவாள்.

தடுத்துப் பேசிக் குட்டை குழப்பக் கூடிய தாயாரே அனுசரணையாகப் பேசவும், பெரியவரைச் சந்தித்துச் சற்று நேரம் உரையாடுவதைத் தன் தினசரி வழக்கமாகவே மனோரம்யன் வைத்துக் கொண்டான்.

ஆனால், தாயின் மனதில் ஒளிந்திருந்த எண்ணம் மட்டும் தெரிந்திருந்தால், தார்க்குச்சியால் குத்தி விரட்டினால்கூட, அவன் சுந்தரவனத்துப் பக்கம் எட்டிப் பார்த்திருக்க மாட்டான்.

ஆமாம். அவனுடைய தாயார் பாரிஜாதத்துக்கு, அடங்காத ஆசை ஒன்று துளிர் விட்டுக் கப்பும் கிளையுமாக வேகமாக வளர்ந்து கொண்டிருந்தது. பழங்காலத்து ஜமீன்தாரிணிகளைப் போல, அளவற்ற சொத்துக்காரியாகி, மற்றவர் முன்னிலையில் கர்வத்துடன் உலா வரவேண்டும். இங்குள்ள பண்ணைக் குடும்பப் பெண்கள் சங்கத் தலைவியாக வேண்டும்.

சொன்னாலும் சொல்லாவிட்டாலும், அதன்பின் அவள் முடிசூடா மகாராணிதானே?

அதற்கான முதல்படிதான் திவ்யப்பிரகாசத்தை அடிக்கடி போய்ப் பார்க்குமாறு மகனைத் தூண்டியது. பிள்ளை குட்டி இல்லாத மனிதன். போகிற காலத்தில் சொத்தைத் தலைமேல் வைத்துத் தூக்கிக் கொண்டா போகப் போகிறான்?

எல்லாம் சரியானபடி நடந்தால், திவ்யப்பிரகாசத்தின் பெரீய்யய பண்ணை, சீக்கிரமே மனோவுக்கு வந்து சேரும்., சேர்ந்துதான் ஆக வேண்டும் என்பது அவளது உறுதியான கருத்து!

அப்படியே இன்னும் பெரிய சொத்துக்காரியாக ஆவதற்கு, அவள்

மேலும் சில விதங்களிலும் காய் நகர்த்திக் கொண்டிருந்தாள்.

செல்லுமிடம் எல்லாம் திருமணமாகாத இளைஞனான மனோரம்யனின் அருமை பெருமைகளைப் பற்றியும், சொத்து வளங்களைப் பற்றியும் பறைசாற்றிக் கொண்டிருந்தாள்.

அதிலும் பெண் வாரிசுகளை உடையவர்கள் மத்தியில் அடிக்கடி இது நடக்கும். ஒருவாறு அதற்கு அதற்கு ஒரு நல்ல பலனும் கிட்டியிருந்தது.

கிட்டத்தட்ட எல்லாமே பாரிஜாதம் விரும்பிய விதமாகவே நடந்து கொண்டிருக்க அனைத்திலும் நல்ல முடிவுகளை அவள் வெகு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டும் இருந்தாள்.

முதன்மையானது மகனிடமிருந்து.

இப்படி ஒரு சொத்துக்காரப் பெண்ணைப் பேசி முடித்துவிட்டேன் என்று மகனிடம் நேரடியாகக் கூற அவளுக்குத் தைரியம் இருக்கவில்லை.

அவளுடைய பிள்ளை ஒரு மாதிரிப் பிடிவாதக்காரன். பெரும் தொல்லைகளுக்கு இடையிலும், விடாப்பிடியாக இந்தப் பண்ணையை நடத்தி வெற்றி கண்டதே அதற்குச் சான்று.

அதே போல, நயிச்சியமாகப் பேசியே திவ்யப்பிரகாசத்திற்குப் பதில் உதவிகள் செய்யாமலே, அவர் மூலம் பலன்களை மட்டுமே அடைந்திருக்கலாம்.

கூடவே, சட்டப்படியாக, அவரது சொத்துக்கு வாரிசாக அவன் எப்போதோ ஆகியிருக்கலாம்.

மறுத்தவன் அவன்தான். இது போன்ற விஷயங்களில் அவசரம் கூடாது என்று ஒரேயடியாகத் தள்ளிப் போட்டுவிட்டான். இன்னும், இழுத்துப் போட்டுக்கொண்டு, அவரது அலைச்சல் வேலைகளைச் செய்கிறவனும் அவன்தான்.

இவ்வளவு எதற்குச் செய்ய வேண்டும் என்பது போலப் பாரிஜாதம் பேசினாலே அவனுக்குப் பிடிக்காது. அது போன்ற பேச்சின் பலன் எதிர்மறையாகவே மாறிவிடும்.

எப்படியும் பெரியவரின் சொத்து மகனது ஆகிவிடும் என்பதில் அவளுக்குச் சந்தேகம் கிடையாது. பெரியவருக்கு மனோவை விட்டால் வேறே ஆள் கிடையாது. அவர் மனதில் அந்த எண்ணம் தோன்றியும் விட்டது. என்றோ ஒரு நாள் வரும்! வந்தே தீரும்!

ஆனால், மகன் குணம் தெரிந்ததாலேயே, வினோதினி விஷயத்திலும் பாரிஜாதம் அவசரப்படவில்லை. தானாக நடப்பது போல, அவளை ஜாடை மாடையாகவே மகன் கண்முன் படுமாறு செய்து கொண்டிருந்தாள்.

அவனும், பெண்களைக் கண்டதும் வழக்கம்போல விலகிப் போவது குறைந்து, அவளிடம் நின்று பேசத் தொடங்கி இருந்தான்.

அழகான பெண். அதை அறிந்தவளும் கூட. தகப்பனிடம் தொழில் பற்றியும் அறிந்து வைத்திருந்தாள். அவள் மனதிலும் ஒரு கணக்கு இருக்கத்தான் செய்யும்.

ஏதாவது சாக்கு சொல்லி அவள் இந்த வீட்டுக்கு வருவதும், வரும்போது அவள் செய்யும் அலங்காரமுமே அவள் மனதைக் காட்டவில்லையா? இனி வினோதினி பார்த்துக் கொள்வாள் என்று பாரிஜாதம் நிம்மதி அடைந்திருந்த நேரம்.

இந்த நிலையில்தான், பேரலை ஒன்று வந்து எல்லாவற்றையும் புரட்டிப் போட்டது போல, திவ்யப்பிரகாசத்துக்கு ஒரு தம்பியும் அவர்களது குடும்பமும் இந்தப் பண்ணைப் பிரதேசத்தின் உள்ளே வந்து விழுந்தார்கள்.

அந்தத் தம்பியாவது எங்கேனும் உயிரோடேயே இருந்திருக்கலாம். மகாப்பாவி! அவன் செத்து வைத்தோடு, அவனுடைய குடும்பத்தையும் இங்கே அனுப்பிவிட்டானே!

ஓர் இருபத்தியிரண்டு வயது மகள் வேறு!

தாய் அழகி என்று ஊர் வம்பு சொல்லிற்று. மகளும் அப்படியே இருக்கலாம்.

என்ன பாதகம்! இப்போது இரண்டு வகையிலும் அவளது திட்டங்கள் தோற்றுப் போகக் கூடுமே.

தன் சொத்துக்கு வாரிசாகத் தம்பி மக்களையே திவ்யப்பிரகாசம் ஏற்று, அவர்களுக்கே கொடுத்தும் விடுவாரோ என்று எண்ணும்போதே, பாரிஜாதத்துக்குப் பகீர் என்றது.

ரத்த பாசம் அவரை இளகச் செய்துவிட்டால்?

இன்னும், அந்தப் பெண்ணும் அவளைப் பெற்றவள் செய்த மாதிரி நடந்து, இங்கே பாரிஜாதத்திடமிருந்து அவளுடைய மகனையே பிரித்துக் கொண்டு போய்விட்டால்?

மாதக் கணக்கில் திட்டமிட்டு, அவள் செய்வதாக வெளியே

தெரியாதபடி, முக்கியமாக மகனுக்குத் தெரியாதபடி கவனத்துடன் காய் நகர்த்தியதெல்லாம் வீணாகிவிடுமோ என்று நினைக்கும்போதே பாரிஜாதத்தின் மனம் கலங்கித் துடித்தது.

தப்பாக நடக்கக் கூடாதே! தடுத்தாக வேண்டுமே! ஆனால் எப்படி?

தீவிரமாக யோசனையில் ஆழ்ந்தாள் மனோரம்யனைப் பெற்றவள்!

ஆழ்ந்து சிந்தித்ததன் பயனாக, திரவியத்துடைய குடும்பத்தோடு மனோரம்யன் பெரியவர் திவ்யப்பரகாசத்தின் வீட்டை அடைந்தபோது, அவர்களுக்கு முன்னதாக புதிய குடும்பத்தை வரவேற்பதற்காகப் பாரிஜாதம் அங்கே இருந்தாள்.

மலர்ந்த முகத்துடன் அவர்களை வரவேற்கவும் செய்தாள்.

வரவேற்றதோடு நிறுத்தாமல், அவர்களது வரவைக் கொண்டாடுவதற்காக மறுநாள் தன் வீட்டில் வைக்கப்படும் விருந்தில் கலந்து கொள்ளும்படி அழைப்பும் விடுத்தாள்.

தாயின் இந்த அவதாரம் புரியாமல் திகைத்துப்போன மனோரம்யனால், எதையும் தடுக்க இயலவில்லை!

# அத்தியாயம் - 4

திவ்யப்பிரகாசத்துடைய தம்பி குடும்பத்தை நடத்த வேண்டிய முறை பற்றி, மனோரம்யனும் பெரியவருமாகத் திட்டமிட்ட விதமே வேறு!

ஆனால், இது தெரியாத பாரிஜாதத்தின் மூளை வேலை செய்த விதம் வேறு.

பெரியவரே தம்பியையும் தம்பி மனைவியையும் மன்னித்து ஏற்றுக்கொண்ட பிறகு, சூழ இருந்த மற்ற குடும்பங்கள் அவர்களை வெறுப்பதற்கில்லை. அவள் மட்டும் வெறுப்பைக் காட்டி கெட்டவளாகிவிடக் கூடாது.

வரவேற்பதில் முந்திக் கொள்வதாக க் காட்டிக் கொள்ள எண்ணிப் பெரியவரின் வீட்டுக்கே வந்து பாரிஜாதம் காத்திருந்தாள்.

அதே போல, வீட்டின் முன் ஜீப் நின்றதுமே முன்னே சென்று வரவேற்று, விருந்துண்ண வீட்டுக்கும் அழைத்தாள்.

அதற்கு, அவளுக்குச் சில காரணங்கள் இருந்தன.

முதலாவது, திவ்யப்பிரகாசத்தின் நல்ல அபிப்பிராயம். அவருடைய உறவுகளைத் தங்களவர்களாகக் காட்டிக்கொள்ள எண்ணினாள்.

மகன் அவர்களைக் கூட்டி வந்தால், அன்னை விருந்துக்கு அழைக்கிறாள். அதாவது, தாயும் மகனும் ஏற்கனவே திவ்யப்பிரகாசத்துடைய குடும்பத்தின் அங்கமாகிவிட்டவர்கள்., அவருடைய உறவுகளையும் தங்கள் உறவாக ஏற்றுக் கொண்டார்கள் என்று பெரியவர் எண்ண வேண்டும்.

அடுத்தது, மனோரம்யன் அனேகமாகத் தினமுமே, பெரியவரைப் பார்க்கப் போகிறவன். இப்போது அந்தப் புதியவளையும் பார்ப்பான். பார்க்கப் பார்க்க மனம் அங்கே சாய்ந்துவிடக் கூடாது.

அது நடக்க வேண்டும் என்றால், வருகிறவளை விட அழகான ஒருத்தியை அருகிலே நிறுத்தி ஒத்துப் பார்க்க வைக்க வேண்டும். ஒரு கோட்டைச் சின்னதாகக் காட்டுவதற்கு, பக்கத்திலேயே பெரிய கோடு வரைவது போல.

அதனால் முடிந்தவரை சீக்கிரமாக, இளம்பெண்கள் இருவரையுமே அவளது வீட்டில் மகன் ஒன்றாகப் பார்க்க, இந்த விருந்து வாய்ப்புத் தரும்.

விருந்துகளுக்கு வினோதினி எப்படி வருவாள் என்பது, பாரிஜாதத்துக்குத் தெரியும்.  அழகுபடுத்திக் கொள்வதில் யாரும் அவளை மிஞ்ச முடியாது.

அவளோடு போட்டி போடுகிறவள் என்றால் அந்த வினோதினியுடைய தாயைத்தான் சொல்லவேண்டும். என்னமோ இன்னமும் இருபதுகளில் இருப்பது போல மினுக்கிக் கொள்வாள்! காசு இருக்கிற திமிர்! ஆனால், அவள் எப்படியோ போகட்டும்.

இந்தப் பெண்தான், பெயர் என்னவோ திவியோ கிவியோ என்றானே, அவள்தான் இப்போது முக்கியம். எப்படியும் அவளுக்குப் பயண அலுப்பு இருக்கும். தந்தையை இழந்த துயரம் இருக்கும். பழகியவர்களைப் பிரிந்து வந்த வேதனை, குடியைக் கிளப்பிக்கொண்டு வந்த களைப்பு எல்லாத் துன்பங்களையும் மொத்தமாக அனுபவித்துக் கொண்டிருப்பாள்.

சொல்லப் போனால், இந்த நிலைமையில் இவள் அதிக அலங்காரம் செய்தால் கூட அவ்வளவு நன்றாக இராது. பார்க்கிறவர்களுக்குத் தப்பாகவே தோன்றும். அம்மாக்காரிக்கு இன்னும் மோசம்.

அவர்களுக்காகத் தெரியாவிட்டாலும், உதவிகரமாக ஆலோசனை சொல்லுகிற மாதிரி, இதை லேசாகக் காதில் போட்டால் போகிறது!

எப்படியும் மனோரம்யனின் பார்வையில், வினோதினி பக்கத்தில் இந்தப் பெண் மங்கித் தெரிய வேண்டும் என்பதே உலக மகா முக்கியம்.

அது சீக்கிரமாக நடப்பதும் முக்கியமே. அலுப்பு, வருத்தம் எல்லாம் மாறி, அந்தப் பெண் இயல்புக்கு வருமுன், அந்த ஒத்துநோக்கல் நடந்து முடிந்தாக வேண்டும்.

அதைச் சாதிப்பதற்காகக் கொஞ்சம் செலவு செய்யத் தயங்கக் கூடாது. அதைக் கூட, அவருடைய் தம்பி குடும்பத்துகாகச் செய்தது என்று அவர் காது கேட்க இரண்டு தடவை சொன்னால் பெரியவரே அனேகமாகக் கொடுத்து விடுவார்!

இவ்வளவும் யோசித்துத் திட்டமிட்டுத்தான், திவ்யப்பிரகாசத்துடைய தம்பி குடும்பத்துக்கு வரவேற்பு விருந்து கொடுக்க வேண்டும் என்று பாரிஜாதம் முடிவெடுத்ததே.

கூடவே ஒரே குடும்பம் போலப் பெரியவருக்கும் மகனுக்கும் உள்ள நெருக்கத்தையும் பறைசாற்றலாம்.

அந்தக்குடும்பத்தின் வருகைக்காகக் காத்திருந்த சமயத்தில்,

பாரிஜாதம் விருந்து பற்றி திவ்யப்பிரகாசத்திடம் தெரிவித்தாள்.

சற்று யோசித்துவிட்டு, “மனோ என்ன சொன்னான்?” என்று கேட்டார் பெரியவர்.

“உங்களை அவன் வேறாக நினைத்தால் அல்லவா மறுப்பதற்கு? அங்கிளுக்காக உயிரையும் கொடுப்பேன் என்பானே! ஒரு நாள் உங்களைப் பாராவிட்டால் அவனுக்குத் தூக்கம் வராமல் எவ்வளவு கஷ்டப்படுவான் தெரியுமா? . .”

கொஞ்சம் மிகைப்படுத்திப் பேசுகிறாள் என்று தெரிந்தாலும் முகம் மலர்வதைத் திவ்யப்பிரகாசத்தால் அடக்க முடியவில்லை.

மனோரம்யனிடம் அவருக்கும் மிகுந்த அன்பு உண்டு. அவனது தொழில் நடத்தும் திறன் பார்த்து, பிரமிப்பும் ஏற்பட்டிருந்தது.

அவன் தொழில் பயின்றது அவரிடம்தான். ஆனால் அவன் பேச்சைக் கேட்டதில் அவருக்கே ஒரு பெரிய நஷ்டம் தவிர்க்கப் பட்டிருந்தது. அந்த அளவு கெட்டிக்காரனும் கூட!

லேசாக முறுவலித்து, “மனோ அருமையான பையன் தங்கச்சி.” என்றார் அவர்.

வசிஷ்டர் வாயால் பிரம்ம ரிஷி! பெரியவர் யாரையும் லேசில் புகழ்ந்து விடுகிறவர் அல்ல!

“கொக்குக்கு ஒன்றே மதி”யாக பாரிஜாதம் மேலே பேசினாள். “ஆமாங்க அண்ணன். ஆனால், இனிமேல் என்ன ஆகப் போகிறதோ?” என்று கவலை காட்டினாள் அவள்.

“நீ பேசுவது புரியவில்லை. விஷயத்தைத் தெளிவாகச் சொல்லு.” என்றார் அவர்.

இதுதான் இவரிடம். “பில்ட் அப்” பண்ணவே விட மாட்டார்!

எரிச்சலைக் காட்டாமல் சமாளித்து, “உங்களுக்குத் தெரியாததா, அண்ணன்? இவ்வளவு நாள் நீங்கள் தனியாக இருந்தீர்கள். பத்துக் கிலோமீட்டரைப் பெரிதாகப் பாராமல் அவனும் நினைத்த நேரம் வந்தான். எந்த நேரமானாலும் உட்கார்ந்து பேசிவிட்டே வீட்டுக்கு வருவான். ஆனால் இனிமேல் அப்படி முடியுமா . . “ என்றவளை இடையிட்டு, “அதைத்தான் என்னவென்று கேட்டேன். “என்றார் அவர் எரிச்சலாகவே.

“என்னங்க அண்ணன் இப்படிக் கேட்கிறீங்க? உங்கள் தம்பி மகள் சரியான வயசுப் பொண்ணு வருகிறாளில்ல? இனியும், இவன் நினைத்த

நேரம் வந்து, நினைத்த நேரம் போக முடியுமா? பார்க்கிறவர்கள் தப்பாகப் பேசுவார்களே!" என்றாள் அவள் வருந்தும் குரலில்.

ஒரு கணம் தயங்கினாலும், "பத்துப் பனிரண்டு ஆண்டு முன்புவரை சென்னை நகரத்தில் இருந்தவள். இப்படிப் பட்டிக்காடு மாதிரிப் பேசுகிறாயேம்மா. இந்தக் காலத்தில், அதுவும் படிப்பறிவுள்ள நம் பண்ணைக் குடும்பங்களில் இதை ஒரு விஷயமாக யாரும் எடுத்துக் கொள்வதே கிடையாது. மனோவும் அப்படித்தான். அதனால் கவலை இல்லாமல் இரு." என்று அழுத்தத்துடன் கூறினார் அவர்.

"ஹிஹி. நீங்கள் சொன்னால் சரி. ஆனால் பையனைப் பெற்றவள் ஆயிற்றே. . . "

"பெண்ணைப் பெற்றவர்கள்தான் இப்படியெல்லாம் பேத்துவார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அதுவும் மனோவைப் போலப் பையனைப் பெற்றவள் பேசுவது . . .சேச்சே! " என்றவர் ஹாலில் கிடந்த பழையகால ரோமன் எண் சுவர்க் கடிகாரத்தைத் திரும்பிப் பார்த்தார்.

"நேரமாகிவிட்டதே!" என்று அவர் கூறியது பாரிஜாதத்தின் வயிற்றில் புளியைக் கரைத்தது. தம்பி மக்களைப் பார்ப்பதற்கு இவ்வளவு துடிப்பா என்று உள்ளூரப் புகைந்தாள்.

ஆனால் தொடர்ந்து, "எவ்வளவு நேரம் மனோ வண்டியை ஓட்டுவான்? டிரைவரைக் கூட்டிப் போ என்றாலும் கேட்கவில்லை." என்று சலித்து, மறுபடியும் அவளது மனதைக் குளிர வைத்தார்.

பெரியவரின் கவலை, அவளுடைய மகனைப் பற்றி மட்டுமே!

கடனே என்றுதான் தம்பி குடும்பத்துக்கு அடைக்கலம் கொடுக்கிறார். உடன் பிறந்தவனுக்காக மனம் உருகியதால் அல்ல. எளிதாக விரட்டிவிடலாம் . . .

விருந்து பற்றி இன்னும் சொல்லி முடிக்கவில்லையே! மனோ வருமுன் அந்த வேலையை முடித்துவிடுவது நல்லது.

இந்த மனிதர் ஒப்புதல் அளிக்குமுன் அவன் வந்து இப்போது வேண்டாம் என்றுவிட்டால் எல்லாம் தொலைந்தது.

ஒன்று சொன்னால் உடனே சரியென்று தலையை உருட்டாத ஆண்களால் எவ்வளவு தொல்லையாக இருக்கிறது என்று உள்ளூர நொந்துகொண்டே பாரிஜாதம் மறுபடி தொடங்கினாள்!

"நம் "பூரணி" குடும்பத்திடம்தான் உணவுக்குச்

சொல்லியிருக்கிறேன். நாம் மட்டுமே என்றால் நானே செய்வேன். இன்னும் அதிகச் சுவையாகவும் இருக்கும். ஆனால், தம்பி குடும்பம் வருவது மற்றவர்களுக்கும் கொஞ்சம் தெரிய வேணும் இல்லையா? நாம் அடிக்கடி சந்திக்கும் நாலைந்து குடும்பங்களையும் அழைத்திருக்கிறேன். வார நாள் என்பதால் அதிகம் வர மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அனேகமாக ஓர் இருபது . . இருபத்தைந்து பேர் வரலாம். முப்பது என்று சொன்னால் நாற்பது வரை சமாளிப்பார்கள். ரொம்பச் செலவாகிவிடாது என்று நினைக்கிறேன். . . “ என்று பாரிஜாதம் இழுத்தாள்.

இந்த இடத்தில் நிறுத்தும்போது, உண்மையான பெரிய மனிதர் என்ன செய்ய வேண்டும்? “செலவைப் பற்றி என்னம்மா? என் தம்பி குடும்பத்துக்காகச் செய்வது. நானே கொடுக்கிறேன் என்றுதானே கூறியாக வேண்டும்?

ஆனால் நரைத்த புருவங்களைச் சுருக்கி யோசித்துவிட்டு, “விருந்தாளிகள் எண் கொடுப்பதில் ஒருபோதும் இவ்வளவு குழப்பம் கூடாது, பாரிஜாதம். பஞ்ச பாண்டவர்கள் கட்டில் கால்கள் போல என்று தொடங்கி ஒருவிரலைக் காட்டி முடித்தானாமே ஒரு புத்திசாலி. அது போலக் குழப்புகிறாயே! ஆனால், நம் “பூரணி” காரர்கள் நீக்குப்போக்காக நடப்பவர்கள். அநியாய லாபமும் வைக்க மாட்டார்கள். அதனால் கவலையற்று இரு.” என்று தேறுதல் கூறியதோடு முடித்துவிட்டார்.

அத்தோடு மொபைலை எடுத்து ஒரு தரம் முயற்சி செய்து பார்த்தார்.

“வழியில் டவர் இல்லாத இடத்தில் இருக்கிறான் போல! சற்றுப் பொறுத்து முயற்சி செய்து பார்க்கலாம்.” என்றார் பெரியவர்.

அத்தோடு, அருகில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சஞ்சிகைகளைக் காட்டி, “எதாவது வேணுமானால் எடுத்துப் படிம்மா” என்றுவிட்டு தானும் ஒரு பத்திரிகையை எடுத்துப் படிக்கவும் தொடங்கிவிட்டார்!

இனி இவரிடம் பேசுவது, வெடிச் சத்தத்தின்போது ரகசியம் பேசுவது மாதிரிதான். ஒரு வார்த்தை கூட அவரது காதில் விழாது!

பேசப் பிடிக்கவில்லை என்று காட்டுவதற்காகத்தான் அங்கிள் பத்திரிகையை எடுப்பதே என்று மனோ சொல்லியிருக்கிறான்.

இவரிடம் பழகிப் பழகித்தான் மனோரம்யனுக்கும் பெண்களிடம் பேசிப் பழகப் பிடிப்பதே இல்லை. மற்றபடி என்றைக்கோ வினோதினிக்கும் அவனுக்கும் திருமணமே ஆகியிருக்கும். இப்படி எந்த

நாயோ வருகிறதே என்று மனம் கலங்க நேர்ந்திராது!

உள்ளூரப் பொங்கிப் பொருமினாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல், புன்னகையைப் பூசிக்கொண்டு பாரிஜாதம் உட்கார்ந்திருந்தாள்.

அலுத்துக் களைத்து ஒருவாறு வந்து சேர்ந்தவர்களின் தோற்றமும் அவளுக்கு உவப்பானதாக இருக்கவில்லை.

அம்மா மகள், சின்னப் பையன் மூவருமே தூசு படிந்த சிலைகள் மாதிரி வாடித் தோன்றினாலும், கழுவித் துடைத்தால் பளிச்சென்று ஆகிவிடுவார்களோ என்று பாரிஜாதத்தின் மனம் பதைபதைத்தது.

கஷ்டப்பட்டுத் தன்னை சமாளித்துக்கொண்டு, அறிமுகம் முடிந்ததும் விருந்து விவரம் பற்றி அவர்களிடம் தெரிவித்தாள்.

ஒரு திகைப்புடன் பெரிய விழிகளால் சுற்றிப் பார்த்துவிட்டுத் தாயார் சாந்தமதி அரைகுறைச் சம்மதமாக முணுமுணுத்தாள்.

பெண்தான் வாயாடி போல! “நன்றி ஆன்ட்டி.” என்று முதலில் கூறிவிட்டு, “ஆனால் வீணாக உங்களுக்கு ஏன் சிரமம், ஆன்ட்டி.” என்றாள் அவள் தொடர்ந்து.

ஆனால் பாரிஜாதம்  விரும்பி எதிர்பார்த்த கேள்வி!

பெரிதாக முறுவல் செய்து, “என்னம்மா அப்படிப் பெரீய்ய சிரமம்! எங்க அண்ணாருக்காக நாங்கள் இதைக் கூடச் செய்ய மாட்டோமா, என்ன? பிறகு ஒன்றுக்குள் ஒன்றாக இத்தனை ஆண்டுகள் நாங்கள் பழகியதற்கு அர்த்தமே இல்லாமல் போய்விடுமே. சரியாகச் சொல்வதானால், அண்ணனுக்குப் பெறாத பிள்ளைதானே, எங்கள் மனோ! அந்த அளவு அவர்கள் ஒருவருக்கொருவர் ஒட்டுதல்.” என்று கடகடவென்று சொல்லி முடித்தாள்.

இதற்கு மேல் இந்த உறவுக்குள் வந்துவிடுவாயா என்றாள் மனதுக்குள்.

“ஓ! அதனால்தான் அவ்வளவு தூரம் வந்து எங்களைக் கூட்டி வந்தார் போல. நன்றி மிஸ்டர் மனோர . . ர . .ரம்யன்தானே? “

மனோவுக்குச் சற்றுச் “சுருக்”கென்றது. மெய்யாகவே மறந்திருப்பாளா அல்லது பாவனையா? அவனை யாரும் அப்படி மறப்பதில்லையே! ஒருவேளை வெறுமனே காரோட்டி என்று கருதியிருப்பாளோ?

ஆனால் இந்தப் பெண்ணின் நிலையும் சிக்கலானதுதான். தந்தை

இடத்தில் இருந்து தம்பி, தாயாரைக் கவனிக்க வேண்டும். . அறியாத இடம் . . .நாடே கூட வேறுதான் என்று எண்ணம் ஓடும்போதே, இதென்ன இவளுக்குச் சாதகமாக யோசிக்கிறோம் என்று தன்னிடம் அவன் அதிருப்தியும் கொண்டான்.

திவ்யப்பிரகாசம் வேறு உள்ளூர என்ன பாடு படுகிறாரோ. யார் யார் என்று சொல்லி அந்தப் பெண் அறிமுகப் படுத்திக் கொண்டபோது தலையசைத்த பிறகு ஒரு வார்த்தை கூடப் பேசக் காணோம்.

எனவே, திவியின் கேள்விக்குப் பதிலாக லேசாகத் தலையை மட்டும் அசைப்பதோடு நிறுத்திக் கொண்டான்.

“ஓகே, நன்றி சார். இப்போது . .” என்று பெரியவரிடம் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு, “இப்போது எங்கள் வரவு பெரியப்பாவுக்குத் தொல்லையாகத்தான் இருக்கும்., அதற்காக மறுபடியும் சாரி. ஆனால் நாங்கள் எங்கே தங்குவது என்று சொன்னீர்கள் என்றால் சாமான்களை அங்கே கொண்டு வைத்துவிட்டு, நாங்கள் கொஞ்சம் ஓய்வெடுத்துக்கொள்ள வசதியாக இருக்கும்.” என்றாள் அந்தத் திவி.

மாட்டினாயா என்று உள்ளூர எக்களித்து, “ஆமாமாம் ஓய்வு எடுப்பது அவசியம்தான். ஆடாமல் அலுங்காமல் விமானத்திலும் காரிலுமாக வந்தாலும் இந்தக் காலப் பிள்ளைகள் ஓய்ந்துதான் போகிறார்கள். ராக்கன் கூட்டிப் போவான் போய் ஓய்வெடும்மா.” என்று கரிசனமாகக் கூறினாள் பாரிஜாதம்.

ஒரு கணம் அவளை நேராகப் பார்த்தாள் திவி.

உள்ளே இருப்பதைக் கொக்கி போட்டு இழுப்பது போலப் பாரிஜாதம் உணரும்போதே சாமான்களை எடுத்தவனிடம் திரும்பி, “நீங்கள்தான் ராக்கனா? ரொம்பத் தாங்க்ஸ். அம்மாவைக் கூட்டிக்கொண்டு ராக்கனோடு போ தம்பி. மற்ற சாமான்களோடு நான் இதோ வருகிறேன்.” என்று மற்றவர்களை அனுப்பினாள்.

மெலிந்த புன்னகை புரிந்து, பொதுவான ஒரு தலையசைப்புடன் சாந்தமதி சென்றாள்.

அன்னை கண்ணுக்கு மறைந்ததும், “ஓய்வு எனக்கல்ல ஆன்ட்டி. அப்பாவுக்குப் பிறகு அம்மா உடல்நலம் குன்றியிருந்தார்கள். மனதின் தாக்கம் என்றார் மருத்துவர். முதலில் ரொம்பவும் பாதிப்பாகவே இருந்தது. அதனால் அவர்கள் ஓய்வெடுப்பது அவசியம் என்று கருதினேன். தனக்காக என்றால், அம்மா லேசில் ஒப்ப மாட்டார்கள்.

அதனால்தான் எல்லோருக்காகவும் என்பது போலப் பொதுவாகச் சொன்னேன். இப்போது நானும் . . . “ என்று மீதமிருந்த பொருட்களைச் சேர்த்து எடுக்கலானாள்.

“விட்டுவிடு. “ என்றான் மனோரம்யன் சற்றே அழுத்தமான குரலில். “அதுதான் ராக்கன் எடுத்து வருகிறானே, தேவைப்பட்டால் வேறு பணியாளையும் கூட்டிக் கொள்வான். நீ போய் உன் தாயாரைப் பார்க்கப் போகலாம் திவி . .திவிதானே? பொருட்கள் எல்லாம் தானாக அங்கே வந்து சேரும்.” என்று முடித்தான்.

அதற்குள் பெயர் மறக்குமா? அல்லது அவன் பெயரைக் கேட்டதற்றுப் பதிலடியா?

பின்னதுதான் என்று சின்னவள் சினக்க, ஐயோ கரிசனமா என்று பாரிஜாதம் உள்ளம் பதறினாள்.

அடக்க மாட்டாமல், “அதென்ன திவி கிவி என்று கண்ணரா . . . வந்து என்னமோ மாதிரிப் பெயர்! வேறே நல்ல பெயராக உன் பெற்றோர் உனக்கு வைத்திருக்கக் கூடாதா?” என்றாள் பாரிஜாதம்.

“அது . . “ என்று தயங்கியவள் குரலைத் தணித்து, “என் பெயர் திவ்ய லட்சுமி, ஆன்ட்டி. பெரியப்பா பெயர்தான். அதைச் சொல்லிக் கூப்பிடத் தயங்கி, அம்மாவும் அப்பாவும் “திவி” என்றார்கள். நானும், என் முழுப் பெயரை இங்கே எந்தச் சலுகைக்காகவும் பயன்படுத்தக் கூடாது என்று எண்ணினேன். இப்போது கூட நீங்கள் கேட்டதாலேயே சொன்னேன். ரைட், நான் அம்மாவைப் பார்க்கப் போக வேண்டும். அதனால் இப்போதைக்கு . .” என்றவள், விடை பெறும் விதமாகச் சன்னமாகப் புன்னகைத்துவிட்டு, கைகளில் சில சாமான்களை எடுத்துக் கொண்டே அங்கிருந்து அகன்றாள்.

மகனின் புருவச் சுளிப்பைத் தவறாகப் புரிந்து, “பெரிய வாயாடியாக இருப்பாள் போல! ஒரு கேள்விக்கு லொடலொடவென்று எவ்வளவு பேசுகிறாள்! சொன்ன பேச்சும் கேட்கக் காணோம்! எதற்கும் இவளைக் கொஞ்சம் தூரமாகவே நிறுத்தி வைம்மா.” என்று மகனை எச்சரித்தாள்

இப்போதும் மகனுக்கு எரிச்சல் வந்தது.

இது என்ன எச்சரிக்கை? அப்படி என்ன, அவளோடு கூடவே இருந்து கொஞ்சிக் குலாவவா போகிறான்? அவசியமே இல்லாமல் கண்டபடி எச்சரிப்பது!

கூடவே இந்த விருந்து வேறு! இதை யார் ஏற்பாடு செய்யச்

சொன்னார்கள்?

இந்தப் புது உறவுகள் வருவதால் அங்கிள் சற்று சஞ்சலமுற்று இருப்பதாக வேறு சொல்லியிருக்கிறான்!

ஆனால், எத்தனையோ உதவிகளைச் செய்திருக்கும் அங்கிளுக்கு செய் நன்றியாக எண்ணி அன்னை செய்திருந்தால், அதில் தப்பு காண்பதுதான் தப்பு!

சற்றுக் கனிந்த குரலில், “நீங்கள் வீட்டுக்குப் போங்கள், அம்மா. நான் அங்கிளோடு சற்று நேரம் இருந்துவிட்டு வருகிறேன்.” என்றுரைத்துத் தாயை அனுப்பினான்.

அவளுக்கு மகனை இங்கே விட்டுவிட்டுப் போக மனமே வரவில்லை. அந்த வாயாடிப் பெண் கட்டாயமாக மகனை வலை போட்டுப் பிடித்துவிடுவாள் என்று அவள் நிச்சயமாக நம்பினாள்.

ஆனால் அதை அவனிடம் நேரிடையாகச் சொல்ல முடியாமல், “பெரிய தப்பும்மா. இவர்களை இங்கே வரவிட்டிருக்கவே கூடாது! அண்ணார் எப்படி வாடிப் போனார் பார்! எப்படியாவது சீக்கிரமாக அவர்களை விரட்டிவிடு ! “ என்று வழியனுப்ப வந்தவனிடம் ஆலோசனை கூறினாள்.

அதுதான் எங்கள் திட்டமும் என்று சொல்ல வாயெடுத்துவிட்டு மனோரம்யன் நிறுத்திக் கொண்டான்.

அவனுடைய தாயிடம் நம்பி ஒன்றைச் சொல்லிவிட முடியாது. அதை எங்கே கொண்டு எப்போது குண்டு போடுவாளோ என்று அஞ்சிக்கொண்டே இருக்க நேரும். அத்தோடு, அன்னை இப்படி வெளிப்படையாகப் பேசுவது கூடச் சரியில்லை. நிறுத்த வேண்டும்.

“அம்மா, இது அங்கிளுடைய தம்பியுடைய குடும்பம். அவர்களை வரவிடுவதோ போகச் சொல்வதோ, அவரது விருப்பம். அவரது உரிமை. அது பற்றி நீங்கள் யாரிடமும் பேசாதிருப்பது நல்லது. இதுவே யார் காதில் விழுந்ததோ!” என்றான் எச்சரிக்கும் குரலில். சற்றுப் பயந்து சுற்றிலும் பார்த்த பாரிஜாதம் மேலே பேசாமல் காரில் ஏறிக்கொண்டாள்.

ஆனால், இந்த டிரைவர் கேட்டிருப்பானோ என்று சிறு கலக்கத்துடன் அவளது எண்ணம் ஓடியது. இனிமேல் பக்கம் பார்த்துப் பேச வேண்டும்!

இருவருமாகத் தனியே பேசுகையில் திவ்யப்பிரகாசம் சற்றே வேறு மாதிரிப் பேசினார்.

“தம்பி தம்பி என்கிறார்களே, அந்தப் பிள்ளை முகத்தைப் பார்த்தாயா மனோ? அப்படியே என் தம்பி ஜாடை. இந்த வயதில் அவன் இப்படியேதான் இருப்பான்.” என்றார் குரல் கம்ம.

ஒரே ரத்தம்! டிஎன்ஏ! சதை ஆடத் தொடங்கிவிட்டதா?

இவர்கள் நல்லவர்களாக இருப்பார்கள் என்றால், அதில் தப்பில்லை. ஒரு நல்ல தீர்வாகக் கூட அமையலாம்.

ஆனால் அந்த சாந்தமதியைப் பற்றிப் பெரியவர் இது வரை சொன்ன எதுவும் சரியில்லையே!

தன் சுகம் பேணாமல் தந்தையாய் இருந்து வளர்த்தவரைத் தனி மரமாக நிறுத்திவிட்டல்லவா, தம்பியைப் பிரித்துக்கொண்டு போனாள்! திட்டமிட்டுச் செய்த அநியாயம்!

இப்போதும் அமைதிப் போர்வை போர்த்த இந்த சோக முகம் பொய்யானதில்லை என்று எப்படி நம்புவது?

பொறுத்திருந்து பார்க்க வேண்டும். எல்லோரையும் எப்பபோதும் ஏமாற்ற முடியாது என்று சொல்வார்களே!

மறு நாள் விருந்து பற்றிப் பேச்சு வந்தது.

“எதற்கப்பா பாரிஜாதத்துக்கு இந்த வீண் வேலை? இவர்கள் ஒன்றும் சந்தோஷமாக வரவில்லையே. குடும்பத் தலைவனை இழந்து வந்திருக்கும்போது, இந்த ஆரவாரம் எதற்கு என்று தோன்றுகிறது. அவர்கள் இங்கேயே தங்கவும் நாம் விடப் போவதில்லை. ஆனால் பாரிஜாதத்தின் நோக்கத்திலும் குறை சொல்ல முடியாது. இந்த வீட்டில் ஆளில்லை என்று பாவம், தானே இழுத்துப் போட்டுக்கொண்டு செய்கிறாள். ஆனால் ரொம்ப அலட்டிக்கொள்ள வேண்டாம் என்று சொல்லுப்பா. தேவையில்லை.” என்றார் திவ்யப்பிரகாசம் எங்கோ பார்வையாக.

பெரியவருக்குப் பாதிப்பு நிச்சயமாக இருக்கிறது. ஆனால் அவரது மனநிலை தடுமாறாமல் திடமாகவே இருக்கிறார்.

உள்ளூர மகிழ்ச்சியோடு, அவரது ஆர்கானிக் பழப் பண்ணை ஒன்றிற்கு இயற்கை உரம் அடிப்பது பற்றிச் சற்று நேரம் பேசிவிட்டு மனோரம்யன் பெரியவரிடம் விடை பெற்றுச் சென்றான்.

அங்கிள் உடைந்து போவாரோ என்கிற கவலை இனி அவனுக்குத் தேவையில்லை. அவரே சமாளித்துக் கொள்வார்! தேவைப்படும்போது, அவனது துணையும் இருக்கிறது!

அதனால், தங்கள் வாலைச் சுருட்டிக்கொண்டு, சீக்கிரமே திரும்பிப் போய்விடுவது, அந்தத் திவி குடும்பத்துக்கு நல்லது! ஆனால் திவி இல்லை. திவ்யலட்சுமி!

புரிதலில் பிரச்சினை இல்லாத, சற்றுப் புத்திசாலியான அந்தப் பெண் தாயையும் தம்பியையும் அழைத்துக்கொண்டு விரைவிலேயே அவளது தாய்நாட்டுக்குத் திரும்பிச் சென்று விடுவாள்!

நிம்மதியோடு படுக்கப் போனான் மனோரம்யன்!

ஆனால் மறுநாளே அவன் தன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள நேர்ந்தது.

# அத்தியாயம் - 5

வினோதினிக்கும் அந்த திவிக்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளை வெகு விரைவில் மகன் அறியச் செய்வதே அவளது பெரிய குறிக்கோள் அதே சமயம் திவ்யப்பிரகாசத்தின் சொத்துக்கு வருங்கால வாரிசு தன் மகனே என்று காட்டுவதாகவும் அமையும் என்று பிரமாதமாகத் திட்டமிட்டுத்தான் தங்கள் வீட்டில் அந்த விருந்துக்குப் பாரிஜாதம் ஏற்பாடு செய்தாள்.

இதெல்லாம் யோசித்துத் திட்டமிட்ட வேகத்தில், மறந்துவிட்ட ஒரு முக்கியமான விஷயம் இப்போது அவளுக்கு நினைவு வந்தது.

தன் தம்பியுடைய குடும்பம் வந்திருப்பதாக திவ்யப்பிரகாசம் அல்லவா அறிவிக்க நேரும்! அவரே அறிவிப்பதுதான் பொருத்தமாக இருக்கும்.?

அவர் அப்படி அறிவிக்கும்போது, புதிதாக வந்திருப்பவர்களே அவருடைய வாரிசுகள் என்றும் அவர் அறிமுகப்படுத்துவது போல அல்லவா தோன்றிவிடும்! ஏனெனில் அவர்கள்தானே நேரடியான ரத்த உறவு!

என் தம்பி பிள்ளைகள் என்று அவர் அறிமுகப்படுத்தும்போது, வாரிசுகள் என்று சொல்லாமல் சொல்வது போலத்தானே?

இதைத் தடுப்பதற்கு என்ன வழி என்று அவளுடைய புத்திசாலி மகனிடம், அவளால் கேட்க முடியாது.

ரத்த வாரிசுகள் என்றால் அவர்கள்தானே சொத்துக்கும் வாரிசு என்று ரொம்பவும் சாதாரணமாகச் சொல்லிவிட்டுப் போய் விடுவான். கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதி உள்ள பண்ணை கைவிட்டுப் போவது பற்றி அவன் கவலைப்படவே மாட்டான்.

ஏனெனில், எப்போதுமே அவன் அதைத் தன்னதாக எண்ணியது கிடையாது.

அந்த ஆசையெல்லாம் அவன் தாயுடையதே. சில பல வார்த்தைகளால், திவ்யபிரகாசமும் அதை வளர வைத்தார்.

ஆனால் இப்போது?

யோசித்து, “அந்தக் குடும்பத்தை அறிமுகப்படுத்துவதை அண்ணன் செய்ய வேண்டாம் என்று நினைக்கிறேன், மனோம்மா. பாவம், ஒரே தம்பி செத்தது பற்றிச் சொல்ல அவருக்கு வேதனையாக இருக்கும்

அல்லவா? அதனால் நாமே இதைப் பற்றி எல்லோருக்கும் தெரிவித்து விட்டால் என்ன? " என்று வினவினாள்.

"அதெப்படி முடியும்? . ." என்று தொடங்கியவன் பேச்சில் குறுக்கிட்டு, "ஏன் முடியாது? மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. அண்ணன் உன்னோடு . .உன்னை ஒரு பிள்ளை போல நடத்துவது எல்லோருக்கும் தெரியும். இந்த விருந்தை நம் வீட்டில் நடத்துவதே அதற்குச் சான்று. இந்த அறிவிப்பையும் நாமே . .நீயோ அல்லது நானோ தெரிவிப்பதில் என்ன பெரிய பிரச்சினை என்கிறாய்? பெரியவருக்கு மன வேதனை குறையுமே என்றுதான் நான் பார்க்கிறேன். உனக்கு அது தெரியவில்லையே!" என்றாள் தாய் வருத்தமான குரலில்.

மறுக்க முடியாத வாதம். பிரகாசம் சாரின் வேதனை குறைய என்ன செய்யவும் அவன் தயார்தான்.

"ஆனால் அங்கிளும் இங்கேதானேம்மா இருப்பார். . . "

இவ்வளவு தூரம் வந்துவிட்ட பாரிஜாதத்துக்கு அத்தோடு விஷயத்தை விட்டுவிட மனமில்லை.

"அப்படியானால் ஒன்று செய். டிரைவரோடு ஜீப்பில் அந்தக் குடும்பத்தை முதலில் அனுப்பிவிடு. அண்ணனை ஓர் அரை மணிநேரம் கழித்து நீ கூட்டிவா."

அது அவ்வளவு நான்றாக இருக்காதே என்று மகன் கூறியதை அவள் காதில் வாங்கிக்கொள்ளவே இல்லை. அந்த வகையில் அவர் வருமுன் அறிவிப்பு முடிந்துவிடும். எனவே, அதிகப்படி வலியின்றிப் பெரியவர் தப்புவார் என்ற சொற்களில் அவனும் தணிந்து போனான்.

வீட்டை அலங்கரிப்பது, தனக்கு ஃபேஷியல், அணிமணிகள் எடுத்து வைப்பது என்று பல வேலைகளுக்கு நடுவிலும், "சுந்தரவன"த்துக்கும் பாரிஜாதம் ஒரு தரம் வருகை தந்தாள்.

எப்படி இருக்கிறார்கள் என்று பார்த்துவிட்டுப் போக வந்ததாகச் சொல்லிவிட்டு, "ஆனால் எப்படியும் நன்றாக இருப்பது கடினம். எலிவளையானாலும் தனக்குத் தானே ராஜா என்று இருந்துவிட்டு, மாளிகை என்றாலுமே அடுத்தவர் வீட்டில் ஒண்டி வாழ்வது ரொம்பக் கஷ்டமாகத்தான் இருக்கும். என்ன செய்வது? குடும்பத் தலைவன் இறந்து போனால், குடும்பத்தாருக்கு இந்தக் கதிதான்! எல்லாச் சொத்தும் இருந்தும் நானே எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா?" "என்று அவளே தொடர்ந்து பேசி முடித்தாள்.

இடையே திவ்யா குறுக்கிட முயன்றதை அவள்

கண்டுகொள்வதாகவே இல்லை.

மகளின் கண்ணசைவில் சாந்தமதி எழுந்து, “உங்களுக்கு டீ போட்டு அனுப்புகிறேன்.” என்று எழுந்து சமையல் பகுதிக்குள் சென்றாள்.

“இல்லை வேண்டாம்.” என்று சொல்லியும் கேளாமல் அவள் செல்லவும், “அங்கே அலமாரியில் வட்டமான டின் ஒன்றில் பிஸ்கட் இருக்கும். அதையும் சேர்த்து அனுப்புங்கள்.” என்றாள் பாரிஜாதம்.

“நானும் இந்த விருந்து வேலையாக சாப்பிடக் கொள்ள நேரமில்லாமல் அலைகிறேனா? இப்படி ஏதாவது வாயில் போட்டால்தான் உண்டு.” என்று, யாரும் கேளாமலே காரணமும் சொன்னாள்.

“இவ்வளவு சிரமப் பட்டுக்கொண்டு இந்த ஏற்பாடு பண்ண வேண்டிய அவசியமே இல்லை ஆன்ட்டி. “ என்றாள் திவ்யா.

“அப்படிச் சொல்ல முடியுமா? எப்படியும், அண்ணார் வீட்டு விவகாரம், என் பிள்ளைதானே பார்த்தாக வேண்டும்? ஏதோ அவனுக்கு என்னாலான உதவி!” என்று அவள் சொல்லும் போதே டீயும் பிஸ்கட்டும் வந்துவிட, அவற்றை உள்ளே தள்ளுவதில் முனைந்தாள்.

டீயைக் காலி பண்ணிவிட்டு எழுகையில் சட்டென நினைவு வந்துவிட ,

“பாரும்மா, யோசித்தால், நீயே கண்டுகொள்வாய். அங்கே சிங்கப்பூரில் எப்படியோ? இங்கே நம் சமூகம் வேறே மாதிரி. இது உங்கள் வரவேற்புக்கான விருந்துதான் என்றாலும், உங்கள் வரவைப் பற்றிச் சொல்லும்போது காரணமாக உன் தந்தை சாவைப் பற்றியும் சொல்ல நேரும். அப்பா செத்து ஆதரவு தேடி வந்தீர்கள் எனும்போது, நீங்கள் மூவருமே கொஞ்சம் அடக்கமாக துணிமணி அணிந்தால் பொருத்தமாக இருக்கும். அண்ணன் வீட்டு விருந்தாளிகள். உங்களை யாரும் தப்பாக எண்ணி விடக் கூடாது அல்லவா? அதுதான் உங்களுக்கு உதவியாய் யோசனை சொல்ல வந்தேன். . . நீ . . என்னைத் தப்பாக ஏதும் நினைத்து விடவில்லையே?” என்று சோகமாகக் கேட்டாள்.

ஒரு கூர் பார்வையைச் செலுத்திவிட்டு, “தப்பாகவா? தப்பாக என்ன நினைக்கக் கூடும் என்று எண்ணினீர்கள்?” என்று பார்வை அகலாமலே கேட்டாள் சின்னவள்.

மலைச் சாரலின் அந்த மிதக் குளிரிலும் பாரிஜாதத்துக்கு வியர்த்தது.

கேள்வி மூலமாக அவளே எடுத்துக் கொடுத்ததையே நகாசாக, “அய்யோ, உங்களைப் போய்த் தப்பாக நினைப்பேனா” என்று மறுத்துக் கூறுவதை விடுத்து இவள் கேள்வியல்ல கேட்கிறாள். தன் கள்ள மனதை வெளிப்படையாகச் சொல்லிப் பாரிஜாதம் தன் பேரைத் தானே கெடுத்துக் கொள்வாளா, என்ன?

சமாளித்துக் கையை விரித்தாள் அவள். “எனக்கு என்னம்மா தெரியும்? சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன். வெறும் சாதாரணப் பேச்சைக் கூடத் திரித்துத் தப்புத் தப்பாகப் பரப்புவதில்லையா? அதுதான் முன்னெச்சரிக்கையாக அப்படிச் சொன்னேன்.” என்று பூசி மெழுகி எப்படியோ முடித்துவிட்டு மூச்சு வாங்கினாள்.

“கவலைப் படாதீர்கள் ஆன்ட்டி. புறம் பேசுவது, திரித்துக் கூறுவது, ஊர்வம்பு அளப்பது . .இப்படி எதுவும் கூடாது என்று அப்பா எங்களுக்குக் கற்றுத் தந்திருக்கிறார். அவர் இல்லை என்பதற்காக அவர் கற்றுத் தந்ததைக் காற்றில் பறக்க விட்டுவிட மாட்டோம். இப்போது கூட, உங்களைத் தப்பாக நான் நினைக்கவே இல்லை. உங்கள் வார்த்தைகளை, வெறும் வார்த்தைகளாக அப்படியேதான் எடுத்துக் கொண்டேன். இந்த விருந்தால், உங்களுக்கு நிறைய வேலைகள் என்றீர்களே, அதைப் போய்ப் பாருங்கள். சொன்ன நேரத்துக்கு நாங்கள் தயாராகி வந்து விடுவோம்.” என்று இனிய குரலிலேயே கூறி முடித்தாள் திவி என்கிற அந்தத் திவ்யலட்சுமி.

என்னதான் இனிய குரலில் சொல்லப்பட்டாலும், அவளது வசதிக்காக என்பது போலக் கூறினாலும், சொல்லப்பட்ட வார்த்தைகளின் பொருள் கிளம்பு என்பதுதானே?

யார் வீட்டில் இருந்து, இதை யார் சொல்வது?

ஒரு காலத்தில், இந்தப் பண்ணையும் வீடும் மகனதாகிவிட்ட பிறகு, உள்ளே வரவிடாமல் இந்தக் குடும்பத்தை பாரிஜாதம் விரட்டும்போது, இது இந்த வரட்டுத் தவளைக்குப் புரியும்!

அப்போது பார்த்துக் கொள்ளலாம்!

வேறு வழியின்றிக் கோபத்தை அடக்கிக்கொண்டு, பாரிஜாதம் அங்கிருந்து கிளம்பினாள்.

அவள் சென்ற பிறகு, சில பெரிய மூச்சுகளை எடுத்து, திவ்யா தன்னைச் சமனப்படுத்திக் கொண்டாள்.

வந்தவளின் நோக்கம் சின்னவளுக்குப் புரியாமல் இல்லை. யார் யாருக்காகவோ, அல்லது தன் விருப்பமாவேயோ, தங்கள் குடும்பம்

பார்க்கப் பளிச்சென்று தோன்றிவிடக் கூடாது என்று இந்த அம்மாள் விரும்புகிறாள். ஒரு சாக்குத் துணியைக் கட்டிக்கொண்டு போய் நின்றால் ரொம்பவே சந்தோஷப்படுவாள்.

ஆனால் இந்த எண்ணம்  இவளுடையதா, மகனுடையதா அல்லது இருவரின் விருப்பமுமேவா? அழைத்துச் செல்ல விமான நிலையத்துக்கே வந்தபோதும், ஒரு வினாடி கூட அவன் இளகிப் பார்க்கவில்லை! அத்தோடு அவன் நடந்துகொண்ட விதம்?

பெரியப்பாவும் அன்பைக் காட்டக் காணோம்.

குனிந்து வணங்கும் முயற்சியாய் தாயார் அருகே சென்றபோது, எங்கோ பார்த்தபடி அவர் பின்னே நகர்ந்ததை, அன்னையைப் போலவே அவளும் கவனித்தாள்.

காட்டிக் கொள்ளாமல் வெறுமனே கரம் குவித்து நகர்ந்த அன்னையின் தாழ்த்திய இமைகள் எதை மறைத்தனவோ? கண்ணீர்?

வாழ்வின் முக்கிய உறவான கணவனை இழந்து வந்திருக்கிறாளே என்ற கருணை இங்கே  யாருக்குமே இல்லையே!

அந்தத் தருணத்தில் வாய் மூடி சகித்த திவ்யாவுக்கு இப்போதும் மனம் கொதித்தது.

தந்தை ஏன் இப்படி ஒரு வாக்குறுதியை அவளிடம் கேட்க வேண்டும்?

படித்திருக்கிறாள்., வேலை பார்க்கிறாள்! அம்மாவையும் தம்பியையும் அவள் பொறுப்பாகப் பார்த்திருக்க மாட்டாளா?

பழகிய இடத்தை விட்டு இங்கே வரச் சொல்லி . . இந்த வெறுப்புச் சூழலில் அவளுக்கே மூச்சை முட்டுகிறதே!

தம்பி பரவாயில்லை. சின்னப் பையன். அணில், தவளை பின்னே ஓடுவதிலேயே அவனுக்கு நேரம் போய்விடும்.

தாயும் மகளும்தான் தவிக்கப் போகிறார்கள் போல! அவளாவது பரவாயில்லை. ஆனால் அம்மா!

லாப்டாப்பை மூடி வைத்துவிட்டு, மாலை பார்ட்டிக்கான உடையை திவ்யா கவனத்துடன் தேர்ந்தெடுத்தாள்.

ரொம்ப ஜாலாகத்தானே இருக்கக் கூடாது.

பார்க்கலாம்! கண்ணைப் பறிக்காமலே கருத்தைக் கவரும் எத்தனையோ வண்ணங்கள், வேலைப்பாடுகள் இருக்கின்றனவே!

அவளிடமுமேதான்!

சொல்லப் போனால், தாய் மகள் இருவருக்குமே அது போலத்தான் பிடிக்கும். தந்தை ரசிப்பதும் அவைகளையே.

தம்பி மட்டும்தான் கண்ட கண்ட பளீர் வண்ணங்களில் வாங்கிக் கொள்வான். சின்னப் பையன் என்பதால் மற்ற மூவரும் அதை ரசிப்பதே வழக்கம்!

ஆனால், அதைக் கூட இங்கே குற்றம் சொல்வார்களா? சொன்னால் அவர்கள் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டியதுதான். அவரவர் தொண்டை காயும் அவ்வளவே!

தந்தையின் வார்த்தைக்காக இயன்றவரை முயற்சிப்பது அவளது கடமை. அளவு மீறிப் போனால், அவள் ஒன்றும் போக்கிடமற்றவள் அல்ல!

கடல் பச்சை வண்ணத்தில் இடையிடையே சிறு "பளிச்"களுடன் அவள் அணிந்திருந்த சல்வார் செட்டை யாரும் குறை கூற இயலாது. சாந்தமதியின் கறுப்புக் கரையிட்ட சந்தன நிறச் சேலையும் கௌரவமான அழகோடு மதிப்பூட்டும் விதமாக இருந்தது.

இரண்டையுமே "தகதகா" என்றோ, கண்ணைப் பறிக்கிற வண்ணம் என்றோ மிக மிகுந்த வக்கிர புத்திக்காரர் கூடச் சொல்ல முடியாது. ஆனால், ஒருவரை வருத்தப் படுத்தியே ஆக வேண்டும் என்று ஒருவர் முனைந்தால், முடியாததில்லை. அப்போது திருப்பி அடிப்பதுதான் ஒரே வழி!

திவ்யா அதற்கும் தயாராகவே இருந்தாள்.

பாரிஜாதம் சொன்ன ஐந்தரை மணிக்குச் சரியாகக் கிளம்பி முன்னறைக்கு வந்த மூவரையும் பார்த்த மனோரம்யன் சற்றுத் திகைத்தான். பார்வை வட்டத்துள் தென்பட்ட திவ்யப்பிரகாசத்தின் முகமும் அவன் மனதையே பிரதிபலித்தது தெரிந்தது.

அவர்கள் எதிர்பார்த்தது போல ஒன்றுமில்லாத ஏழைப்பட்டவர்களாக அவர்கள் தங்களைக் காட்டிக் கொள்ளவும் இல்லை. அடுத்த விதமாக, விருந்துக்கு வருகிறவர்களைக் காந்தமாகக் கவர்ந்திழுக்கும் மாதிரியான பளபளப்பும் இல்லை.

சுருக்கமாகச் சொல்வதானால் கௌரவம்! மரியாதைக்கு உரிய ஆடை அணி மணிகளை மதிக்கத் தக்க விதமாக அணிந்தும் இருந்தனர்.

சின்னப் பையனின் பவர்பாய் படத்துடன் கூடிய டீஷர்ட்டும்

பளபளக்கும் பட்டன்களுடன் கூடிய ஜீன்சும் மனோரம்யனின் முகத்தில் முறுவலை வரவழைத்தன்.

கட்டை விரலை உயர்த்திக் காட்டி, "சூப்பர்மா!" என்றான் அவன்.

சட்டென முகம் மலர, "உங்களுக்குப் பிடித்திருக்கிறதா அண்ணா? தாங்க்ஸ். ஆனால், அம்மாவுக்குப் பிடிக்கவே இல்லை. வாங்கும்போதும் சரி, இப்போதும் கூட, அக்காதான் சின்னப் பையனைக் கட்டுப் படுத்த வேண்டாம் என்று அம்மாவிடம் எனக்காக சிபாரிசு செய்தாள்." என்று தமக்கையைப் பெருமையுடன் பார்த்தான் அவன்.

இனிச் சும்மா இருந்தால் சரியில்லை.

திவியைப் பார்த்து முறுவலித்து, "சைக்காலஜீ தெரிந்திருக்கிறது. நேரம் தவறாமைக்கும் முதல் பரிசு வாங்குவாய் போல!" என்றான் பாராட்டுவது போல.

ஏதோ சொல்ல வாயெடுத்துவிட்டு வெறுமனே முறுவல் மட்டும் செய்தாள் திவ்யா.

யோசனை போன்ற பாவனை தோன்றி மறைய "வாருங்கள். உங்களை முதலில் கொண்டு விட்டுவிட்டு வந்து அங்கிளை அழைத்து வருகிறேன்."" என்று பிரகாசத்திடம் தலையசைத்துவிட்டு முன்னே நடந்தான் மனோரம்யன்.

ஜீப்பில் டிரைவர் அழைத்து வருவான் என்று பாரிஜாதம் சொல்லியிருந்தாள்.

இப்போது மகனுக்கு அதிக வேலை என்று அவள் எரிச்சல் படுவாளோ?

காரில் ஏறாமல் தயங்கி நின்று, "டிரைவர் கூட்டிப் போனாலே போதுமே. விழா முடிந்து திரும்பி வருவது வேறு. உங்களுக்கு அதிக அலைச்சல் ஆகிறதே . ." என்றாள் திவ்யா.

"ஒரு வேளை இந்தத் தயக்கம் என் கார் ஓட்டும் திறமை பற்றிய சந்தேகத்தால் வந்திருக்குமோ?" என்று உரக்க யோசித்தான் மனோரம்யன். "நேற்று நன்றாகவே ஓட்டியதாக எண்ணினேனே! அப்படி இல்லையோ?" என்று சந்தேகமும் கேட்டான்.

வியப்பினால் திவ்யாவின் விழிகள் விரிந்தன. சரியான சிடுமூஞ்சி என்று எண்ணினாளே! இவனுக்கு வேடிக்கையாகக் கூடப் பேசத் தெரியும் போலிருக்கிறதே!

காரில் ஏறி அமர்ந்தபடி, "அப்போது பத்திரமாக வீட்டில்

கொணர்ந்து சேர்த்தது போல இப்போதும் செய்வீர்கள் என்று நம்பிக் காரில் ஏறுகிறோம். ஆனால் மகனுக்கு அதிக அலைச்சல் என்று தாய் மனம் உருகக் கூடுமோ என்று ஒரு தயக்கமும் இருக்கிறது!" என்றாள் திவி முறுவலை அடக்கியபடி.

பின்புறம் பார்க்கும் கண்ணாடியில் ஒரு தரம் பார்த்துவிட்டு "நேரம் தவறாமை பற்றிப் பேசியபோது ஏதோ சொல்லத் தொடங்கிவிட்டு நிறுத்திக் கொண்டது போலத் தோன்றியதே! அது என்னவாக இருக்கும் என்று ஒரே யோசனை!" என்றான் அவன்.

"எதையுமே யோசிப்பது நல்லதுதானே? " என்ற கேள்வி தன்னை அறியாமல் வெளி வந்துவிடச் சட்டென வாயைப் பொத்திக் கொண்டாள் அவள். "சாசாரி சார்." என்றாள் அவசரமாக.

"சரீப்பா. மன்னித்து விடுகிறேன்!" என்றான் அவன் சாதுவான குரலில்.

அவள் திகைத்து நிமிர்ந்து நோக்கவும், "ஒருவர் மன்னிப்புக் கேட்டால் கொடுக்க வேண்டியதுதானே? ஆனால் ஒரு நிபந்தனை. அப்போது சொல்லாமல் நிறுத்தியது என்ன என்று சொல்ல வேண்டும்!" என்றான் அவன்.

மெல்லத் தலையசைத்து, "பெரிதாக ஒன்றுமில்லை." என்றவள் தொண்டையில் லேசாக விழுங்கிவிட்டு, "எங்கேனும் கிளம்பத் தாமதம் செய்தால் பெரியப்பாவுக்குப் பிடிக்காது என்று அப்பா அடிக்கடி சொல்வார். "என்றாள்.

"இதை அப்போதே சொல்லியிருக்கலாமே." என்றான் அவன்.

"சொல்லியிருக்கலாம். ஆனால் அப்போது சொல்வது பெரியப்பாவுக்கு ஐஸ் வைக்கிற மாதிரித் தோன்றுமே என்று எண்ணினேன் " என்றாள் அவள் விளக்கமாக.

"அந்த மாதிரித் தோன்றக் கூடிய எதையும் செய்யவே கூடாது என்பது முதலில் இருந்தே என் உறுதி." என்றாள் சற்று அழுத்தமான குரலில்.

அதனால்தான் திவ்யா என்ற பெயரில் கையெழுத்துக் கூட இடவில்லையோ? தப்பாக எண்ணிக் கோபப்பட்டானே!

அல்லது, இவை எல்லாமே நடிக்க வந்த கதா பாத்திரத்தின் குண விசேஷங்களோ?

சிறு வயதில் "தர்ட்டி நைன் ஸ்டெப்ஸ்" என்று ஒரு புத்தகம் படித்தது அவனுக்கு நினைவு வந்தது. அதில் கொலை வரை செய்த எதிரி

நாட்டு உளவாளிகள் ஓர் இடத்தில் வேறு ஆட்கள் போல வசிப்பார்கள். கடைசி வினாடி வரை, முழுக்க அந்த ஆட்களாகவே அவர்கள் நடப்பதில், துப்பறிய வந்த அதிகாரிக்கே தப்பாக இவர்களைச் சந்தேகித்தோமோ என்று கூடத் தோன்றிவிடும். கடைசி வினாடியில்தான் கொலைகாரர்கள் தடுமாறித் தங்களைக் காட்டிக் கொள்வார்கள்.

அது போல இவளும் இதுபோலக் காட்டிக்கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டு வந்திருக்கிறாளா? இவளும், இவளுடைய தாயும்!

அல்லது அவன் கூர்ந்து கவனிக்கிறான் என்பதால் மறைக்காமல் சொல்கிறாளா?

மீண்டும் அவனது பார்வை பின்புறம் பாய்ந்து மீண்டது.

ஆனால் இந்தச் சிறு பையன்? அவனால் இது முடியுமா?

சற்று நேரம் மௌனத்தில் கார் ஓடியது.

சின்னவனுக்குப் போரடித்தது போலும். “இங்கே பச்சைப் பாம்பு இருக்கிறதா, அண்ணா? எனக்கு ஒன்று கிடைக்குமா?” என்று வினவினான்.

“பாபாம்பா? எதற்குடா?” என்று வினவினாள் சகோதரி.

“செல்லப் பிராணியாக வீட்டிலே வளர்க்கத்தான்.”

“பாம்பையா?! பாம்பையா வளர்க்கப் போகிறாய்? ஆபத்தாகி விடப் போகிறது!” என்று எச்சரித்தாள் தமக்கை.

“அதெல்லாம் கிடையாது. இந்தப் பிரதேசத்தில் பச்சைப் பாம்புக்கு விஷமே கிடையாதாமே. நெட்டில் பார்த்தேனே.” என்றான் சிறுவன்.

“ஊகூம். வேண்டாம். சும்மா இரு . இது பெரியப்பா வீடு. இங்கே உன் இஷ்டம் போலத் தவளை பாம்பு என்று வளர்க்க முடியாது. அதிலும் பாம்பைப் போய்! காட்!”

என்றாள் தமக்கை.

இந்த உரையாடலில் மனோரம்யன் கலந்து கொள்ளவில்லை.

எது நிஜம் என்று எப்படிக் கண்டுபிடிப்பது என்று அவன் யோசித்துக் கொண்டிருந்தான்.

தூரத்திலேயே மகனது காரைக் கண்டுவிட்ட பாரிஜாதம் தன் பெரிய உடலைத் தூக்கிக்கொண்டு இயன்றமட்டும் அவசரமாக இறங்கி ஓடி வந்தாள்.

அவ்வளவு சொல்லியும், இந்த மனோ பெரியவரை முன்னதாக அழைத்துக்கொண்டு வந்துவிட்டானே,  திட்டம் பாழாகிவிடுமே என்று ஒரே கவலை அவளுக்கு.

“என்னடா, அவர்கள் அலங்காரம் முடிந்து லேசில் கிளம்பி விட மாட்டார்கள் என்று நீ முதலில் அண்ணாரை . . “ என்று எரிச்சலாகக் கூறியவாறே காரை நெருங்கியவள், குனிந்து காரின் திறந்த கதவு வழியே இறங்கியவர்களைக் கண்டதும் திகைத்துப் பேச்சிழந்து நின்றாள்.

அவளது பேச்சில் எவ்வளவு இவர்கள் காதில் விழுந்திருக்கக் கூடும்?

முக்கியமாக மகன் காதுகளில்?

கடவுளே, நல்லவேளை! அந்தச் சின்னப் பையனின் சீட்பெல்ட்டை கழற்ற உதவிக் கொண்டிருந்ததால் மகன் காதில் எதுவும் விழ வாய்ப்பில்லை.

ஆனால் இவர்கள் . . . முகத்தைப் பார்த்தால் ஒன்றும் தெரியவில்லை. வெகமாக வந்தபடி பேசியதால், இவர்களுக்கும் ஒன்றும் சரியாகக் கேட்டிராது என்று நம்புவோம்!

ஒருவாறு மூச்சு நேராயிற்று அவளுக்கு.

ஆனால், ஜீப்பில் வந்தால் கூந்தல் கலைந்து அலங்காரம் சிதைந்து பார்க்கக் கண்ணராவியாக வருவார்கள் என்று அவள் யோசித்துத் திட்டமிட்டு ஏற்பாடு செய்தால், அந்தத் திட்டம் வீணாகிப் போயிற்றே என்று அவளுக்கு ஆத்திரம் வந்தது.

இதுகள்தான் பிடிவாதமாகக் காரில்தான் போவோம் என்றிருப்பார்கள்.

இதற்காக வேறு இவர்களுக்குத் தனியாக “லொத்து”க் கொடுக்க வேண்டும்.                எதற்கும் அப்புறமாக மகனிடம் இது பற்றிக் கேட்க வேண்டும்!

ஆனால் இதைப் பற்றி யோசித்துக்கொண்டு நிற்க நேரம் இல்லாமல் அடுத்தடுத்து விருந்தினர் வரத் தொடங்கினர்.

பாரிஜாதத்தின் அந்த விருந்து . . . மொத்தத்தில் பார்த்தால் பெரிய வெற்றி என்றுதான் சொல்ல வேண்டும்.

அவள் அழைத்த அத்தனை பேரும் வந்தார்கள். எல்லாருமே பெரிய பெரிய பண்ணைக் குடும்பங்கள்!

“பூரணி” நிறுவனத்தின் உணவு வழக்கம் போலவே சுவையாக இருந்தது.

இந்த விருந்தைச் சாக்கிட்டு அவள் என்னவெல்லாம் செய்யத் திட்டமிட்டாளோ, கிட்டத்தட்ட அத்தனையையுமே அவள் செய்து முடித்தாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

கொஞ்சமேனும் மான ரோஷம், சூடு சுரணை இருந்தால், மனம் என்று ஒன்று இருந்தாலே அந்த சாந்தமதி குடும்பம் நாளையே மூட்டை கட்டிக்கொண்டு திவ்யப்பிரகாசத்தின் வீட்டை விட்டு ஓடியாக வேண்டும். ஓடிவிடும் என்றே எதிர்பார்க்கலாம்.

வினோதினி வழக்கம் போலவே கண்ணைப் பறித்தாள். அவளை மருமகள் என்று அதிகாரப் பூர்வமாக அறிவிக்காத குறை மட்டுமே!

இத்தனைக்கும் மேல், அவள் மனம் முழுவதும் ஒரு திருப்தியற்ற மனநிலையே அலைபாய்ந்து, அவளைத் தூங்கவிடாமல் கெடுத்தது.

வெகுவாகத் தூங்குவதற்கு முயற்சி செய்துவிட்டு, பயனின்றிப் போகவே எழுந்து அமர்ந்து அன்றைய நிகழ்ச்சிகளை மனதில் திருப்பிப் போட்டுப் பார்க்கலானாள் அவள்.

நினைத்ததை எல்லாம் நடத்திவிட்ட பிறகு, இந்த மனநிலை எப்படி, ஏன் வந்தது என்று யோசிக்கலானாள்.

# அத்தியாயம் - 6

வெற்றியாகப் பாரிஜாதம் எண்ணியது கிட்டத்தட்ட சரியே!

பண்ணைக் குடும்பங்களில் மேல் தட்டு மனிதர்கள் எல்லோருமே வந்திருந்தார்கள். அவர்கள் முன்னிலையில் "அத்தை அத்தை" என்று அவளை ஒட்டிக்கொண்டே வினோதினி அலைந்தாள்.

வருங்கால மருமகள் என்று கொட்டை எழுத்தில் எழுதிக் கழுத்தில் மாட்டிக் கொள்ளாத குறைதான்.

இன்னொரு தோலே போல ஒட்டித் தைத்த ரத்தச் சிவப்பு உடையின் வண்ணமே தெரியாத அளவு ஒரே பளாபளப்பு! கழுத்திலும் காதுகளிலும் அணிந்திருந்த வைரங்களின் பளபளப்பு வேறு!

என்ன ஒரே எரிச்சல் என்றால், பாரிஜாதத்துடைய மகன், அதைப் பெரிதாகக் கண்டுகொண்டது போலவே தோன்றவில்லை.

அதனால் இருக்குமா?

ஊகூம் இராது. மேல் படிப்பை நிறுத்திவிட்டு, பண்ணையை மேம்படுத்த என்று இங்கே வந்த பிறகே, அவன் பெண்களிடம் ஆர்வம் காட்டியதில்லை.

தாயாரே திருமணம் பற்றிப் பேசி, ஓரிரு பெண்களை அறிமுகம் செய்து வைத்த சமயங்களில் கூட, "இருக்கட்டும்மா. முதலில் நான் விரும்பிய அளவுக்குப் பண்ணையை உயர்த்த வேண்டும். அதன் பிறகு, நம் வீட்டுக்குப் பொருத்தமாகக் கிடைக்க வேண்டும். பொறுமையாக இருங்கள். எதிலோ படித்தேன். நமக்குத் தேவையானது, தேவையாக நேரத்தில் தானாக வந்து சேருமாம். தானாகப் பழுக்காததைத் தடி கொண்டு அடித்துக் கனிய வைப்பது என்பார்களே, அதை விடவும் மோசமாக இப்போது ஏதோ கல் வைத்துப் பழுக்க வைக்கிறார்களாம்., அதுபோல, அவசரப் படாதீர்கள். உரிய தருணத்தில் எல்லாம் தானாக நடக்கும்" என்று முடித்துவிட்டான்.

யோசித்துப் பார்க்கும்போது, மகனின் அந்தப் பேச்சு கூட, அவள் வயிற்றில் புளியைக் கரைத்தது எனலாம்.

ஒரு வேளை பெரியவருடைய தம்பி போல இவனும் யாராவது ஏழைப் பெண்ணைக் காதலித்து, திடுமென மணமுடித்தபின் தாயிடம் சொல்வதாக இருக்கிறானோ?

பயந்துபோய், ஆள் வைத்து மகனை உளவறிந்து பார்த்தாள்.

அஞ்சியது போல ஒன்றும் இல்லை என்று தெரிந்ததும் ஆறுதல் அடைந்து, மறுபடியும் தன் முயற்சியைத் தொடங்கினாள்.

இந்த நிலையில்தான் பெரிய அளவிலான பழப் பண்ணை ஒன்றை வாங்கிக்கொண்டு, வினோதினியுடை பெற்றோர் அங்கே வந்து குடியேறினார்கள். அவர்களுடைய ஒரே மகளாகப் படிப்பை முடித்துக்கொண்டு வந்த வினோதினியைப் பார்க்கும்வரைதான் பாரிஜாதம்  யார் யார் என்று தேடி அலைந்தது எல்லாம்.

அவள் பணக்காரி, தந்தையின் பெரிய சொத்துக்கு ஒரே வாரிசு, பார்வைக்கும் அழகுதான் என்று தெரிந்ததும், இவள்தான் மருமகள் என்று முடிவே செய்துவிட்டாள்.

அவளுடைய மகனை நேராகப் பார்த்துவிட்டு யாரால் அவனை மறுக்க முடியும்?

வெளிப்படையாக , ஊரறியப் பேசி முடிக்காவிட்டாலும்,  ஓரளவு இதுதான் ஜோடி என்பது போல ஜாடைமாடையான பேச்சு வளர்ந்தது.

ஆனால் நேரடியாக மறுக்க இடம் கொடுக்கக் கூடாது என்பதற்காகவே, பாரிஜாதம் மகனிடம் நேரடியாக இது பற்றிக் கேட்கவும் இல்லை. சுற்றி வளைத்து அவனை நெருக்கிக் கொண்டிருந்தாள்.

இந்த விருந்திலும், வினோதினியின் வருகை, அருகாமை எல்லாம் அப்படிப்பட்டவைதான்.

எறும்பூரக் கல் தேய்கிற மாதிரி எண்ணி, இதில் பாரிஜாதம் நிதானமாகத்தான் காய் நகர்த்திக் கொண்டிருந்தாள்.

வினோதினியுடைய குடும்பத்துக்கும் பாரிஜாதத்தின் திட்டங்கள் ஒப்புதலாகவே இருந்தன.

மலைச்சாரலில் புதிதாகப் பண்ணையை வாங்கிக் கொண்டு வந்து தடபுடலாகக் குடியேறிய தேவநாதன் குடும்பம் எண்ணி வந்தது வேறு. பணத்தைப் பார்த்ததும், அந்தப் பழம்பெரும் குடும்பங்கள் பல்லை இளித்துக்கொண்டு வந்து நிற்பார்கள் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் மகனுக்குச் சொத்துக்காரப் பெண்ணைத் தேடிக் கொண்டிருந்த பாரிஜாதம் தவிர யாரும் அப்படி வந்து நிற்கவில்லை.

மனோரம்யனைப் பார்த்த பிறகு, பாரிஜாத்தின் சொல்லுக்கு அந்தக் குடும்பமே தலையாட்டிற்று.

பாரிஜாதத்தின் பேச்சின் மூலம், திவ்யப்பிரகாசத்தின் சுந்தரவனம்,

மனோரம்யனின் மனோகரம், அவர்களது “தேவலோகம்” எல்லாமே ஒரே சொத்தாகி, அந்தப் பிரதேசத்திலேயே பெரிய பண்ணையின் மகாராணியாக மகள் வாழப் போவதாகக் குடும்பமே நம்பிற்று!

மகாராணியுடைய அப்பா அம்மாவும் ராஜ குடும்பம்தானே?

தேவநாதனின் குறிக்கோள், இந்தப் பழைய பண்ணைக் குடும்பங்களுக்குள் தானும் ஒருவராகக் கலந்துவிடுவது. இப்போது மகளின் திருமணத்தை அதற்குரிய டிக்கட்டாகக் கருதலானார்.

அதற்காகப் பாரிஜாதம் சொன்ன எதைச் செய்யவும் அவர் குடும்பத்தில் எல்லோருமே தயாராக இருந்தார்கள். முதன்மையாக வினோதினி.

திடும் திடும் எனத் தற்செயல் போல மனோரம்யனின் வழியில் வந்து நிற்பாள். திவ்யப்பரகாசத்தின் வீட்டுக்கும் அவ்வப்போது வந்து போவாள். “அங்கிள் அங்கிள்” என்று அவரிடமும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டாள்.

அவராகவே கூட, “இந்தப் பெண்ணை மணந்துகொள்ளேன்.” என்று மனோரம்யனிடம் சொல்லக் கூடும் என்று ஓர் அதிகப்படி எதிர்பார்ப்பு!

இப்படி மனோரம்யனைச் சுற்றி வளைத்துக் கொண்டிருந்தபோதுதான், சாந்தமதி குடும்பத்தோடு அங்கே வந்து விழுந்தாள்! அதுவும் திருமண வயதில் ஒரு மகளோடு!

அவர்களைப் பார்க்குமுன்னரே, கூடிய விரைவில் அந்தக் குடும்பத்தை இந்தப் பிரதேசத்தில் இருந்தே விரட்ட வேண்டும் என்று பாரிஜாதம் முடிவு செய்துவிட்டாள்!

அதிலும் நேரில் பார்த்த பிறகோ, தீர்மானம் பல மடங்கு உறுதியாயிற்று!

அதற்காகவே அவர்களை முன்னதாக வருவித்து, அறிமுகம் என்ற பெயரில் அவர்கள் மனதை நோகடித்தாள்.

“நம் பிரகாசம் அண்ணாருடைய தம்பி சமீபத்தில் செத்துப் போனாரே, அவருடைய மனைவி. பெயர் சாந்தமதி. இல்லையில்லை. காந்திமதி இல்லை சாசாந்தமதி! “ என்பாள்.

“அங்கே ஒன்றும் இல்லையாம் மூட்டை கட்டிக்கொண்டு அண்ணன் வீட்டுக்கு வந்து விழுந்துவிட்டார்கள். சரி, அங்கே ஒன்று என்றால், நம் மனோரம்யன்தானே பார்த்தாக வேண்டும்! அதான்,

அறிமுக விருந்தை நம் வீட்டிலேயே வைத்துவிட்டேன்!"

"குடும்பம் என்று அவருக்கு யார் இருக்கிறார்கள? என் பையன்தானே? அதான், இந்தப் பணியை நம் வீட்டில் நடத்துகிறோம்!"

இப்படி, இதே ரீதியாகவே பார்ஜாதம் எப்போதும் பேசினாள்.

மீண்டும் மீண்டும், திரவியத்தின் அகால மரணம் குறித்து வருந்துவது போல, அதைப் பற்றிப் பன்னிப் பன்னிப் பேசினாள். அதுவும் கொச்சையான வார்த்தைகளால்.

சாந்தமதியின் விழிகளில் கண்ணீரைப் பார்த்துவிடும் வெறி!

ஆனால் தாயும் பெண்ணும் கல்லாக நின்றார்களே தவிரக் கண்ணீரைக் காட்டவே இல்லை.

ஆனாலும் திட்டமிட்ட அளவு அவர்களைக் கொத்திக் குதறிவிட்டதாகத்தான் பாரிஜாதம் எண்ணினாள். எனவே திருப்தியின்மைக்கு அது காரணமாக இருக்காது.

இன்னும் வினோதினி பிரம்மாதமான அணிமணிகளோடு வந்து எல்லோரையும் அசத்தியதிலும் பாரிஜாதத்துக்குத் மகிழ்ச்சிதான்.

அதற்கும் மேலாகத் திட்டமிட்டபடியே அந்தத் திவியை ஒரு தரம் தனியே பிடித்து, "என் வருங்கால மருமகள் எப்படி அழகாக இருக்கிறாள் பார்!" என்று வினோதினியைக் காட்டி, மறைமுகமாக எச்சரித்தும் ஆயிற்று.

"வேலியில்லாத பயிர். பிடித்துக் கொள்ளலாம்" என்று அவள் எண்ணியிருந்தால், அது நடக்காது என்று புரிந்திருக்கும்.

எனவே, அதையும் செவ்வனே செய்தாயிற்று என்று திருப்திதான்.

உணவில் குறை கூறவே முடியாது. பாராட்டுதான். செய்தது "பூரணி" குடும்பம் என்றாலும் மெனு மற்றதெல்லாம் பாரிஜாதத்தின் ஏற்பாடுதானே? அதிலும் குறைப்பட வழியில்லை.

ஆனால் ஒரு சிறு காந்தல்!

"பார்த்தாலே கையெடுத்துக் கும்பிட வேண்டும்போல, என்ன கம்பீரமான அழகு !" என்று பூரணி குடும்பத்துப் பெண் ஒருத்தி, அதிலும் முக்கியப் பங்காளியுடைய மனைவி கூறியது இன்னமும் பாரிஜாதத்தின் நெஞ்சில் எரிந்தது.

வேண்டுமானால் கோயிலில் கொண்டு நிறுத்திக் கற்பூரமே காட்டுவதுதானே?

இந்த அழகில், “அந்தப் பக்கம் தேங்காய்ப் பாலில் செய்கிற ஓர் அருமையான இனிப்பு, சாந்தமதி எனக்குக் கற்றுத் தந்தார்கள். அடுத்த விருந்தின்போது, அதைச் செய்து வைக்கப் போகிறேன் என்று வேறு சொன்னாள்.பாவி!

காந்தல் தாங்காமல், “தேங்காய்ப்பாலா? இனிப்பே சர்க்கரை வியாதியை உண்டு பண்ணும். இதில் தேங்காய்ப்பால் வேறு சேர்த்து, கொலஸ்ட்ராலை வேறு கூட்ட வேண்டுமா?” என்று தன் ஆரோக்கிய அறிவை விளம்பரப் படுத்தினால், அது அவளுக்கே அல்லவா அசட்டுப் பட்டம் கட்டுவதாகிவிட்டது!

அந்தக் குடும்பத்தின் சின்னப் பெண் ஒருத்தி அருகில் நின்று இதைக் கேட்டுவிட்டு, பாரிஜாதத்துக்கே புத்தி சொன்னாள்! “ஆன்ட்டி நீங்கள் எந்த நூற்றாண்டில் இருக்கிறீர்கள். தேங்காய்ப்பால் உடம்புக்கு . .அதிலும் முக்கியமாக மூளைக்கு நல்லது என்று இப்போது கண்டு பிடித்திருக்கிறார்களே. வெறும் சீரியலைப் பார்த்து அழாமல், இப்படி நல்லதையும் நெட்டில் பாருங்கள் ஆன்ட்டி.” என்று விளம்பினாள்.

அந்தக் கழுதைக்கு அழுத்தமான குரல் வேறு! எல்லோருமே கூடச் சேர்ந்து ஆமாம் போட, விருந்து ருசியே அவளுக்குக் கெட்டுப் போயிற்று.

ஆனால் உணவு பற்றி மற்றவர்களின் பாராட்டு பெரிதாக இருந்ததால், அதுவும் அவளது நிம்மதியைக் கெடுக்க வாய்ப்பில்லை.

பி . .ன்னே?

இந்த சிங்கப்பூர்க்காரிகளின் கெஞ்சலுக்கு இணங்கி, அவர்களைத் தன் பெரிய காரில் மகன் கூட்டி வந்ததால் ஆத்திரம் என்று முடிக்கவும் வழியில்லாமல் போயிற்று.

அதைப் பற்றி மகனிடமே இது பற்றிப் பேசினாள். “என்னடா வந்ததில் இருந்து அவர்களுக்காக ஓட்டி ஓட்டி, உன்னை டிரைவராகவே எண்ணிவிடப் போகிறார்கள்!” என்று வேடிக்கையாக எச்சரிப்பது போல அவள் கூறியதற்கு மகன் தந்த பதில் அவளைத் தலையில் அடித்துக்கொள்ள வைத்தது.

“சேச்சே, அப்படி எதுவும் நடக்காதும்மா. அத்தனை பேர் நடுவில் மேக்கப் அழிந்து, கூந்தல் கலைந்து நிற்பானேன் என்று நானேதான் அவர்களைக் காரிலேயே கூட்டி வந்தேன். நீங்கள்தான் அங்கிளைத் தாமதமாக அழைத்து வரச் சொன்னீர்களே. இவர்களைச் சீக்கிரமாக இங்கே கொண்டு விட்டுவிட்டுப் போய் அங்கிளைக் கூட்டி வந்தால்

அதற்குச் சரியாக இருக்கும் என்று கணக்கிட்டுத்தான் அப்படிச் செய்தேன்.” என்றான் அவன் சர்வசாதாரணமாக.

ஆக, அலங்காரம் கலையாமல் அவர்களைக் கூட்டி வந்து காரியத்தைக் கெடுத்தது, இந்த மக்குப் பிள்ளைதான்.

அதிலும், மனதை மறைத்துத் தாய் சொன்னதையே நிறைவேற்றினான் என்பதால், மகனிடமும் குறைப்படுவதற்கு இல்லை!

எனவே, இதுவும் அவளுக்குச் சஞ்சலத்தை உண்டு பண்ண வாய்ப்பில்லை!

எப்படியும்  வினோதினி பக்கத்தில் அந்தத் திவியால் நிற்கவே முடியாது. அது நிச்சயம் என்று ஆறுதல் கொண்டாள் அவள். வினோவினது போன்ற ஆடை அணிகளுக்கு அந்தப் பராரிக் கூட்டம் எங்கே போகும்?

அதற்கும் ஒரு படி மேலே போய், வினோதினியை அந்தத் திவியிடம்  காட்டி, வருங்கால மருமகள் என்றும் பறைசாற்றியாகிவிட்டது.

அந்தப் பெண்ணின் உள்ளத்தில் ஏதேனும் அசட்டுத் திட்டம் உருவாகி இருக்குமேயானால், வருமுன் காப்போனாகி அதை முளையிலேயே கிள்ளி எறிந்தாயிற்று!

ஆக இந்த விருந்தை ஏற்பாடு செய்து சாதிக்க எண்ணிய அத்தனையையும் நடத்தி முடித்தாயிற்று. அப்படியிருக்க எதற்கு இந்த அனாவசியமான சஞ்சலம்?

அன்று அடைந்த வெற்றிகளை நினைத்து மகிழ்ந்தபடி நிம்மதியாக உறங்க வேண்டியதுதான்!

மெய்யாகவே அன்றைய நிகழ்வுகளை எண்ணி மகிழ்ந்தவாறே கட்டிலில் ஏறிப் படுத்த பாரிஜாதத்தின் மனக் கண்முன்னே வினோதினி வந்து நின்றாள்.

அவள் அணிந்திருந்த வைர நகைகளுக்குப் போட்டியாக, ரத்தச் சிவப்பில் நெருங்க ஸ்வ்ரோவ்ஸ்கி கல் ஒட்டி அவளது ஆடை பளபளத்தது நினைவு வந்து இப்போதும் அவளது பார்வையை மங்கச் செய்தது!

அவளுடைய மனோரம்யன் அதைக் கவனித்திருப்பானா?

எப்போதுமே, வினோதினியின் அழகு, தோற்றம், பேச்சில் எதையாவது ஒன்றைத் தூண்டில் போடுகிற மாதிரி மகனின்

கவனத்துக்குக் கொண்டுவருவதும், அது பற்றி சிலாகித்துப் பேசி அவன் மனதில் பதிய வைப்பதும் பாரிஜாதத்தின் வழக்கம்.

அதற்குப் பலன் இருக்கிறதா இல்லையா என்பது இன்று வரை அவள் அறிந்ததில்லை.

அந்தக் கட்டைப் பிரம்மச்சாரி திவ்யப்பிரகாசத்தோடு சேர்ந்து, இவனுக்கும் பெண்கள் நினைப்பே வருவதில்லையோ என்று கூட எண்ணியிருக்கிறாள். அதற்காகவே அங்கே அடிக்கடி மகன் செல்வதைத் தடுப்பது அவசியமோ என்கிற வரை அவளது சிந்தனை சென்றிருக்கிறது.

ஆனால் “சுந்தரவனம்” பண்ணையின் அளவும் வளமும் அப்படி ஒன்றும் அலட்சியமாக விட்டுவிடக் கூடியதில்லையே! இவன் கண்ணில் பட்டுக்கொண்டே இருந்தால்தானே, பெரியவர் மனமும் மாறாமல் இருக்கும்.

பண்ணை கைக்கு வந்துவிட்டால், அப்புறம் அவரை எப்படியாவது ஒதுக்கித் தேசாந்திரம் அனுப்பி விடலாம்! அதுவரை, அவரைப் பொறுத்துதான் ஆக வேண்டும்.

அத்தோடு, அந்தக் கிழவரும் இவனும் ஒன்றா? எவ்வளவு வயது வித்தியாசம்!

இப்படிக் கண்ணிலும் கருத்திலும் வினோதினியைக் காட்டிக்கொண்டே இருந்தால். மகனின் வயதே, அவனை அவள் பக்கம் இழுத்து வந்துவிடும்.

அப்போது அவ்வளவு பெரிய சொத்தும் கிடைக்கும். பணக்கார மருமகளும் கிடைப்பாள்.

இன்றும் அது போல மகனிடம் தூண்டில் போட்டாள். போட்டபோதுதான் . . . சட்டெனப் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள் பாரிஜாதம்.

கரெக்ட்! இன்றும் அது போல ஒன்று நடந்தது.

அவளிடமிருந்து வழக்கமான தூண்டில் கேள்விதான்.

அன்று வந்த பெண்கள் எத்தனை வேறுபாடான வண்ணங்களில் உடை அணிந்திருந்தார்கள் என்று வியப்பது போலத் தொடங்கி, “எந்த நிறத்து உடை கண்ணா, ரொம்பப் பிரமாதமாக இருந்தது?” என்று கேள்வி ஒன்றைக் கேட்டு வைத்தாள்.

பெண்களின் உடைகளைப் பற்றி அவனைக் கேட்டால்? ஆனால்

கேட்பவள் தாய். கட்டைத் தடியனாக ஒரே ஒரு பையனை மட்டும் பெற்று வைத்திருப்பவள்! ஒரு பெண்ணையும் சேர்த்துப் பெற்றிருந்தால், மகளுக்கு விதம் விதமாக அலங்காரம் செய்து பார்த்திருப்பாள்! ஒத்துக் கொள்ளும்படி ஏதாவது சொல்ல வேண்டும்!

மகன் யோசிப்பதைப் பார்த்துவிட்டு, ஒரு செல்ல அலுப்புடன் பாரிஜாதமே பதிலையும் சொன்னாள்.

“நல்ல ரத்தச் சிவப்பில் பளபளவென்று நிறைய ஸ்வ்ரொவ்ஸ்கி கல் ஒட்டியிருந்த உடைதானேம்மா ரொம்ப அழகாக இருந்தது? அணிந்திருந்தவளும் மிக அழகு. நம் வினோதானடா. அவள் முன் மற்ற எல்லாரும் மங்கித் தெரிந்தார்கள். பெண் ரொம்பவும் கெட்டிக்காரியும் கூட! யாருக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ!” என்று அவள் மேலே மேலே சொல்லிக்கொண்டு போனாள்.

ஆனால் தீவிரமாக யோசித்த மகன் வேறே ஏதோ பதில் சொன்னது, அவளுக்கு நினைவு வந்தது.

“இல்லைம்மா. “ என்றான் ஒரு நிச்சயத்துடன். “ஒரே பளபளப்பில் அந்த வினோதினியின் உடையின் நிறமே சரியாகத் தெரியவில்லை. அதை விட அமைதியாக கடல் பச்சை நிறத்தில் நீளமாய் . .அந்த உடை நன்றாக இருந்தது.” என்று அபிப்பிராயம் சொன்னானே!

அது யார் ஒரு விருந்துக்குப் போய் மங்கல் நிறத்தில் . . .என்று யோசித்தவளுக்கு, அது அந்தத் திவி அணிந்திருந்த ஆடையின் நிறம் என்பது நினைவு வந்து, நெஞ்சுக்குள் பகீரென்றது!

ஆக, இதுதான் அவளது நிம்மதியைக் கெடுத்திருக்க வேண்டும்!

அங்கே வந்து ஒரே நாளைக்குள், இந்த அளவு முன்னேறிவிட்டாளா?

இன்று ஆடை அழகு என்கிறான். நாளைக்கு அவளே அழகு என்று சொன்னாலும் சொல்லுவான்!

ஆனாலும் இயற்கையும் செயற்கையுமாக வினோதினியின் பக்கத்தில் அந்தத் திவியால் நிற்கவே முடியாது. அது நிச்சயம் என்று கருதி, ஒருவாறு தன் உறுத்தலை ஒதுக்கி ஆறுதல் கொண்டாள் அந்த ஆசை கொண்ட தாய்.

என்ன பெரிதாக? திவ்யா அந்த வீட்டிலேயே இருந்தால், வினோ அடிக்கடி போய் வருமாறு ஏற்பாடு பண்ண வேண்டியதுதான்.

அது மட்டுமல்ல. அந்தத் திவியுடைய குடும்பம் இங்கே வந்தது,

திவ்யப்பிரகாசத்துக்கு மட்டுமின்றி, மனோரம்யனுக்கும் சற்றும் பிடிக்காத விஷயம்!

தந்தை இறந்ததும், பெரியவரை உறிஞ்சி உண்ண வருகிறார்கள், ஒட்டுண்ணிகள் என்று ஏற்கனவே அவர்களிடம், அவனுக்கு வெறுப்பு உண்டு.

இப்போது வினோதினி, நாக்குக்கு ருசியாக இதை அதைச் செய்து கொண்டு கொடுத்து இனிமையாகப் பேசிப் பழகினால், தானாக அவள் கை ஓங்கிவிடாதா? வினோதினியோ என்ன செய்யலாம் என்று துடித்துக் கொண்டிருப்பவள்!

இரு பெண்களுமாக அடுத்தவர் சொத்தை அடையத் திட்டம் தீட்டினர்.

இதில் மும்முரமாக ஈடுபட வினோதினிக்கு தனிப்பட்ட ஒரு காரணமும் இருந்தது.

சும்மாவே அவள் எட்டடி பாய்கிற குட்டி! பாரிஜாதம் கோடி காட்டிவிட்டதால், அவளுக்கும் உள்ளே குறுகுறுத்துக் கொண்டுதான் இருந்தது. விதம் விதமான ஆடை அணிகளில், மனோரம்யனைச் சுற்றிக் கொண்டுதான் இருந்தாள். இன்னும் அவன் தன் காலடியில் வந்து விழவில்லையே என்று குறைதான்.

இந்த நிலையில் மனோரம்யனுக்குச் சொத்தைத் தரப் போகிறவர் மாளிகையில் வசிக்க இன்னோர் இளம் பெண் வருகிறாள் என்பது, மாமியாரைக் காட்டிலும் அவளுக்கு அதிக வெறுப்பாக இருந்தது.

இப்போது இன்னும் என்ன செய்யலாம்?

வாய்ப்பைத் தேடிக் கொண்டிருந்தவளுக்கு, பஃப்பே முறையில் ஆன இந்த விருந்து அப்படிப்பட்ட வாய்ப்பை அவளுக்கு அளித்தது.

தட்டில் எதையோ கொறித்துக் கொண்டிருந்தவள் அந்தப் பக்கம் தனியே வந்த திவ்யாவைக் கண்டாள். வாய்ப்பை விடலாமா?

“ஏய் உன்னைத்தான். இங்கே வா!” என்று அதட்டலாக அழைத்தாள்.

வருங்கால மருமகள் என்று பாரிஜாதம் அறிமுகம் செய்த பெண்!

திவ்யா யோசனையாகப் பார்க்கவும், “என்ன பார்க்கிறாய்? உன்னைத்தான் கூப்பிட்டேன். இந்தா, இந்தத் தட்டைக் கொண்டு வைத்துவிட்டு எனக்கு வேறு தட்டு எடுத்து வா!” என்று ஏவி, உண்டுகொண்டிருந்த எச்சில் தட்டை ஓர் உதாசீனப் பார்வையுடன்

அவள் புறம் நீட்டினாள்.

சும்மாவே அறிமுகம் என்கிற சாக்கில் தாயை பாரிஜாதம் கொச்சையாகக் கூறிப் படுத்தும் பாடை அப்போதுதான் கேட்டு உள்ளே குமுறிக்கொண்டு தனியாக வந்தவள் திவ்யா.

விதியை மாற்ற முடியாது. ஆனால், எதையுமே பிறர் மனம் நோகாமல் சற்று நாகரீகமாகவும் சொல்லலாமே!

தவித்து வந்தவளை, வினோதினியின் ஏவல் அவளைப் பணியாளாக்கி மேலும் கொதிக்க வைத்தது., வருத்தவும் செய்தது.

இந்த மாதிரி மனிதர்கள் இங்கு இருப்பதை அப்பா அறியவில்லையே!

ஆதரவின்றி வந்திருக்கிறார்கள் என்றல்லவா இந்த ஏளனம், குத்தல் எல்லாம்? ஆனால், அவர்கள் ஒன்றும் இந்த வீட்டில் அடைக்கலம் கேட்டு நிற்கவில்லையே!

இந்த வீட்டில் வரவேற்பாக விருந்தை வைத்ததே, இப்படிக் கண்டபடி பேசி மனதை வருத்தி இங்கிருந்து விரட்டுவதற்காகவே இருக்குமோ?

அந்த மனோரம்யன்? அவனும் இதில் கூட்டுதான் போல. விருந்தே அவனது வீட்டில்தானே?

அப்படித்தான் இருக்க வேண்டும். விமான நிலையத்துக்கு வந்து அழைத்துச் சென்றவன், ஒருதரமேனும் சிரித்தானா? சிரிப்பென்ன? சரதாரணமாகப் பேசக் கூட இல்லையே! பத்திரிகை படிப்பதாகக் காட்டி உட்கார்ந்திருந்தானே!

விருந்துக்கு வருமுன்னரே தாயும் அவளுமாக ஒருவரை ஒருவர் எச்சரித்துக் கொண்டபடி, அவளும் எதையும் முகத்தில் கூடக் காட்டவில்லை.

தந்தையின் மரணம் அவரகளது சொந்த இழப்பு. அதை முகத்தில் காட்டி ஒரு விருந்தில் மற்றவர்கள் வருந்தும்படி நடந்துகொள்ளக் கூடாது. அது அநாகரீகம்என்று வேதனையை அடக்கிக் கொண்டவர்கள் அவர்கள்! இவளோ . . .

அசையாமல் நின்று வினோதினியை ஒரு தரம் பார்த்துவிட்டு, இந்த வேலைக்காகவே அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்த ஒரு வெயிட்டரை லேசான தலையசைவால் திவ்யா அழைத்தாள்.

அவன் ஓடி வரவும், “அவர்களிடம் தட்டை வாங்கிப்போ..” என்று

வினோதினியைக் கைகாட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டாள்.

முகத்திலேயே அறை வாங்கியது போலக் கன்றிக் கறுத்துப் போனாள் வினோதினி.

இந்த இடத்தின் வருங்கால எஜமானி. இந்தப் பிரதேசத்திலேயே பெரிய பண்ணைக்காரி ஆகப் போகிறவள்! அதில் ஏதோ ஒரு மூலையில் ஒண்டி வாழ வந்தவளுக்கு இவ்வளவு திமிர?

திவ்யாவின் சிகையைப் பிடித்து ஆட்ட வேண்டும்போல உள்ளம் கொதித்தது அவளுக்கு. ஆனாலும் அதைக் காட்டுவதற்கு முழுத் தைரியமும் இல்லை. இன்னமும் இந்தப் பண்ணையே அவளது ஆகவில்லையே! பல்லைக் கடித்துக் கோபத்தை அடக்கியபடி அங்கிருந்து விலகிப் போனாள் வினோதினி.

அதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், அங்கங்கே சுற்றி வந்து விருந்து உபசாரத்தைக் கண்காணித்துக் கொண்டிருந்த மனோரம்யனின் கவனத்தில் சம்பவம் முழுதும் அரங்கேறியதுதான்!

ஒரே மகளாக வளர்ந்திருந்த அந்த வினோதினியின் திமிர் அவ்வளவு மாதங்களில் அந்தப் பகுதியில் ஓரளவு பழகிப் போயிருந்தது. ஆனால் நிமிர்வுடன் திவ்யலட்சுமி அதை எதிர்கொண்ட விதம் அவனை வியப்படைய வைத்தது.

அது மனதிற்குச் சரியாகவும் பட்டது. அவளை வரவேற்பதற்கான விருந்தில், அவளையே ஒருவர் அவமதிப்பதா? தப்பு செய்தால் வாங்கிக் கட்ட வேண்டியதுதான்.

ஆனால் இது நியாயம் என்பதால் திவ்யா செய்தாளா? அல்லது, அவளுமே சமமாகத் திமிர்ப் பிடித்தவள்தானா?

இப்போது எங்கே போயிருப்பாள்? மற்ற பல பெண்களைப் போல ஒப்பனைக்கா?

மறுபடி திவ்யலட்சுமி கண்ணில் பட்டபோது ஏளனத்தோடு ஒரு குறுகுறுப்புடன் மனோரம்யன்  அவளை ஆராய்ந்தான்.

எதிர்பார்த்தது போல ஒப்பனைதான். ஆனால் . . கழுவப்பட்டிருந்த முகம்., லேசாகச் சிவந்திருந்த கண்கள்., கண்களைச் சுற்றிலும் ஒற்றப் பட்டிருந்த பவுடர்!

அப்போது காட்டிக் கொள்ளாவிட்டாலும், அந்த வினோதினியின் பேச்சில் வருந்தி அழுதிருக்கிறாள்! அதையும் மறைக்கவே ஒப்பனை!

மனோரம்யனுக்கு திவ்யா மீது உள்ளூரச் சிறிதளவு மதிப்பு

உண்டாயிற்று!

இவள் மட்டும் ஒட்டுண்ணியாய் அங்கிளை உறிஞ்சிச் சாப்பிட வந்திராவிட்டால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும்!

# அத்தியாயம் - 7

திவ்யப்பிரகாசத்தின் வீட்டில் வாழ்வது சாந்தமதி, திவ்யா, தம்பி மூவருக்குமே ஒருவாறு பழகிப் போகத் தொடங்கியது.

சந்தோஷமாக அல்ல என்றாலும் சமாளித்து வாழலாயினர்.

மூவரில் சாந்தமதி அங்குள்ள சமையல் அறையில் தன் வேலையைத் தொடங்கினாள்.

அங்குள்ள சமையல்கார மாதையனிடம் இங்கே உள்ள செய்முறை, சுவை , பெரியவருக்குப் பிடித்தமானவை எல்லாம் விசாரித்து, அதை நோட்டுப் புத்தகத்தில் குறித்தும் வைத்துக் கொண்டாள்.

ஏற்கனவே “பூரணி கேட்டரிங்” குடும்பத்தின் மூலமாக சாந்தமதியின் தேங்காய்ப்பால் இனிப்பு பிரபலமாகியிருந்தது. அவர்கள் மூலமாகவும், திவ்யப்பிரகாசத்துக்காகவும், அங்கு வாழ்ந்த பல குடும்பத்தினர் அவளுடன் இயல்பாகப் பழகலாயினர்.

அது ஒருபுறம் இருக்க, சாந்தமதி வீட்டிலும் சமையல் வேலைகளில் மாதையனுக்கு உதவி செய்யத் தொடங்கினாள்.

நான் செய்கிறேன்., நான் ஏவியதைச் செய்து நீ பண்ணு என்றில்லாமல், தானே உதவியாள் போலக் கேட்டுச் செய்யவும், மாதையனுக்கு மனம் உருகிவிட்டது.

தொடக்கத்தில் இருந்தே திவ்யப்பிரகாசத்தோடு சேர்ந்திருந்து பணி செய்கிற குடும்பங்களுள் ஒன்றைச் சேர்ந்தவன் அவன். ஆதலால், குடும்பத்தையும் முழுதாக அறிந்தவன். இப்போது இல்லாது போன தம்பி பற்றி, சாந்தமதி கேளாமலே நிறைய நிறையச் சொன்னான்.

சிலது திவ்யாவின் காதுகளிலும் விழும். விழுந்தவற்றை வைத்து அவளுள் சில கருத்துகள் உருவாயின.  சிலவற்றைத் தெளிவுபடுத்திக் கொள்ளவும் செய்தாள்.

எப்போதுமே நடைப்பயிற்சி, உடல் பயிற்சி விடாமல் செய்கிறவள் திவ்யலட்சுமி.

மாதையனின் பேச்சினால் தெரிய வந்ததும், அவளாக ஊகித்து அறிந்தவையுமான சில விவரங்கள் உந்த, சில குறிப்பிட்ட தருணங்களை

அவள் தன் நடைப்பயிற்சிக்குப் பயன்படுத்தலானாள்.

வீட்டில் பெரும்பாலும் திவ்யா அவளுடைய லாப்டாப்பை வைத்துக் குடைந்து கொண்டிருப்பதை அவ்வப்போது கவனித்த திவ்யப்பிரகாசம் அது பற்றி மனோரம்யனுடன் பேசினார்.

“தம்பி மகளுக்கு ரொம்பப் போரடிக்கிறது போல. கூட்டிப் போய் நம் வாசகசாலை

உறுப்பினர் ஆக்கி விடு. கொஞ்சம் பொழுது நல்லபடியாகக் கழியும். “ என்றால் அவர்.

“சின்னவனையும் அப்படியே ஏதாவது காம்ப்பில் சேர்த்துவிட்டால், அவனுக்கும் நிம்மதி. பாஸ்கெட் பால் பிடிக்குமாம். சின்னப் பையனாக இருக்கிறான். இவன் செட் ஒன்றைச் சேர்த்துப் பயிற்சி கொடுக்க முடியுமா என்று கேட்டு வாப்பா.”

விழி விரித்துப் பார்த்துவிட்டு மனோரம்யன் சிறு முறுவல் செய்தான்.

லேசாக அசடு வழிந்தார் அவர். “சும்மா வீட்டில் இருந்தால்தானே குயுக்தியாக ஏதாவது எண்ணம் தோன்றும்? வேறு வகையில் புத்திக்கு வேலை இருந்தால் அப்படி நேராதல்லவா?” என்று அவர் சமாளிக்க, அவனது புன்னகை விரிந்தது.

அடக்கிப் பார்த்துவிட்டு முடியாமல் தானும் முறுவலித்தார் திவ்யப்பிரகாசம்.

“வந்தது வந்தாயிற்று. சும்மாவே எவ்வளவு நேரம் கிடப்பார்கள், பாவம்!” என்று முடித்தார்

வாசகசாலைக்கு அப்போதே கூட்டிப் போகத் தேடினால், திவ்யா “வாக்கிங்” போயிருப்பதாகச் சொன்னார்கள்.

அன்று மட்டுமல்ல. தொடர்ந்த சில நாட்களிலும் அதே பதில் கிடைத்தது. என்ன மர்மம் என்று விசாரித்தால் இங்கே போனாள் அங்கே போனாள் என்று ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வழி சொன்னார்கள்.

நாலு நாள் பார்த்துவிட்டுத் தனக்குள் ஒரு முடிவுக்கு வந்த மனோரம்யன் அடுத்த நாள் அவள் சென்ற வழியில் குறுக்கிட்டு, “இப்படி நடந்து சென்று உன் பெரியப்பாவின் சொத்துகளை அளக்க முடியாது.” என்றான் ஏளனமாக.

வடிவான புருவம் சுருக்கி, “அதை நான் ஏன் அளக்க வேண்டும்? “

என்று வினவினாள் திவ்யா.

“அங்கிளின் சொத்தின் பெறுமானத்தைக் கணக்கிடத்தான். வேறு எதற்கு இந்த முயற்சி செய்யப் போகிறாய்?”

அவனைக் கண்டதும் நின்றவள் மறுபடியும் நடையைத் தொடங்கி, “அதையும்தான் ஏன் செய்ய வேண்டும்? பெறுமானத்தைக் கணக்கிடுவதைச் சொன்னேன்.” என்று அவனையே கேட்டாள்.

இப்படிக் கேட்டால், இவள் ஒன்றும் அறியாத பேதைப்பெண் என்று அவன் நம்பிவிடுவானா? அது மனோரம்யனிடம் எப்படி நடக்கும்?

பிடிக்காவிட்டாலும் அவளோடு கூடவே நடந்தபடி, “நாளைக்கு என்ன வரும் என்று கணிப்பதற்காகத்தான். அதற்காகத்தானே சுற்றிச் சுற்றிக் கால் நோக நடப்பது?” என்றான் அவன்.

லேசாக ஒரு பார்வையை அவன் புறமாகச் செலுத்திவிட்டு, “நாளைக்கு யாருக்கு என்ன வரும் என்று, நான் ஏன் கணிக்க வேண்டும்?” என்று கேட்டவாறு தொடர்ந்து நடந்தாள் அவள்.

“நீ ஒன்றுமே தெரியாத குழந்தை என்கிறாயாக்கும். நல்ல கதை! இது போலக் காதில் பூ சுற்ற நீ வேறு ஆள் பார்க்க வேண்டும்!” என்றான் அவன்.

“வேறு ஆள் ஏன் பார்க்க வேண்டும்? இப்படி என்று சொல்கிற நீங்கள்தானே, அது பற்றியும் சொல்ல வேண்டும். “ என்றாள் அவள் அலட்டிக்கொள்ளாமலே!

இந்தப் பெண் அவன் வாயைப் பிடுங்கி, அதை வைத்துக் கதை கட்ட முயற்சிக்கிறாள். அதை விட . . .

“இதுவா அதுவா என்று ஊகமும் கேள்வியும் எதற்கு? நீ எதற்காக இப்படி இங்குமங்குமாக நடக்கிறாய் என்று நீயே சொல்லி விடலாமே!” என்று யோசனை சொன்னான் அவன்.

அப்போதும் அவள் மடமடவென்று மனதைக் கொட்டிவிடவில்லை. “நேரடியாக இப்படி ஏன் நடக்கிறாய் என்று நீங்களும் கேட்டிருக்கலாமே!” என்று கூறியவள் சந்தேகமாக நோக்கி, “அப்படித்தானே கேட்கிறீர்கள்தானே?” என்று கேட்டு விஷயத்தை இன்னமும் தெளிவுபடுத்திக் கொண்டாள்.

அப்போதும், “ம்.” என்று அவன் ஒருவாறு இயம்பிய பிறகே, “இங்கே வந்தது வந்துவிட்டோம். வீட்டைத் தவிர ஒன்றுமே தெரியாமல்

இருப்பது தப்பு அல்லவா? அதுதான் சுற்று வட்டாரத்தை அறிமுகப்படுத்திக் கொள்கிறேன். ஒருவேளை பெரியப்பா வீட்டில் வசிப்பது இயலாத விஷயம் என்று ஆகுமேயானால் . . " என்றவளை இடைமறித்து, "அது ஏன் இயலாமல் போகும்? உன் பெரியப்பா இடம் கொடுத்துதானே குடிபெயர்ந்து இங்கே வந்திருக்கிறீர்கள்?" என்று அவன் கேட்டான்.

"வந்த பிறகுதானே வருங்கால இளவரசருக்கு அது பிடிக்கவில்லை என்று தெரிகிறது!" என்று தயங்காமல் பதில் கொடுத்தாள் அவள்.

"அப்படி யாரும் கிடையாது என்றால்?"

"நம்புவது கடினம்."

"ஏனோ?"

"அவருடைய நெருங்கிய உறவினர், மற்றவர் பேச்சு அப்படித்தான் சொல்கிறது. அத்தோடு, வேறு எதற்காக எங்கள் வரவு உங்களுக்கு வெறுப்பாக இருக்க வேண்டும்? இல்லை என்று சொல்ல வேண்டாம். விமான நிலையத்தில் இருந்து நானும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். பத்திரிகையைத் தலைகீழாகப் பிடித்துப் படித்ததில் இருந்து . . "

"பொய். அப்படி யாரும் எண்ணிவிடக் கூடாது என்பதற்காகவே முதலிலேயே கவனமாக. . ." என்றவன் சட்டென நாக்கைக் கடித்துப் பேச்சை நிறுத்தினான்.

வாய்ப்பை விடாமல் பற்றி, "அப்படியானால் வேண்டும் என்றுதான் அப்படி உட்கார்ந்திருந்தீர்கள், இல்லையா? வரவேற்பாய் உணர்ந்துவிடக் கூடாது என்று. நல்ல நாகரீகம்! தமிழ்நாட்டு விருந்தோம்பல் கொடி கட்டிப் பறந்தது! ஏன் சார் அப்படி? உங்களுக்கு நாங்கள் என்ன பாவம் செய்தோம்? "வருங்கால இளவரசன்" பொய் என்றால், எங்கள் மேல் உங்களுக்கு ஏன் இந்த வெறுப்பு?" என்று நேராகக் கேட்டாள் அவள்.

இந்த "வருங்கால இளவரசன்" என்பது தாயின் வேலை என்று அவனுக்குத் தெரியும். இந்தப் பெண் "நெருங்கிய உறவினர்" என்றதுகூட அன்னையைக் குறிப்பதாகவே இருக்கலாம். ஆனால் அதைத் தன் வாயால் ஒத்துக்கொள்ளும்படி ஆகிவிடக் கூடாது. கொஞ்ச நாளில் தாய் தானாக விட்டுவிடுவாள் என்ற நம்பிக்கையும் உண்டு .அப்படி இருக்க, ஒருபோதும் நடக்காத ஒன்றைப் பற்றி இவளிடம் விளக்குவானேன்?

எனவே அந்தப் பேச்சை அப்படியே ஒதுக்கிவிட்டு, “இருபத்தைந்து ஆண்டுகளாக வாழ்ந்த தேசத்தை விட்டு, உங்களைக் கூட்டிக்கொண்டு உன் தாயார் இங்கே வந்த விதம்! உன் அப்பாவைக் கொண்டு அடைய முடியாததை, உன் அப்பா இல்லாத நிலையைக் கொண்டு அடைய முயற்சிப்பவர்களிடம் வேறென் . . . “

அவன் சொல்லி முடிக்கவில்லை.

“போதும் நிறுத்துங்கள். “ என்று சீறிய திவ்யாவின் கண்களில் கனல் பறந்தது. ஆத்திரத்துடன் நோக்கி, “என் அம்மாவையா பழி சொல்லுகிறீர்கள்? அதுவும் என்ன மாதிரிப் பழி! நீங்களும் உங்கள் . . . சே! உங்களைப் போல ஆட்களிடம் நின்று பேசுவதே மடத்தனம்! “ என்றவள் சட்டெனத் திரும்பி நடந்தாள்.

வினாடிக்குள் அவள் முன்னே வந்து வழியை மறைத்து, “உண்மையைச் சொன்னால் உடம்பு எரியும் என்பார்கள். உன் கோபமும் அப்படித்தானோ என்று தோன்றுகிறது.” என்றான் அவன்.

வழி மறைத்து நின்றான் மனோரம்யன். மீறி அவளால் செல்ல முடியாது என்றில்லை. ஆனால் கைகலப்பாய் வளர விடவும் திவ்யாவுக்கு மனமில்லை. அத்தோடு என்ன பேச்சு பேசிவிட்டான்!

எனவே நின்று ஒரு மூச்சு வாங்கிக்கொண்டு அவனை நேராக நோக்கி, “விதுரநீதி படித்திருக்கிறீர்களா?” என்று கேட்டாள்.

“ஏன்? நான் கேட்ட விவரம் எழுதியிருக்கிறாரா? அதுதான் உடம்பு எரிகிற விஷயம்?” என்று ஏளனமாக வினவினான் மனோ.

பார்வை தளராமலே, “அதுவாக இருக்காது என்று உங்களுக்கும் தெரியும். ஆனால் அநியாயப் பழி போடுவது பற்றி விதுரர் எழுதியிருக்கிறார். எங்கேனும் ஒரு குற்றம் நிகழ்ந்தால், அங்கிருப்பவர்களில் ஏழையும் பலவீனனுமானவர் மேல்தான் அந்தப் பழி ஏற்றப்படும் என்று எழுதியிருக்கிறார். என் தாயின் மேல் பழி சுமத்தி அதைத்தானே இப்போது நீங்களும் செய்தீர்கள்? நாங்கள் இங்கே வந்ததன் முழுக் காரணம் என் தந்தையின் சொல் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். கடைசிக் காலத்தில் அப்பா என் கையைப் பற்றி வேண்டியதால் அதைச் செய்வது கடமையாகிவிட்டது என்றும் சொன்னேன். பிறகும் அம்மாவைத்தான் குற்றவாளி ஆக்குகிறீர்கள்! கட்டிப் போட்டு அடிப்பது போல, பெரும் துணையை இழந்து மனதளவில் ஓய்ந்து கிடக்கும் ஒரு பெண்ணை இப்படி நிந்திக்க உங்களுக்கு வெட்கமாக இல்லை? “ என்று ஆத்திரமும் அழுத்தமுமாகக் கேட்டாள் திவ்யா.

ஒரு சிறு மௌனத்தின் பின், “ உன்னை வாசகசாலைக்கு அழைத்துச் செல்லும்படி அங்கிள் சொன்னார். “ என்றான் அவன்.

ஆனால் எந்த உதவியையும் ஏற்கும் மனநிலையில் அவள் இல்லை.

“தேவையில்லை. என் லாப்டாப் வேலை செய்கிறது. வேறு எதுவும்  எனக்கு அவசியமில்லை. அப்படித் தேவைப்படும்போது, விசாரித்து நானே போய்க் கொள்வேன்.”  என்று முடித்துவிட்டு அவனைச் சுற்றிக்கொண்டு வேகமாக நடந்து போய்விட்டாள்.

மறுநாள் மனோரம்யன் திவ்யப்பிரகாசத்தின் வீட்டுக்குச் சென்றபோது திவி தன் நடைப் பயிற்சிக்காக எங்கேயும் செல்லாமல் வீட்டிலேயே இருந்தாள்.

நேற்றுக் கித்தாய்ப்பாக வாசகசாலை வேண்டாம் என்றுவிட்டாள். இப்போது அதற்காகவே காத்திருக்கிறாள் என்று உள்ளூர நகைத்துக் கொண்டான் மனோரம்யன்.

வரட்டும். இந்த வறட்டுப் பெருமையை விட்டுவிட்டு அவளாகவே கேட்கட்டும் என்று எண்ணியபடி, பிரகாசத்துடன் பண்ணைக் கதை பேசி நேரம் போக்கினான்.

இடையில் ராக்கன் கொண்டு வைத்த காய்கறிப் பூரணம் வைத்த கொழுக்கட்டையின் சுவை பற்றிய பேச்சில் சில நிமிஷங்கள் கடந்தன.

சத்தும் சுவையுமாகச் சீனர்களின்  தயாரிப்பு. தந்தை திரவியத்துக்கு மிகவும் பிடிக்கும்! ஸாசைத் தொட்டுக்கொண்டு வெளுத்துக் கட்டுவார்!

தலையை உலுக்கி விட்டுக் கொண்டு, “உங்களுக்கு ரொம்பத் தொல்லையாக இல்லாவிட்டால், எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா? “ என்று தொடங்கினாள் திவ்யா.

பெரிய தகப்பனாரைப் பார்த்துதான். ஆனால் அவர் நேரே இவனைக் கைகாட்டுவாரே என்றுதான் கேட்கத் தயங்கினாள். ஆனால் வேறு வழியில்லை!

இன்னும் தணிந்து வரட்டும் என்பது அவனுக்கு. முன்தினம் என்ன பேச்சு பேசினாள். அது உண்மை என்றே தோன்றினாலும், இன்னமும் நிரூபிக்கப் படாதது! அந்த ஆங்கிலக் கதையில் வருவது போல இவளும் தேர்ந்த நடிகையாக இருந்தால்?

எதற்கும், கொஞ்சம் ஆட்டம் காட்டிவிட்டுதான் ஒத்துக்கொள்ள வேண்டும்!

ஒரு பொழுதுபொக்கு சங்கத்தில் நடந்த சாக்குப்பை ஓட்டம் பற்றி அவன் வேடிக்கையாகச் சொல்லி முடிக்கும்வரை பொறுமையாகக் காத்திருந்துவிட்டு, அதன் பிறகே அவள் மீண்டும் கேட்டாள்.

ஆனால் கேட்டது அவளுடைய தம்பிக்காக. திவ்யா தனக்காகக் கேட்கவில்லையே என்று இருந்தாலும், கேட்ட விஷயம் மனோவுக்கு உற்சாகமளித்தது!

தம்பிக்கு அடுத்த ஆண்டில் கொடைக்கானல் பள்ளியில் இடம் தருவதாகச் சொல்லிவிட்டார்கள். ஆனால்  இடைப்பட்ட மூன்று மாதங்கள் சும்மா இருந்தால், அவனது மூளை ஒரே சோம்பேறியாகிவிடும்.

அது ஒரு தொல்லை என்றால், பாம்பு தவளை அணில் பட்டுப் பூச்சி எல்லாவற்றையும் வீட்டுக்குள் கொண்டுவந்து விடுவான். எனவே, ஏதாவது சிறுவருக்கான பள்ளியில் சேர்த்துவிட்டால், அவனுக்கும் பொழுது போகும்., அவனால் ஆபத்தின்றி எல்லோருமே நிம்மதியாக இருக்கலாம்!

“இங்கே பக்கத்தில்  கூட ஒரு பள்ளி இருப்பதாகக் கேள்வி. நல்ல பள்ளிதானாம். அதில் தம்பிக்கு இடம் பார்க்கப் போகிறேன். பள்ளி இருக்குமிடம் சரியாக தெரியுமா?” என்று திவ்யா விசாரித்தாள்.

மனோரம்யனுக்கு இப்போது இன்னமும் சிரிப்பு வந்தது.

கண்களில் குறுகுறுப்புடன் திவ்யப்பிரகாசத்தைப் பார்க்கப் பல காலத்துக்குப் பிறகு, அவர் முகத்திலும் குறுநகை அரும்ப எழுந்து அங்கிருந்து சென்றார்.

பார்வையைத் திருப்பி, “நான் வேண்”டுமானால் . . .” என்று அவன் தொடங்கும்போதே, “வேண்டாம்.” என்றாள் திவி.

“இந்த இடம் பழக்கம் இல்லாதது என்பதாலேயே செல்லும் வழியும், இருக்குமிடமும் கேட்கிறேன். சொன்னால் நானே எளிதாகப் போய்க் கொள்வேன்.”

“ஓ! அதுதான் தினமும் சுற்றிப் பார்த்து தரைப்படத்தைப் பழக்கப் படுத்தியாயிற்றே! வந்து . . அதற்காகத்தானே, அந்த நடைப் பயிற்சிகள்? அதிலும் முக்கியமாக நான் வரும் சமயங்களில்!”

அவனது பேச்சின் கடைசிப் பகுதியைக் கேளாதது போல ஒதுக்கி, “யாரையும் சார்ந்திருக்கக் கூடாது என்பது என் கொள்கை.” என்றாள் அவள்.

“அப்படியானால் இங்கே வந்திருக்கவே கூடாது.”

“முதலிலேயே சொன்னேன் என்று ஞாபகம். அப்பாவின் விருப்பம் நடப்பது என் கடமையாகிவிட்டது. நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் . . நம்ப மாட்டீர்கள் என்று தெரியும்., ஆனாலும் நான் சொன்னது உண்மை. அவ்வளவுதான்.” என்றாள் குரலில் அழுத்தத்துடனேயே.

கையில் ஏதோ காகிதங்களுடன் திரும்பி வந்த பெரியவர், “இதில் தேவையானதை நிரப்பி வைத்துக்கொள்.” என்று கொடுத்தார்.

அவள் வாங்கிக் கொண்டதும், “இந்த ஒருமுறை மனோவுடன் போய்வந்தால், பிறகு உசிதம் போலச் செய்யலாம். “ என்று அவர் கூறியபோது “அதுதான் சரி.” என்று மனோரம்யனும் ஒப்பவே, அதற்குமேல் அவள் மறுக்கவில்லை.

ஆனால் உள்ளூர, இதை இவன் தாயும், அந்த மனைவியாகப் போகிறவளும் எப்படி ஏற்கப் போகிறார்களோ என்று எண்ணிக் கொண்டாள்.

இரண்டு பேரும் சேர்ந்து மத்தளமே வாசித்தாலும், பாவம், படுவது அவன் பாடு! வேண்டுமட்டும் வாங்கிக் கட்டிக்கொள்ளட்டும்!

அறிந்து கொள்ளும் ஆர்வத்துடனேயே, “இவன் என்ன படிப்பதாக இருக்கிறான்? ஏதாவது ஐடியா இருக்கிறதா?” என்று பெரியவர் வினவினார்.

பொதுவாகத்தான். இன்னமும் பெர் சொல்லிக் கூப்பிட்டு, முகம் பார்த்துப் பேசுவது பழக்கமாகவில்லை. சின்னவனான தம்பி தவிர யாருக்குமே. எனவே, அவளும் அப்படியே பதில் சொன்னாள்.

“வி . . வந்து, அப்பா போல வெட்டினரி மருத்துவர் ஆவதுதான் அவனுக்குப் பிடிக்கும். புழு பூச்சியில் இருந்து யானை வரை பிடிக்கும்.” என்றவள் லேசாக முறுவலித்து, “அதுதான் வளர்ப்பதற்குப் பாம்பையே கேட்கிறானே!” என்று, சற்று இலகுவான குரலில் முடித்தாள்.

மற்றவர்களின் முகங்களிலும் சிறு நகை படர்ந்தது.

பாம்பு கூடாது என்றதை ஒத்துக்கொண்டபோதும், அதற்குள் சில புழுக்கள், மீன் குஞ்சுகள் என்று கொண்டு வந்து உரியவாறு சிறுவன் வளர்க்கத் தொடங்கியிருந்தான்.

ராக்கனிடம் சொல்லி மூடியில் துளையிட்ட சாக்கலேட் டப்பாக்களில் அவன் வளர்த்த பட்டாம் பூச்சி புழுக்கள் இப்போது

கூட்டுப் புழுக்கள் ஆகியிருந்தன. மீன் குஞ்சுகளைப் பிடித்து வந்து பாட்டிலில் நீர் ஊற்றி அவன் வளர்ப்பதைப் பார்த்துவிட்டு, நகர்ப்புறம் சென்ற மனோரம்யன் வண்ண மீன்களைத் தொட்டியோடு வாங்கி வந்து கொடுத்தான்.

அவனுடைய அங்கிள் சொல்லியா? அன்றித் தானாகச் செய்தானா என்று திவ்யா விவரம் ஏதும் கேட்டாளில்லை.

பெரிய தந்தை என்றால் உரிமை காட்ட விரும்புவது போல ஆகிவிடும். மனோரம்யனே என்றாலும் அவனுக்கு நன்றி கூறும் நிலை அவளுக்குப் பிடிக்கவில்லை.

ஆனால் சிறுவனின் ஆர்வம் யாருக்கும் வெறுப்பேற்றவில்லை, பங்கேற்கவே செய்கிறார்கள் என்பது தெரிந்தது. நிம்மதியாகவும் இருந்தது.

“நடந்து போக முடியாத தூரம். அதனால் நீயே கூட்டிப் போப்பா. அந்த வேலை முடிந்து வந்தபின் நாம் கிளம்பலாம். “ என்று பெரிய தந்தை மறுபடியும் கூறவே, திவ்யா மறுக்காமல் எழுந்தாள்.

கார் கிளம்பியதுமே, “அதென்ன “வி . . “ என்று தொடங்கிவிட்டு நிறுத்தி வேறு பேசினாய்?” என்று வினவினான் மனோரம்யன்.

இவன் என்ன இடைவிடாது அவளை வேவு பார்த்துக்கொண்டே இருக்க வேண்டுமா? அப்படி ஒரு சில வினாடிகளுக்குள்ளாக அவள் என்னதான் செய்து விடுவாளாம்? இது போலக் கேள்வி கேட்கவே முன்னொரு தரமும் இவன் அழைத்துச் சென்றான் என்பது அவளுக்கு நினைவு வந்தது.

திரும்பி அவனை நேராகப் பார்த்து, “தம்பியின் எதிர்காலத்துக்கான முதல் விருப்பமாக அப்பா எண்ணியது விவசாயம். அதுதான் சட்டென வாயில் வந்துவிட்டது.” என்றாள் அவள்.

“ஆனால் நிறுத்துவானேன்?”

கேட்டாயல்லவா? வாங்கிக் கட்டிக்கொள் என்று எண்ணியவாறே திவி மேல் நோக்கிக் கைகளை விரித்தாள். “ஐய்யோ, அப்புறம் பெரியப்பாவின் பண்ணை நிலங்களுக்காக அடிப் போடுவதாகச் சொல்ல மாட்டீர்கள்? அந்த நிலங்கள் பின்னொரு காலத்தில் எங்கள் சொந்தமாகும் என்று எதிர்பார்த்து, அதைப் பராமரிக்கவே இந்தப் படிப்பு என்று நான் சொன்னதாகிவிடுமே!” என்றாள் அவள் துடுக்காக.

“ம்ஹூம், எந்தத் தைரியத்தில் என்னிடம் இந்த உண்மை சொல்கிறாய்? இப்போது மட்டும் சந்தேகப்பட மாட்டேனா?”

தட்டென்று ஒலியுடன் கரம் குவித்தாள் அவள். "ஐயா சாமி, உங்களிடம் உண்மை சொல்கிறேன் என்றால் நீங்கள் தெரிந்த நேரடி எதிரி. மறைத்தால் இதை விட மோ மோ மோ . . சமாகக் கற்பனை செய்யக் கூடியவர். கற்பனையோடு நிறுத்துகிறவரும் இல்லை. ஒரு கற்பனைக்கு ஏற்பக் கார்களையே ஒளித்து வைத்த மாதிரி இன்னும் என்னென்ன செய்வீர்களோ, அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம். ஏன் வம்பு, நிஜத்தைச் சொல்வதே மேல் என்றுதான் உண்மையைச் சொன்னேன். " என்றாள்

ஆராயும் பார்வை ஒன்றை அவள் புறம் செலுத்திவிட்டு, "கார் விஷயம் எப்படித் தெரியும்? உளவு பார்த்தாயா?" என்று கேட்டான் அவன்.

அவளது ஒவ்வொரு செயலிலும் வார்த்தையிலும் தேடித் தேடித் தப்புக் காண்கிறவன் இவன். கடைசியாக உளவு பார்க்கிறவள் அவளாமா?

"உளவு வேலை என் பழக்கமில்லை, சார். என் அம்மா சும்மா உட்கார்ந்து உண்கிற ரகம் கிடையாது. அதை இன்றைய மோமோ, அந்தக் கொழுக்கட்டையின் பெயர், அதுவே உங்களுக்குக் காட்டியிருக்கும். அம்மா ரொம்ப சுத்தம் பார்க்கிறவர்களும் கூட. சமையல் அறை சற்று அழுக்காய்த் தெரிகிறது என்று பெயின்ட் அடித்துத் தரச் சொன்னார்கள். பெயின்ட் எங்கே இருக்கும் என்று கேட்டதற்குப் பணியாட்கள் கார் ஷெட்டைக் காட்டினார்கள். பாவம்., அடியாளாக யாரையும் பழக்கி வைக்காததால், உண்மையைச் சொல்லி விட்டார்கள். வீட்டில் உள்ள சாவியைக் கொண்டு திறக்கச் சொல்லி பார்த்தால், பெயின்ட் மட்டுமின்றி கார்களும் நின்றன. பாவம், வேலையாளிடம் எல்லாம் சொல்லித் தயார்ப்படுத்தவில்லை போல., நிஜத்தைச் சொல்லிவிட்டான் என்று புரிந்தது. எனக்குத் தெரியும் என்பது தெரிந்தால் பெரியப்பா கூசுவாரோ என்று எதையும் வெளியே சொல்ல வேண்டாம் என்று ராக்கனைத் தடுத்துவிட்டேன்." என்று வெகு விளக்கமாகச் சொல்லி முடித்தாள் திவ்யலட்சுமி!

லேசாக முகம் கன்றுவதை மனோவால் தவிர்க்க முடியவில்லை.

ஆனாலும் சமாளித்து, "அவ்வளவு யோசிக்கிறவள் என்னிடம் எல்லாம் சொல்வானேன்?" என்று கேட்டான் அவன். "தம்பியின் படிப்பு பற்றிக் கேட்டேன் என்பதால், ஒருவேளை என் மூலமாக விஷயம் அங்கிளிடம் போகும்., காரியம் நடக்கும் என்ற எண்ணமா?" என்று கேட்டான் அவன்.

கண்களை வட்டமாக விரித்தாள் திவி. "உங் . . கள் . .மூலமாகவா? நாங்களே பெரியப்பாவிடம் கேட்டு அவராகவே சரியென்றால் கூட, அதைத் தட்டிவிட முயற்சி செய்யக் கூடிய மனிதர் நீங்கள். நீங்கள் போய்ப் பெரியப்பாவிடம் பேசிக் காரியம் சாதித்துத் தருவீர்கள் என்று நினைப்பதா? ஒருவேளை அந்த சூரியன் மேற்கே உதிக்கிறபோது அப்படியும் நான் ஆசைப்படலாம்! ஆனால் சாரிசார், என் மூளை நல்ல நிலையில் இருப்பதால், இப்போதைக்கு அது போன்ற எண்ணம் வரவில்லை." என்றாள் பெரிய எடுப்பாக!

சும்மாவே ஆடும் பேய். கொட்டுக் கண்டால் விடுமா என்று சொல்வார்கள். சீண்டுகிற மாதிரிதான் அவளும் பேசிவிட்டாள்.

இப்போது இவன் இன்னும் என்ன ஆட்டம் ஆடப் போகிறானோ?

அவள் உள்ளே கவலை தலை நீட்டும்போதே, மனோரம்யன் சட்டெனச் சிரித்தான்.

ஆச்சரியமாகத் தலை திருப்பிப் பார்த்தவள் பிரமித்துப் போனாள்.

இவனுக்குப் பெயர் சரியாகத்தான் வைத்திருக்கிறார்கள்!

காரின் வேகத்தினால் ஓடி மறைந்த பசுமைப் பின்னணியில் லேசாகத் தலை சாய்த்து, வரிசைப் பற்கள் தெரிய அவன் சிரித்த காட்சி மிகவும் அழகாகத்தான் இருந்தது. இங்கே வந்ததில் இருந்து அவனோடு ஒரே மோதலாகவே இருந்ததில், இதை . . அவனது சிரிப்பு இவ்வளவு கவர்ச்சியாக . .மனதிற்கு மிகமிக ரம்யமாக இருக்கும் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை!

திடுமென வினோதினியின் நினைவு வந்தது அவளுக்கு.

வருங்கால மருமகள் என்று மனோரம்யனுடைய தாயார் பாரிஜாதத்தால் அறிமுகம் செய்யப்பட்ட வினோதினி!

# அத்தியாயம் - 8

கண் கூசும் அளவுக்குப் பளபளவென்று ஜொலித்த வினோதினியைக் காட்டி, தன்னுடைய வருங்கால மருமகள் என்று மனோரம்யனுடைய தாயார் பாரிஜாதம் அறிமுகம் செய்து வைத்தது, திவ்யாவுக்கு மிகத் தெளிவாக நினைவு இருந்தது.

அதை உறுதிப்படுத்துவது போல, திவ்யா வெளியே நடைப்பயிற்சி செய்யும்போது, அங்கங்கே அவனும் அவளும் பேசிக்கொண்டு நிற்பதை, சேர்ந்து நடப்பதை திவியும் பார்த்திருக்கிறாள்.

அது போதாதென்று, பெரியப்பாவின் பங்களாவுக்கும் கூட அவனைச் சந்திக்க வினோதினி அவ்வப்போது வந்து நிற்பாள்.

விருந்தை அடுத்த பத்து நாட்களுக்குள் மூன்று தரம் வந்திருக்கிறாள்.

திவ்யாவுக்குத் தெரியாத பண்ணை விஷயங்களைப் பேசுவாள். அது, மற்றவளை ஒன்றும் தெரியாத முட்டாளாகவும் உணர வைத்திருக்கிறது.

இவள் இங்கே உள்ளவள். பண்ணையும் இருக்கிறது. இந்த விவரம் இவளுக்குத் தெரிந்திருப்பது இயல்பே என்று தனக்குள் சொல்லிக்கொண்டபோதும், தாழ்வுணர்ச்சியை விலக்கி ஒதுக்க திவியால் முடிந்ததில்லை.

ஒரு தரம், நமக்குத் தெரியாத பலதும் இவள் அறிந்து வைத்திருக்கிறாளே என்று திவ்யா எண்ணும்போதே, பெரியப்பா திவ்யப்பிரகாசம் வினோதினியை விளித்து, “இதோ பாரம்மா. மனோ இங்கே சும்மா பொழுது போக்க வருவதில்லை. தொழில் விஷயமாக நாங்கள் நிறையப் பேச வேண்டியிருக்கும். நீ அவனோடு பேச வேண்டுமானால் அவனது இல்லத்துக்கோ, வேறெங்கோ போய்ப் பார்த்துப் பேசு. “ என்று சற்று அழுத்தமான குரலில் சொன்ன பிறகுதான் அங்கே வருவதை நிறுத்தினாள்.

நல்லவேளையாக, மனோரம்யனும் பெரியவருக்கு மாறாக எதுவும் கூறவில்லை.

மறுப்பை முகத்தில் காட்டாத நாகரீகமும் அவனுக்கு இருந்தது.

திவ்யாவுக்கு உள்ளூர மகிழ்ச்சிதான். காரணம், இனி இவள் முன்னிலையில் இப்படித் தாழ்வாக உணர வேண்டியது இல்லை என்பது

ஒன்று.

அத்தோடு, அவள் வரும்போதெல்லாம் ஏதோ ஒரு வகையில் தாயையோ, தம்பியையோ . .ஏன் அவளையோ கூட ஏதாவது சொல்லி வருத்தப்படுத்துவதும் நிச்சயமாக இருந்தது.

இந்த இல்லத்தில் சர்வ உரிமைகளுடனும் வளைய வரும் மனோரம்யனுடைய வருங்கால மனைவியை, எந்த உரிமையும் இல்லாமல் தங்க வந்திருக்கும் இந்தக் குடும்பம் என்ன சொல்லி அடக்க முடியும்? தன்னை விடவும் தாய், தம்பிக்காகப் பொறுமையிழந்து கொண்டிருந்தாள் திவ்யா.

வந்த இடத்தில் தன்னால் ஒரு ரசாபாசம் நிகழும்படி விட்டுவிடக் கூடாது என்றே அவள் தன்னை அடக்கிக் கொண்டிருந்தாள்.

ஆனால் நல்லவேளையாகப் இந்த இடத்துக்கு உரியவரே ஏதோ காரணமாக அவளது வருகையை நிறுத்திவிட்டது திவிக்கு நிம்மதியைத் தந்தது.

வெளியே கண்ணில் படுவது குறையவில்லைதான். ஆனால் வேறு வழி செல்ல முடிந்தது என்பதால் திவ்யா வேகமாக விலகிச் சென்றுவிடுவாள் !

ஓயாது போய்ச் சந்திக்கிறாளே, இந்தச் சிடுமூஞ்சியிடம் என்னத்தைக் கண்டாளோ என்று கூட  எண்ணியிருக்கிறாள்.

ஆனால், அத இன்று புரிந்தது. இது போல அடிக்கடி . .அவ்வப்போதேனும் சிரித்தான் என்றால், ஒருத்தி அவனைச்  சுற்றிச் சுற்றி வரமாட்டாளா, என்ன?

என்னவோ திவ்யாவின் உள்ளே உறுத்தியது.

இவன் இந்த மனோரம்யன் ஒன்றும் வினோதினியைக் காதல் பார்வை பார்த்த மாதிரித் தெரியவில்லையே!

அந்தப் பார்வை என்னவென்று அவளுக்குத் தெரியும். நன்றாக இருந்த காலத்தில் அப்பா, அம்மாவைப் பார்க்கும்போதே ஒரு கனிவு தெரியுமே! அடிக்கடி அவரது பார்வை அம்மாவைத் தேடுவதும், ஒருவரை ஒருவர் பார்த்ததும் கண்ணாலேயே சிரிப்பதும் . .. பார்க்கவே எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்!

அம்மாவைப் பார்த்தாலே, அப்பா ஓர் எட்டு மனைவி பக்கமாக எடுத்து வைத்துவிடுவாரே!

ஆனால் . . . இங்கே வினோதினியாக மனோரம்யனிடம்  ஓடி ஓடி

வந்து நின்ற மாதிரி இருந்ததே தவிர, மனோரம்யனாக அவளை நாடிச் சென்று சந்திப்பது போல திவ்யாவுக்குத் தோன்றியது இல்லை. அவர்கள் வீட்டில் கொடுத்த வரவேற்பு விருந்தில் கூட, இதேதானே நடந்தது?

ஒன்று பாரிஜாதம் ஆன்ட்டி மகனைக் கூப்பிட்டு வினோதினியிடம் அனுப்பினாள். அல்லது, வினோதினி அவன் இருக்கமிடம் தேடிச் சென்று பேசினாள். மற்றபடி . . .

ஒருவேளை, இந்த “வருங்கால மருமகள்” என்பதே, அந்த இரு பெண்களின் ஆசையில் விளைந்த கதையாக இருக்குமோ? சின்னவளுக்கு மனோரம்யனின் தோற்றத்தில் ஆசை! அவன் தாயாருக்கோ, வினோதினியோடு வரக் கூடிய எஸ்டேட் மேல் கண். சொத்தோடு சொத்து சேருமல்லவா?

“சுந்தரவனத்”தின் வருங்கால இளவரசனாகக் கூடக் கதை பரப்பவில்லையா? அது கூட அந்த இருவரின் கற்பனைதானோ, என்னவோ?

அப்படித்தான் என்று அதற்கான காரணங்களை யோசிக்கத் தொடங்கியபோதுதான் திவ்யலட்சுமி சட்டென அதிர்ந்தாள்.

யார் யாரை விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், யார் சொத்து யாருக்குப் போனாலும் போகாவிட்டாலும், அவளுக்கு என்ன வந்தது?

எதற்காக இந்தப் பைத்தியக்காரத்தனமான யோசனை?

எதற்காக என்பதைக் கண் பதிந்திருந்த காட்சி சொல்லப் பார்வையை விலக்கிக் கொள்ளுமாறு சுய உணர்வுக்கு வந்துவிட்ட அவளது மூளை கண்களுக்குக் கட்டளையிடும்போதே, அவளது காதுகள் எதையோ கேட்டன.

“என்ன திவ்யா, அப்படி வைத்த கண் வாங்காமல் பார்க்கிறாய்? பார்வையை அகற்ற இயலாத அளவுக்கு நான் ரொம்ப அழகாக இருக்கிறேனா? இரும்பை இழுக்கும் காந்தம் மாதிரி! “ என்று மனோரம்யன்தான் கேட்டுக் கொண்டிருந்தான்.

என்ன மடத்தனம்? ஏதோ . . பட்டிக்காட்டான் மிட்டாய்க்கடையைப் பார்த்த மாதிரி என்று சொல்வார்களே! அதுபோலவா இப்படி இவனை வெறித்து நோக்குவது?

முக்கியமாக, அப்படி நோக்கி மாட்டிக் கொள்வது?

இப்போது இவனிடம் என்ன சொல்லி சமாளிப்பது? மக்கு மூளையே சற்று வேகமாக யோசியேன்!

சும்மா இல்லை இல்லை என்று மறுத்தால் “எங்கப்பன் குதிருக்குள் இல்லை” என்பது போலப் பொய்யாகத் தெரியும். . . .

மேலே அவள் யோசிக்குமுன், அவன் அடுத்த கேள்வியைக் கேட்டுவிட்டான்.

“அட, முகம் கூடச் சிவக்கிறதே! நான் சொன்னது நிஜம்தான் போல? காந்தம் போல என்றேனே, அதுதான் நிஜமா?”

ஓய்வெடுத்த நேரத்துக்கும் சேர்த்து திவ்யாவின் மூளை அதி விரைவாகச் செயல்பட, உரிய பதில் வாயில் உடனே வந்தது.

“ஒருவருக்கு மிகுந்த கோபம் வந்தாலும் முகம் சிவக்கும் என்பது கூடத் தெரியாமல் பேசினால் அப்படிப் பேசுகிறவரை என்னதான் செய்வது? வருகிற கோபத்துக்குக் கழுத்தைப் பிடித்து உலுக்கலாம் போல இருக்கிறது. ஆனால் நானும் இருக்கிற காரை அல்லவா ஓட்டிக்கொண்டு இருக்கிறீர்கள்! என்னமும் ஆகிவிட்டால், எனக்கு அல்லவா ஆபத்து!” என்றாள் அவள் எரிச்சல் குரலில்.

“ஹூம்? சமாளிப்பு நன்றாகத்தான் இருக்கிறது. பரந்த மனதையும் காட்டுகிறது. ஆனால், அவ்வளவு நேரம் என் முகத்தையே எதற்காகப் பார்த்தாயாம்? அதற்குப் பதிலைக் காணோமே!” என்று மடக்கிவிட்ட திருப்தியோடு வினவினான் அவன்.

ஆனால், திவ்யாவின் மூளைதான் வேலை செய்யத் தொடங்கிவிட்டதே!

“உங்கள் முகமா? நான் எங்கே அதைப் பார்த்தேன்? உங்கள் பக்கத்துக் கண்ணாடிக்கு வெளியே பச்சைப் பசேல் என்று அழ . .கான மரம் செடிகொடிகள்! இடையிடையே கொத்துக் கொத்தாக வண்ணப் பூக்கள் வேறு. கறுப்பாக பார்டர் கட்டிய மாதிரி உங்கள் தலை முடிவேறு எடுத்துக் காட்டியதா? சூப்பர்! கண்ணை எடுக்கவே முடியவில்லை. அங்கே பக்கத்தில் மலேஷியாவில் கூட, இப்படித்தான் பசேல் என்று அழகாக இருக்கும்! அதைப் பார்க்கவே அவ்வப்போது நாங்கள் அங்கே போய்வருவோம்!” என்று எப்படியோ, எதையோ கோவையாகச் சொல்லி சமாளித்தாள் அவள்.

“ஓ!” என்றான் அவன் இன்னமும் அவளை முழுதாக நம்பாதவன் போலவே.

அடுத்து, சற்று ஒடுக்கமான “ஹேர்பின்” வளைவில் காரைக் கவனத்துடன் செலுத்தியவன், “இடப்பக்கமாக மேலே பார். அதுதான் உன் தம்பி படிக்கப் போகிற பள்ளி.” என்றான்.

பள்ளி நேரம், அங்கே போவது வருவது, அது இதென்று பேச்சு மாறிவிட, உள்ளூர அப்பாடி என்று பெருமூச்சு விட்டாள் திவ்யா.

பள்ளி வாகனம் இருந்தது. நன்கு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட திறமையான ஓட்டுனர். காலை உணவைக் கொடுத்து அனுப்பிவிட்டால் மதியத்துக்கு மேல் திருப்பிக் கொண்டு வந்து விடும்வரை, பிள்ளைகள் பள்ளியின் பொறுப்பு.

விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது பையனின் பெயரை சூர்யப்பிரகாசம் என்று திவ்யா எழுதியதை வியப்புடன் பார்த்தான் மனோரம்யன்.

மகளுக்கும் மகனுக்கும் இந்தப் பெயர்களை வைத்தது, திரவியம் சாராகத்தான் இருக்க வேண்டும். அப்படியானால், அவர் அண்ணனை அலட்சியப்படுத்திச் செல்லவில்லையா? சென்றிருந்தால், இந்தப் பெயர்களை வைக்கத் தேவையே இல்லையே! அடியோடு மறக்கத்தானே முயற்சித்திருப்பார்?

அதே போலப் பள்ளியை நிறுவி நடத்துகிறவர்களில் பெரியப்பா, மனோரம்யனின் பெயர்களைக் கண்டதும் திவ்யாவுக்கும் அதிசயமாகிப் போயிற்று!

அவள் தன் நோக்கத்தைத் தெரிவித்ததும், அவர்கள் இருவரும் குறுகுறுவென்று ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டதன் காரணம், அவளுக்கு இப்போது புரிந்தது.

பெரும்பாலும், பண்ணைப் பணியாளர்களின் பிள்ளைகள் அங்கே படித்துக் கொண்டிருந்தார்கள்.

மக்களைத் தூரத்துக்கு அனுப்ப விரும்பாத பெரிய குடும்பத்துப் பிள்ளைகளும் படித்தனர். எல்லோருக்கும் சீருடை என்பதால் அதிக வேறுபாடு தெரியவில்லை.

“பிள்ளைகளைக் காரில் பள்ளிக்கு அனுப்புவதையும் நாங்கள் அனுமதித்தது இல்லை. எல்லோரும் இந்தப் பள்ளியுடைய மாணவர்கள் என்பதுதான் எல்லோரின் எண்ணமாக இருக்கவே பாடுபடுகிறோம். “ என்றார் தலைமை ஆசிரியர்.

இது போன்ற கொள்கைகள் உள்ள பள்ளியில், வெறும் மூன்று மாதத்து இடைவெளியை நிரப்புவதற்காகத் தம்பியைச் சேர்க்கிறோமே என்று சற்றுக் கூசியது திவ்யாவுக்கு.

ஆனால், இப்படி ஒரு பள்ளியைத் தொடங்கி நடத்துவது பற்றி, மனோரம்யனிடம் சற்று மரியாதையும் ஏற்பட்டது.

பெரியப்பாவின் அறிவுரையாக இருக்கக் கூடும். என்றாலும், அதை ஏற்றுச் செலவும் செயலும் புரிவது சிறப்புதானே?

அதுவும் அவனுடைய தாயாரின் குணத்துக்கு, ரொம்பவே சிறப்புதான்!

இருவரின் மனங்களிலும் ஒவ்வொரு காரணத்துக்காக இளக்கம் தோன்றியிருக்கவே, ஒருவருக்கொருவர் போராடுவது மெல்லக் குறைந்து . . . நின்று போனது என்றே சொல்லலாம்.

வெறுமனே நடந்து அலைந்து அந்தப் பிரதேசத்தைப் பற்றி அறிய முடியாது என்று அவளைத் தன்னோடு அழைத்துச் சென்று பல இடங்களைக் காட்டினான்.

பெரும்பாலும் திவ்யப்பிரகாசத்தினதும் அவனதுமான இடங்கள்.

ஒரு பழ எஸ்டேட்டில், கண்ணுக்கெட்டிய தூரம் வரை பழங்களுடன் வரிசையாக நின்ற ஆரஞ்சு மரங்களைப் பார்த்து அசந்தாள்! அதுவும், ஒட்டிய இன்னும் சில தோட்டங்களும் அவனதே என்று அறிந்தவவளுக்கு மேலும் ஆச்சரியமாக இருந்தது.

இவனுக்கு எதற்காக இன்னொருவரின் சொத்து? எல்லாம் இவன் தாயின் ஆசையில் உதித்த கதைகளே என்று இப்போது அவள் நிச்சயமாக நம்பினாள்.

அது மட்டுமின்றி, இயற்கை அழகில் அவளுக்கு இருந்த ஆர்வத்தைக் கவனித்து, சில அருமையான “வ்யூ பாயின்ட்ஸ்” காண திவ்யாவை மனோரம்யன் அழைத்துச் சென்றான்.

காலை வேளைகளில் அவன் கூட்டிப்போன இடங்களில் மேகங்கள உடலின் மேல் பட்டுத் தடவிச் செல்வது போன்ற உணர்வில் திவ்யா மெய் சிலிர்த்துப் போனாள்.

“மஞ்சு வந்து கொஞ்சும்” என்று குற்றாலக் குறவஞ்சியில் வரும் வரிகளைக் கவிராயர் அனுபவித்துத்தான் பாடியிருக்க வேண்டும் என்று எண்ணினாள்!

பாடலை அவள் முணுமுணுப்பதை ஆச்சரியமாகக் கேட்டு, “உனக்குப் பாடத் தெரியுமா? “ என்று ஆச்சரியத்துடன் கேட்டான் அவன்.

“இம். கொஞ்சம் கற்றேன். தமிழ் நாட்டில் இருந்து வந்த ஓர் ஆசிரியை கற்றுக் கொடுத்தார்கள். அந்த வகுப்புக்கு அம்மா அனுப்பினார்கள்.”

“நடனம்? “

“அதுவும் அப்படித்தான். “

“பாட்டு, ஆட்டம்! சகலகலாவல்லி! எதையும் தெரியாது என்று குறை சொல்ல முடியாது. திருமணத்துக்குத் தயார் என்று போர்டு மாட்டவில்லையா? நல்ல மாப்பிள்ளை சிக்கியிருப்பானே!” என்றான் அவன் கிண்டலாக.

இனிமை கலைந்துவிட, ஆத்திரத்துடன் அவனை முறைத்துப் பார்த்தாள் அவள். “ஆண் புத்தி! பெண்கள் எதையும் திருமண நோக்கத்துடனேயே செய்வதாக எண்ணுவது! நாட்டியம், சங்கீதம் இரண்டுமே அருமையான கலைகள். எனக்கு ஆர்வம் இருந்ததாலேயே இரண்டையும் எனக்குக் கற்பிக்க அம்மா ஏற்பாடு செய்தார்கள். உள்நோக்கம் ஒன்றும் கிடையாது. “ என்றாள் குரலில் அழுத்தத்துடன்.

அவன் தோளைக் குலுக்கிவிட்டு நகரவும், சினம் மிக அவன் முன்னே சென்று வழியை மறித்தாள். “என்ன அப்படி நம்பாதது போலத் தோளைக் குலுக்கினீர்கள்?

“கற்பிக்க ஏற்பாடு செய்தது உன் அம்மா என்பதால் நம்புவது கடினம்.” என்றான் அவன் சுருக்கமாக.

“அதாவது?” என்று கிறீச்சிட்டாள் அவள். “என் அம்மா திருமணத்துக்காக ஏங்கிக் கொண்டிருந்தார்கள். அப்பாவைப் பார்த்ததும் மயக்கிப் பிடித்துவிட்டார்கள் என்கிறீர்கள்.”

“ஊர் அறிந்த உண்மை.”

“மண்ணாங்கட்டி! அப்பா அம்மாவுக்கிடையே இருந்தது காதல். ஒருவர் மேல் ஒருவருக்கு உண்மையான நேசம்.” என்றாள் அவள் குரலை உயர்த்தி.

“அப்படியானால், அங்கிளுடைய அனுமதி கிடைக்கும் வரை காத்திருப்பதுதானே? அதென்ன, தந்தையாக வளர்த்தவரை அலட்சியம் செய்துத் திருமணமே செய்துகொண்டு வந்து நிற்பது? பெரியவர்களைத் தூக்கி எறிந்துவிட்டு தன் சுகத்தை மட்டுமே நினைப்பதுதான் உன்னதக் காதலாக்கும்? கல்யாணத்தையே பண்ணிக்கொண்டு வந்து நின்றால் எப்படியும் ஒத்துக்கொள்ள வைத்துவிடலாம் என்கிற திமிர்! திருமணத்தையே தியாகம் செய்து வளர்த்தவர், அதனாலேயே தனி மரமாக நிற்பவர் என்பது மறந்துவிட்டது. தனிமரமான அவரத சொத்து எப்படியும் பிறகு கைக்கு வந்துவிடும் என்கிற திண்ணக்கம்!” என்றான் அவன் எகத்தாளமாக.

“பொய்! அவசரமாகத் திருமணம் செய்ததற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். ஆனால், சொத்து பற்றி என் அம்மா எண்ணியதே இல்லை!”

“பின்னே இத்தனை ஆண்டுகளில் திரும்பி வந்து அங்கிளைப் பார்த்து மன்னிப்புக் கேட்டிருக்கலாமே!”

“எப்படி வருவார்கள்?” என்று பதிலுக்குக் கேட்டாள் அவள். “சொத்துக்காகவே அப்பாவை மணந்ததாக அம்மா மேல் ஏற்கனவே குற்றம்சாட்டப் பட்டிருக்கிறது. இருவருக்குமே பிற்பாடு சொத்து எப்படியும் கைக்கு வரும் என்கிற திண்ணக்கம் என்று நீங்களே இப்போது சொன்னீர்களே! அவர்கள் மனம் வருந்தி வந்திருந்தால் கூட, யார் நம்புவார்கள்? அந்தக் குற்றச்சாட்டு உண்மையாகி விட்டதாகத்தானே கூறியிருப்பீர்கள்! பெரியப்பாவே, “அவளுக்கு வேண்டியது சொத்து. என்ன வேண்டுமோ எடுத்துக்கொண்டு போ” என்றுதானே சொன்னாராம்! அதனால்தான் இருவரும் ஒன்றும் சொல்லாமலே கிளம்பிப் போனார்களாம். பெரியப்பாவிடம் எவ்வளவோ பாசம் இருந்தும் திரும்பி வராததின் காரணமும் அதுவேதான். “ என்றாள் அவள் அழுத்தம் திருத்தமாக.

“பெரிய பாசம்!”

“பெரிய பாசமேதான். எங்கள் இருவரின் பெயர்களும் இன்று நேற்று வைத்ததில்லை. அடிக்கடி தனியே நின்று தமிழ்நாடு இருக்கும் திசையை வெறித்தபடி அப்பா நிற்பதுண்டு. தந்தையாக வளர்த்தவரின் நினைவு, அப்பாவாக உள்ளே வரும்வரை தொந்திரவு செய்யக் கூடாது என்று அம்மா சொல்வார்கள். அ துவும் தம்பி வளர வளர, அவனைச் சின்ன வயது தானாகவும், தன்னையே பெரியப்பா நிலையிலும் வைத்துக் கற்பனை செய்து பேசுவார். “இவனிடம் எனக்குள்ள பாசம்தானே, அண்ணனுக்கு என்னிடம் இருந்தது” என்பார். அவனைப் பெரியப்பாவிடம் காட்ட ஆசை, ஆனால் சொத்துக்காக வந்ததாக எண்ணிவிடக் கூடாதே என்று வாய்விட்டே சொல்லியிருக்கிறார். . . .” என்று சொல்லிக்கொண்டே வந்தவள், பழைய நினைவில் சற்று நேரம் வெளியை வெறித்த வண்ணம் அசையாது நின்றாள்.

பின்னர், “நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும், எங்களுக்கும் அதே எண்ணம்தான். “ என்றவள் திரும்பி வந்த வழி நோக்கி நடக்கலானாள்.

சொல்லுக்கு நேர் மாறாக இப்போது நீங்கள் மூவரும் இங்கே வந்திருப்பதை என்ன சொல்வது? என்னதான் தம்பிக்கான பள்ளிச்

செலவுகளை எல்லாம் நீயே கட்டியபோதும், “குந்தித் தின்றால் குன்றும் மாளும்” என்பார்களே!

தட்டுமுட்டுச் சாமான்களை விற்று அங்கிருந்து கொண்டு வந்திருக்கும் பணம் காலியான பிறகு, இந்த ரோஷத்தை விட்டு திவ்யப்பிரகாசம் அங்கிளிடம் பணத்துக்காகப் போய் நின்றுதானே ஆக வேண்டும்? அப்போது, அதை என்ன சொல்லி நியாயப்படுத்துவாய்?

பலவாறு உள்ளூர எண்ணியபோதும், சும்மாவே உணர்ச்சி வசப்பட்டிருந்த அவளிடம் மேலும் இது பற்றிப் பேச அப்போது மனோரம்யனுக்கு மனம் வரவில்லை.

இடைப்பட்ட இந்த உரசல் நடவாதது போலக் காட்டிக் கொள் இருவரும் முயற்சி செய்யவே நிலைமை பழைய மாதிரி ஆயிற்று.

ஒரு நாள், மதுரை செல்வதால், அங்கிருந்து எதையேனும் வாங்கி வர வேண்டுமா என்று கேட்டு மனோரம்யன் வந்தான் .

“அழகைப் பார்க்கிறேன் என்று சாய்வான, செங்குத்தான இடங்களுக்குத் தனியே செல்ல வேண்டாம். “ என்று திவிக்கு எச்சரிக்கை செய்தான்.

அவள் யோசனையோடு பார்க்கவும் , “இதோ பார், நான் சொல்வதை அலட்சியமாக நினையாதே! மழை வேறு தூறியிருக்கிறது. தரையே வழுக்கி விடக் கூடும். விழுந்தால், எங்கே போய் நிற்பாய் என்று யாருக்கும் தெரியாது. என்ன கதியில் இருப்பாய் என்றும் சொல்ல முடியாது. தயவு பண்ணி எச்சரிக்கையோடு இரு.” என்றான். கண்டிப்பான குரலில்.

ஏதோ ஏற்றுமதி தொடர்பாக அவன் சென்றிருந்ததால், வேலை முடிந்து அவன் திரும்பி வர ஒரு வாரம் ஆயிற்று.

அழகிய இடங்களுக்கு அழைத்துச் சென்று, அதன் விவரங்களை எடுத்துச் சொல்ல மனோரம்யன் இல்லாததால், பண்ணைப் பிரதேசம் களையிழந்து காண்பதாக திவ்யலட்சுமி எண்ணினாள்.

ஒருவேளை, இரண்டு தரம் வெளியே நடக்கச் செல்கையில் வினோதினியைச் சந்திக்க நேர்ந்து, விரைவிலேயே அவளது திருமணத்தை நடத்த அவளுடைய பெற்றோர் படாடோபமாகத் திட்டமிடுவது பற்றி அவள் சொல்ல, விதியே என்று அவளது பேச்சைக் கேட்ம நேர்ந்ததில், திவ்யாவுக்குத் தலைவலியே வந்துவிட்டது.

“மனோ உனக்குப் பண்ணைகளைக் காட்டுவதாகச் சொன்னாரே, எங்கள் பண்ணைகள் எல்லாவற்றையும் காட்டினாரா? கார் செல்லும்

பாதை தாண்டியும் வெகு தூரம் போக வேண்டுமே! உன்னால் அவ்வளவு தூரம் நடக்க முடிந்ததா?” என்று அவள் கேட்க பதில் சொல்லுமுன் திவ்யா திணறிப் போனாள்.

இவள் என்ன, அவளது குடும்பத்து எஸ்டேட்களைப் பற்றி மட்டும் கேட்கிறாளா? அல்லது, மனோரம்யனின் தோட்டங்களையும் சேர்த்து “எங்கள்” என்று குறிப்பிட்டாளா?

கல்யாணம் பற்றி நிறையக் கூறினாளே.

அது வேறு சீக்கிரமே நடக்கப் போகிறதா?

ரம்யன் அது பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே! சொல்லுமளவு அவனுக்கு அவள் முக்கியம் இல்லையோ?

மனம் குழம்பித் தவித்தது திவ்யாவுக்கு!

இந்நிலையில், இந்தக் கவலைகள் அனைத்தையும் சிறிதாக்கி அடியோடு மறக்கடிக்கும் விதமாக ஒன்று நிகழ்ந்தது.

அவளுடைய அருமைத் தம்பி, மரத்தின் மேல் இருந்து விழுந்து, கை எலும்பை உடைத்துக் கொண்டதாகப் பள்ளியில் இருந்து தகவல் வந்தது.

உடனே வந்து அவனை அழைத்துச் செல்லுமாறும்! செய்வதறியாது திகைத்தாள் திவ்யா!

# அத்தியாயம் - 9

தம்பி சூர்யா கையை உடைத்துக்கொண்டு கிடக்கிறான். ஆனால் அவனைப் போய்ப் பார்க்க வேண்டும். எப்படி?

மனோரம்யன் அந்தப் பிரதேசத்திலேயே இல்லை.

சாந்தமதியை நல்லதோ கெட்டதோ ஏதோ ஒரு வேளையாக “பூரணி” குடும்பத்தில் சில சமையல் அயிட்டங்கள் செய்து காட்டச் சொல்லிக் கூட்டிப் போயிருந்தனர். மகனுக்கு ஒன்று என்றால் தாயார் பதறிப் போவாள்!

காரோட்டியைக் கூட்டிக்கொண்டு பெரியப்பாவும் டவர் ஏரியா தாண்டிச் சென்றிருந்தார்.

தம்பியிடம் போவது எப்படி?

செய்வதறியாமல் சுற்றுமுற்றும் பார்வை அலைந்தபோது ஒரு புறமாக நின்ற ஜீப் அவள் கண்ணில் பட்டது.

ஜீப் இதுவரை அவள் ஓட்டியதில்லை. ஆனால் அடிப்படை எல்லாவற்றுக்கும் ஒன்றுதானே!

அவள் யோசித்தது சில கணங்களே!

ஓடிப் போய் சுற்று மதில் பெரிய கேட்டைத் திறந்து வைத்தாள்.

உள்ளே சென்று, பள்ளிக்குப் போவதாக ஒரு காகிதத்தில் எழுதி டீவி பக்கத்தில் வைத்தாள் அலமாரியைத் திறந்து சாவியை எடுத்துக்கொண்டு வந்து ஜீப்பில் ஏறினாள்.

ஜீப் கிளம்பும் சத்தத்தில் எட்டிப் பார்த்த ராக்கன் “வேண்டாம்” என்பது போல ஏதோ கத்தினான். ஆனால் அவன் ஓடி வருமுன் ஜீப் எல்லை தாண்டிவிட்டது.

வெளியே சற்று தூரம் சென்றதும் நிறுத்தி, முன்னே பின்னே செலுத்தி, பிரேக்கையும்  சரிபார்த்தவள் அதற்கு மேல் இயன்ற அளவு வேகமாக, ஆனால் மிகுந்த கட்டுப்பாட்டுடனே ஜீப்பை ஓட்டிச் சென்றாள்.

அவசரம் என்று கண்மண் தெரியாமல் ஓட்டிச்சென்று அவளும் விழுந்து வைத்தால் யாருக்கு லாபம்? இன்னும் பெரும் கஷ்டம் ஆகிவிடுமே!

மனோரம்யன் காரை ஓட்டியபோது, திவ்யா அதை ரசனையோடு

கவனித்திருந்தாள். இப்போது லேசான தூறலில் பாதை வேறு நனைந்திருந்ததால் இரு மடங்கு கவனத்துடன் வண்டியை ஓட்டினாள்.

வளைவுகள், ஹேர்பின் திருப்பங்கள் . . அகலக் குறைவான இடங்கள் . . .முழுக் கவனத்துடன் ஓட்டியதால் எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் சீக்கிரமே பள்ளியை அடைந்தாள் அவள்.

ஒரு வேளை அங்குள்ள பண்ணைக்குடும்பத்துப் பெண்கள் ஜீப் ஓட்டுவது இல்லையோ, என்னவோ, பலரும் ஆர்வத்துடனேயே அவளைச் சூழ்ந்துகொண்டனர். வியந்து நோக்கி எல்லோரும் சொன்னது “தனியாகவா வந்தீர்கள், நல்லபடியாக வந்து சேர்ந்தீர்களே!” என்பதே ஆகும்.

அவளது கவலை புரிந்து, தம்பியிடம் அழைத்துச் சென்றார்கள்.

“கொஞ்சம் பொறுத்துப் பார்த்திருக்கலாம். ஆனால் முதலில் தைரியமாக மரத்தில் ஏறிய சூர்யப்பிரகாசம் விழுந்ததும் ரொம்பவும் பயந்துவிட்டான். அதனால்தான் . . . “ என்று அழைத்துப் போன ஆசிரியர் சொன்னது அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

தம்பி பயந்துவிட்டானா? பொதுவாக அவன் பயப்படுகிறவன் இல்லையே!

தம்பி அஞ்சியிருந்தது உண்மையே. ஆனால் அதன் காரணம் வேறு.

தமக்கையை அருகில் வந்ததும் அச்சத்தில் உதடு நடுங்க, “அக்கா என் கை அசைக்க முடியாமல் ஒரு மாதிரித் தொங்குகிறதே! என் கையை வெட்டி எடுத்து விடுவார்களா?” என்று கலக்கத்துடன் கேட்டான்.

தந்தை நோய்வாய்ப் பட்ட பிறகு வீட்டில் எல்லோருமே திவியைச் சார்ந்திருக்கத் தொடங்கியிருந்தனர்

தந்தையும் சேர்ந்துதான்! தலைமைப்பதவி ஏற்பதற்குப் பயிற்சி அவளுக்குக் கொடுத்தாரோ, அல்லது அவளது யோசனைகளை மதிப்பதற்கு மற்ற இருவருக்கும் பயிற்சி கொடுத்தாரோ?

கவலையிலும் பயத்திலும் திவியை நாடுவது, தாய்க்கும் மகனுக்கும் இயல்பாக இருந்தது.

இப்போதும் அவளைக் கண்டதும், தன் மிகப் பெரிய அச்சத்தைத் தம்பி அவளிடம்தான் தெரிவித்தான்.

தம்பியின் கை அசையாதபடிக்குச் சிம்பு வைத்துக் கட்டியிருந்தார்கள். அதனுள் கை எலும்புகள் எந்த நிலையில்

இருக்கின்றனவோ?

அவளும் தன் பயத்தைக் காட்டிக் கொள்ளாமல், “தம்பி, நீ வளரும் பையன். கை எப்படி உடைந்திருந்தாலும், உரிய விதமாகச் சேர்த்துக் கட்டியதும் ஒழுங்காகவே வளர்ந்து சேர்ந்துவிடும். ஆனால் என்ன ஒரே ஒரு கஷ்டம்தான். . .” என்று இழுத்தாள்.

“என்னக்கா, என்ன?” என்று படபடத்தான் பையன்.

“கொஞ்ச காலத்துக்கு, இப்படி ஹிரோ மாதிரி மரமேறிப் பறவைக் குஞ்சைக் கூட்டில் வைக்கவோ, மேடு பள்ளம் பாராமல் பின்னோடு ஓடி பட்டர்ஃப்ளை பிடிக்கவோ இயலாது. எங்கள் எல்லாரையும் போல, நீயும் சாதாரண மனிதனாகச் சும்மாதான் இருந்தாக வேண்டும்! அது உலக மகாக் கஷ்டமில்லை?”என்று திவ்யா கேட்ட விதத்தில் தம்பிக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

தம்பியுடன்  வேடிக்கையாகப் பேசும்போதே, திவியின் மூளை வெகு வேகமாக வேலை செய்தது.

தம்பிக்கு இப்போது வைத்திய உதவி உடனே அவசியம்! மற்றபடி, அவன் கை குணப்படுத்த இயலாத அளவுக்குப் போய்விடலாம். ஆனால், இவனை இப்போது கூட்டிப் போவது எப்படி?

வரும்போது ஏற்றம் மட்டுமே. அவளால் சமாளிக்க முடிந்தது. இந்த மழை ஈரத்தில் இறக்கத்தில் ஜீப்பை ஓட்டுவது, அவளால் முடியுமா?

ஓட்டுகிறேன் என்று அசட்டுத் துணிச்சலில் தம்பியையும் ஆபத்தில் மாட்டி வைத்து விடக் கூடாதே!

ஏதேனும் நேர்ந்துவிட்டால் தாயார் எப்படித் தாங்குவாள்? தம்பியின் இந்தக் கை எப்படித் தாங்கும்?

என்னென்னவொ பயனற்ற எண்ணங்கள் மனதில் முட்டி மோத, திவ்யா குழம்பித் தவித்தது வெகு சில நிமிஷங்களே.

அதற்குள் சத்தமாக உறுமிக்கொண்டு ஒரு கார் மிக வேகமாக வந்து, பிரேக் போட்டு நிறுத்தப்பட, அதிலிருந்து மனோரம்யன் இறங்கி வந்தான்!

மனோரம்யன்! இவன் மதுரையில் அல்லவா இருந்தான்? அங்கே வேலை முடிந்து திரும்பினாலும், அவனது வீட்டுக்கல்லவா சென்றிருக்க வேண்டும்?

அல்லது, வருங்கால மனைவி வீட்டுக்கு!

ஆனால், இங்கே எப்படி வந்தான்?

எப்படி வந்திருந்தாலும், அதை நினைத்து சந்தோஷப்படு மனமே என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள் அவள். முக்கியமாக ஆறுதல் அடை!

ஏனெனில், தம்பிக்கோ, அவளுக்கோ இனி ஆபத்தில்லை!

ஆறுதலும் மகிழ்ச்சியுமாக அவனருகே சென்றால், மனோரம்யன் அவள் பக்கம் திரும்பிகூடப் பார்த்தானில்லை!

ஆனால் மற்றவர்களிடம் வேகமாகப் பேசினான். அந்தப் பேச்சைக் கேட்டவாறு நின்ற திவ்யாவுக்குப் பலவிஷயங்கள் புரிபட்டன.

பொதுவாகச் சின்னப் பிள்ளைகள், சிறுவர் சிறுமியர் படிக்கும் பள்ளியில் இது போன்ற நிலைகள் ஏற்படுவது இயல்பே. மருத்துவர் உதவி எளிதாகக் கிட்டும்வண்ணம் ஏதேனும் ஏற்பாடு இருக்கத்தானே செய்யும்? இங்கும் இருந்தது.

மனோரம்யன் அது பற்றிக் கேட்டபோது, வழக்கமாக மாணவர்களைக் கவனிக்கும் மருத்துவர் அவருடைய குடும்பத்தில் ஒரு பிரச்சினை என்று தேனி பக்கம் ஒரு கிராமத்துக்குப் போயிருப்பதாகத் தெரியவந்தது.

போனவரும் பதிலுக்கு ஆள் வைத்தாக வேண்டும் என்ற விதிப்படி, இன்னோரு மருத்துவரிடம் பொறுப்பைக் கொடுத்துவிட்டுத்தான் சென்றிருந்தார்.

ஆனால், அவருக்குப் பதிலாக இந்தப் பள்ளி பொறுப்பைக் கூடுதலாக ஏற்றிருந்தவர், இந்த மலையின் நேர் எதிர் கடைசியில் தேன் எடுத்துக் கொண்டிருந்தபோது கால் வழுக்கி விழுந்துவிட்ட ஒருவனுக்குச் சிகிச்சை கொடுத்துக்கொண்டு இருப்பதாகவும் அங்கே முடித்துக்கொண்டு வருவதற்கு வெகு தாமதம் ஆகக் கூடும் என்பதால், இயன்றவரை வேறு வழி பார்க்குமாறு கூறிவிட்டார்.

தைரியமாக மரத்தில் ஏறிப் பறவைக் குஞ்சை வைத்த சிறுவனோ விழுந்ததிலோ, வலியாலோ பயந்து “அக்கா, அம்மா” என்று தவிக்கத் தொடங்கிவிட்டான்.

எப்படியும் விவரம் தெரிவிப்பது முறை என்று வீட்டுக்கு ஃபோன் போட்டதாகவும் எடுத்துப் பேசிய திவ்யாவிடம் விவரம் சொன்னதாகவும் பள்ளியில் கூறினார்கள்.

வீட்டாரைப் பார்த்தாலே அவன் அமைதியாகக் கூடும். பண்ணையில் யாருக்கேனும் கை மருத்துவம் தெரிந்தால் அதையும் செய்யலாம். இன்னும் அக்கம் பக்கம் மருத்துவம் தெரிந்தவர் இருந்தால்

கூட்டி வரலாம் என்றது ஐடியா.

குரங்கு மாதிரி மரம் ஏறி இறங்குகிறவன் தம்பி. எப்படித்தான் விழுந்தானோ என்று அவள் முனகியது கேட்டுத் தலைமை ஆசிரியர் விவரம் சொன்னார்.

கூட்டிலிருந்து கீழே விழுந்து கத்திக் கொண்டிருந்த பறவைக் குஞ்சு ஒன்றை மறுபடியும் அதன் கூட்டில் வைத்திருக்கிறான். ஒரு கையில் குஞ்சோடு ஏறிவிட்டவன், ஒரு மெல்லிய கிளையில் இருந்த கூட்டில் எம்பிக் குஞ்சை வைக்கும்போது கிளை வளைந்து தடுமாறினான். தூறல் ஈரம் வேறு இருந்து வழுக்கியதால் விழுந்துவிட்டான்.

“ஆனால் பையனுக்கு ரொம்ப இரக்க குணம். அந்தக் குஞ்சு கத்தியதை அவனால் தாங்கவே முடியவில்லை. ஆனால் . . .இப்படியாகிவிட்டதே!

“தம்பிக்கு மிருகங்கள், பறவைகள் எதுவானாலும் ரொம்பப் பிரியம்.” என்று அவள் சொன்னதையும் மனோரம்யன் கவனித்த மாதிரியே தெரியவில்லை. ஏன், காதில் விழுந்த மாதிரி கூடக் காட்டிக்கொள்ளவில்லை!

ஏன்? கேட்டிருக்கும்தானே?

ஆனால், அவனது கவனம் வேறு விஷயத்தில் இருந்தது.

இந்தப் பள்ளிச் சிறுவர்களைக் கூட்டி வந்து விட்டபின், வேன் வேறு வேலைகளுக்குப் போய்விடும். முக்கியமாக மாற்றுத் திறன் கொண்ட சிறுவர் பள்ளிக்கு.

இங்கே இப்போது கவனமாக இருப்பதுதான் வழி.

“சிறுவர்களை இன்னம் கொஞ்சம் கவனமாகப் பார்க்க ஏற்பாடு பண்ணுங்கள் சார். இப்போது திவ்யப்பிரகாசம் சார் பெரிதாக எதுவும் சொல்லப் போவது இல்லை. ஆனால், மற்ற பிள்ளைகளுடைய பெற்றோர் தகராறு பண்ணக் கூடும். எப்படியும் பள்ளிக்கு வந்துவிட்டால் நம் பொறுப்புதானே? கவனமாக இருங்கள். இவனுக்கு சீக்கிரமாக மருத்துவ உதவி தேவை. நான் கிளம்புகிறேன். “ என்ற மனோரம்யன், அலுங்காமல் தம்பியைக் காரில் ஏற்றினான்.

“ஜீப் . . “ என்று இழுத்தவளுக்குப் பதில் சொல்லாமல், “ஜீப் சாவியை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள், மணி. அப்புறமாக யாராவது டிரைவரிடம் வண்டியைக் கொண்டு திவ்யப்பிரகாசம் சார் வீட்டில் விடச் சொல்லுங்கள்.” என்று யாரிடமோ கூறிவிட்டுக் கார்ல் ஏறி ஸ்டார்ட் செய்தான்.

அவசரமாக அந்த மணியிடம் சாவியைக் கொடுத்துவிட்டு, மொத்தத்தில் ஒரு “நன்றி!” யுடன் ஓடிப்போய்க் காரில் ஏறினாள் திவ்யா.

மனோரம்யன் அவளிடம் கோபமாக இருப்பது அவளுக்குப் புரிந்தது. ஆனால் அதன் காரணம்தான் கொஞ்சமும் புரியவில்லை.

யாரிடமும் அனுமதி பெறாமல் அவள் ஜீப்பை எடுத்தது கோபமா?

பெரியப்பா வீட்டில் இல்லாதபோது, அவள் யாரிடம் கேட்க முடியும்?

முதலில், வண்டி அவளுடைய பெரியப்பாவுக்குச் சொந்தமானது. அதை அவள் ஓட்டிச் சென்றால், இவன் என்ன ஆத்திரப்படுவது?

முதலில் இவன் எப்படி இங்கே வந்து சேர்ந்தான்?

நல்லவேளையாக வந்தான் என்றாலும், அவள் மேல் கோபப்பட, இவனுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?

மனோரம்யனின் காரணமற்ற கோபம் மனதை வாட்ட, தன்னை நியாயப்படுத்த ஏதேதோ யோசித்தவளைத் தம்பியின் முனகல் நடப்புக்குக் கொண்டு வந்தது.

ரம்யன் மட்டும் சரியான நேரத்தில் அங்கே வரவில்லை என்றால், தம்பி இன்னும் எவ்வளவு நேரம் வலியை சகித்தபடி பள்ளியிலேயே இருக்க நேர்ந்திருக்குமோ?

எப்படியும், இந்த ஈர நசுநசுப்பில், இத்தனை வளைவுகளையும், இறக்கங்களையும் சமாளித்து அவளால் ஜீப்பை இறக்கத்தில் ஓட்டியிருக்கவே முடியாது.

வேறு உதவி வரும்வரை அங்கேயே காத்திருந்தாலும், அந்த நேரம் தம்பியின் சிகிச்சைக்கு மிகத் தேவையான மணித் துளிகளாகக் கூட இருக்கலாம்.

இப்போதே தாமதமாகியிருக்கக் கூடாது கடவுளே என்று வேண்டிக்கொண்டு தம்பியின் கரத்தை மிக மென்மையாகத் திவ்யா வருடி விட்டாள்.

“இன்னும் கொஞ்ச நேரம் பொறுத்துக்கொள், சூர்யாக்கண்ணா. மனோ சார் உன்னைச் சீக்கிரமாக உன்னை இங்கள்ள நல்ல டாக்டரிடம் கூட்டிப் போய் விடுவார். அப்புறம் உனக்கு எல்லாம் சரியாகிவிடும்.”

““நல்ல நேரத்தில் வந்தீர்கள், மனோரம்யன் சார். மதுரையில் இருந்தவர் எப்படி வந்தீர்கள் என்று எனக்கு ஒரே ஆச்சரியம். அங்கே வேலை முடிந்துவிட்டதா? . . மனோ சார் . . . எஎன்ன?”

பேசிக்கொண்டே வந்த திவ்யாவுக்கு அவன் ஊம் என்று கூடக் குரல் கொடுக்காதது உறைக்க என்னவென்று காரணம் வினவினாள்.

“இந்தப் பாதையில், இந்த மாதிரி சூழ்நிலையில் முழுக் கவனத்துடன் காரை ஓட்ட வேண்டும். ஓட்டுகிறவரிடம் பேச்சுக் கொடுக்காமல் இருப்பது வண்டியில் இருக்கும் எல்லோருக்குமே நல்லது. காரை ஓட்டுகிறவர் உட்பட.”

கடித்த பற்களுக்கிடையே வார்த்தைகளைத் துப்புவது என்றால் இதுதான் போல என்று திவ்யாவுக்குத் தோன்றியது.

அவ்வளவு கவனத்துடன் அவன் காரை ஓட்டினான் என்றால், அப்படி ஓட்ட வேண்டியிருந்தது என்றால், அவனது கவனத்தைக் கெடுப்பது தவறு . .தப்பு . . . . முட்டாள்த்தனம்!

அந்த மலைப் பிரதேசத்தில் எல்லாமே ஏற்ற இறக்கங்களும், வளைவு நெளிவுகளுமான பாதையே என்றாலும், பெருமளவு புழங்கும் பாதைக்கு வந்த பிறகும், மனோரம்யன் எந்த விவரமும் சொன்னானில்லை.

சற்றுப் பொறுத்துப் பார்த்துவிட்டு, அவளே “மனோர . .” என்று தொடங்கியபோது, “பேசாமல் வருகிறாயா?” என்று சீறினான் அவன். “டாக்டர் சிகிச்சை செய்யும்போது தம்பி உன்னைத் தேடுவானோ என்றுதான் உன்னைக் கூடக் கூட்டி வருகிறேன். என் யோசனையில் குறுக்கிட்டுக் கெடுக்க அல்ல! உன்னால் பேசாதிருக்க முடியவில்லை என்றால் சொல்லு. கொஞ்சம் தள்ளித்தான் அங்கிளின் இல்லம் இருக்கிறது. அங்கே கொண்டு விட்டுவிட்டே போகிறேன்!”

வார்த்தைகளிலேயே அனலடித்தது போல அவள் உணர்ந்தாள். பேசாமல் பெரியப்பா இடத்தில் இறங்கி விடலாம்தான். ஆனால், தம்பியை எப்படி இவனோடு தனித்து அனுப்புவது?

சற்று முன் இந்த மனோவே சொன்னது போலச் சிகிச்சையின்போது தம்பி அவளைத் தேடினால்?

வாயை இறுக மூடிக்கொண்டு அசையாமல் அமர்ந்தாள் அவள்.

ஆனாலும் இப்போதும் இவனுக்கு ஏன் இந்தக் கோபம் என்பதுதான் அவளைப் போட்டுக் குடைந்துகொண்டிருந்தது.

அதிர்ச்சியோ வலியோ, தமக்கையின் தோளில் தம்பி சோர்ந்து கிடந்தான்.

வீட்டில் தாய் திரும்பி வந்திருந்தால், அவளுக்குச் சொல்ல

வேண்டும்.

மகள் எழுதி வைத்திருந்த செய்தியைப்  படித்திருந்தால், இப்போது தவித்துப் போயிருப்பாள். பெரியப்பாவும் கூட . . .ஆனால் எப்படித் தகவல் சொல்வது?

முதலிலேயே மருத்துவரிடம் எல்லாம் சொல்லியிருப்பான் போல!

“முதலில் எக்ஸ்ரே . .” என்று தம்பியைச் சக்கர நாற்காலியில் வைத்து த் தள்ளிக்கொண்டு போனார்கள்.

எக்ஸ்ரே அறைக் கதவு வரை அவள் கையை இறுகப் பற்றியிருந்தான் சூர்யா.

தம்பிக்குப் பின்னே மூடிய கதவைச் சில கணங்கள் வெறித்துவிட்டுத் திரும்பினால், மனோரம்யன் மொபைலில் பேசிக் கொண்டிருந்தான். “

“ . . . ஆமாம். எக்ஸ்ரே பார்த்த பிறகுதான் கைக்கு சிகிச்சை பண்ணி மாவுக் கட்டு போடுவார்களாம். தாமதம் ஆகும்.  . .இம். நான் கூடவே இருப்பேன் கவலை வேண்டாம். சாந்தமதி ஆன்ட்டியிடம் எல்லாம் சொல்லிவிடுங்கள்.” என்று பேச்சை முடித்தான் அவன்.

நீ பேச வேண்டுமா என்று ஒரு வார்த்தை கேட்கவில்லையே என்று வருத்தமாக இருந்தது அவளுக்கு.

ஆனால், இதற்கு மேல் என்னத்தைப் பேசுவது? கவலையையும் பயத்தையும்தானே?

அவளுடைய அம்மா, இப்போது மகனுக்காக ஏதாவது சுலோகம் சொல்லிக் கொண்டிருப்பார்கள். இன்றைய நிலையில் அதைக் கலைப்பதை விடச் சும்மா இருப்பதே மேல்!

தம்பியின் கை எலும்புகளைச் சரியான நிலைக்குக் கொண்டுவந்து அசைய விடாமல் மாவுக்கட்டு போட்டு . . . நேரமாகும்.

விரோதி போல வேறு புறம் திரும்பி உட்கார்ந்திருப்பனிடம் என்ன பேசுவது?

ஒருவேளை மதுரையில் இருந்து வந்ததும் வராததுமாகப் பெரியப்பா சொல்லித் தம்பிக்காக பள்ளிக்கு ஓடி வந்தானோ?

சாப்பிடக் கூட இல்லையோ? அதனால் அசதியோ?

இங்கே கான்டீன் இருப்பதாகப் போட்டிருந்தது.

அவன் அருகே சென்று, “நீங்கள் சாப்பிட்டீர்களா? எதற்கும்

காண்டீனில் இருந்து ஏதாவது வாங்கி வரட்டுமா?” என்று மெல்லக் கேட்டாள்.

“வேண்டாம்” என்று எரிச்சலில் சொல்லக்கூடும் என்று யோசித்தாள்தான்.

ஆனால், “எனக்கு வேண்டியதைப் பார்த்துக்கொள்ள எனக்குத் தெரியும். வேறு யாரும் உதவிக்கு வரத் தேவையில்லை.” என்று முகத்தில் அடித்தாற்போலத் தூக்கி எறிந்து பேசுவான் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

அதுவும் மதுரைக்குச் செல்லுமுன் ஒரு நண்பனைப் போலப் பழகிவிட்டு . . .ஏன் இப்படி?

சும்மாவே தம்பிக்கு அடிபட்டது., பழக்கமற்ற வாகனத்தை பழக்கமற்ற மலைப்பாதையில் கவலையோடு ஓட்டியது, தம்பி அழுதது எல்லாமுமாக அவளும் கலங்கிப் போயிருந்தாள்.

ஒட்டகத் துரும்போ, அன்றி இதுதான் பெரும் பாதிப்போ, மனோரம்யனின் கோபம் அவளுக்குத் தாங்க முடியாததாகிப் போயிற்று.

தன்னை மீறிக் கண்ணோரம் கரித்துத் தொண்டை அடைத்தது.

இவன் முன்னிலையில் அழுது விடக் கூடாது என்று எண்ணி, அவசரமாக விலகிப் போனாள்.

நல்லவேளையாக இந்த மலைப்பிரதேசத்தில் செடி கொடிகளுக்குப் பஞ்சமில்லை.

குத்துச் செடி போலப் பெரிதாக வளர்ந்திருந்த குறுமரம் ஒன்றின் பின்னே சென்றவள் கண்ணீரை அடக்கப் படாத பாடு பட்டாள்.

ஆனால் சமாளிப்பதற்கான அந்த அவகாசம் கூட அவளுக்குக் கொடுக்க மனமற்றவன் போல, அவள் பின்னோடு வந்த மனோரம்யன் ஆத்திரத்துடன் அவளைப் பிடித்துத் தன்புறம் திருப்பினான்.

“என்ன தைரியம் உனக்கு? எவ்வளவு திமிர் இருந்திருந்தால் யாரிடமும் கேளாமல் ஜீப்பை எடுத்து மலைப்பாதையில் ஓட்டிச் சென்றிருப்பாய்? பள்ளி வேன்களுக்கு ஓட்டுகிறவர்களை எப்படித் தேர்ந்தெடுப்போம் தெரியுமா? தெ .ரி . யுமா? ஒவ்வொரு வளைவிலும் ஏற்ற இறக்கத்திலும் ஆள் நின்று, பத்துத் தடவை ஓட்ட வைத்து எல்லோருக்கும் திருப்தியானால் மட்டுமே அவர்களை வண்டியை ஓட்ட அமர்த்துவோம். நீ . . .ஒரு தடவை கூட அந்த வண்டியை ஓட்டியதில்லை. இந்த மலைப் பாதைகளிலும் பழகவில்லை. அப்படி

இருக்க . . . எ ன்ன தைரியம் உனக்கு? சொல்லு! சொல்லு! சொல்லு என்கிறேனே . . .” என்று சீறியவன் அவளுக்குப் பதில் சொல்ல இடமே தராமல், அவளது தோள்களைப் பிடி[த்து உலுக்கு உலுக்கென்று உலுக்கியெடுத்துவிட்டான்.

அவனுக்கு இருந்த கோபத்தில் தன் முழுப் பலத்தையும் காட்டுகிறோம் என்பதையே அவன் உணரவில்லை.

முதலில் ஓரளவு சமாளித்து “நா . .ன்  . . நா . .” என்று விளக்க முயன்ற திவ்யா மேலே மேலே அவன் உலுக்கவும்  அடியோடு சக்தியிழந்து, அவன் மேலேயே விழுந்து பேச்சுக்கும் மூச்சுக்கும் தவிக்கலானாள்.

# அத்தியாயம் - 10

திவியின் தலை பிடிப்பற்றது போல அவன் மார்பில் முட்டத் தொடங்கிய பிறகே, மனோரம்யனுக்கு ஒருவாறு சுய உணர்வு வந்து, அவளை உலுக்குவதை நிறுத்தினான்.

ஆனால் வேரறுந்த கொடி போல அவள் சாய்வதைக் கண்டு, அவனுமே பயந்துவிட்டான். அருகில் கிடந்த சிமென்ட் பெஞ்ச்சில் அவளைப் பின்னே சாய்த்து அமர்த்திவிட்டு ஓடிப்போய்த் தண்ணீர் எடுத்து வந்து அவள் முகத்தில் தெளித்தான் .

திவி திகைத்து விழிக்கவும், அருகே அமர்ந்து, தன் தோளிலேயே அவளைச் சாத்திக்கொண்டு, “ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை!” என்று தட்டிக் கொடுத்தான்.

அவள் மெல்ல நிமிரவே, கொஞ்சம் தண்ணீரைக் குடிக்கவும் வைத்தான்.

சற்று நேரம் அவனது தோள் வளைவில் ஒண்டியபடியே திவ்யா உட்கார்ந்திருந்தாள்.

மெல்ல உடம்பில் சுரணை வர, மனதும் வேலை செய்தது.

முதலில் அமர்ந்திருந்த நிலை புரிந்தது.

சுகமாகவே இருந்தபோதும், ஏன் இப்படி இவன் மேல் சாய்ந்து கிடக்கிறோம் என்ற யோசனை வந்தது.

மனோரம்யன் திட்டியதும், கோபமாக உலுக்கியதும் நினைவு வரச் சட்டென நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

அவன் தடுக்கவில்லை.

அவனை நேரே பார்த்து, “நீ . .நீங்கள் என்னைத் திட்டினீர்கள்!” என்று குற்றம் சாட்டினாள் திவ்யா .

“ஓங்கி நாலு சாத்து சாத்தாமல் திட்டியதோடு விட்டேனே என்று சந்தோஷப்படு!” என்றான் அவன்.

லேசாகப் புருவம் சுருக்கி யோசித்துவிட்டு, “திட்டியதோடு விடவில்லை. உலுக்கி எடுத்தீர்கள்.” என்று மறுபடியும் குறைப்பட்டாள் அவள்.

“அத்தோடும்தான் விட்டேனே என்று மகிழ்ச்சி அடை.” என்றவனின் முகம் மாறியது. “என்ன காரியம் செய்தாய், திவி? ஒரு

வேலை செய்யுமுன் சற்று யோசிப்பது இல்லையா? ஜீப்பில் உட்காரவே சங்கடப்பட்டவள் நீ. நீங்கள் எல்லோருமேதான். புதியவர்களுக்கு மலைப் பாதை எவ்வளவு ஆபத்தானது தெரியுமா? தம்பிக்கு அடி பட்டுவிட்டது என்றால், கிடைத்த வண்டியை எடுத்துக்கொண்டு கிளம்பி விடுவாயா? தன்னைப் பற்றி நினைத்துப் பாராத உன் தம்பிப் பாசம் பாராட்டப்பட வேண்டியதுதான். ஆனால் அவனை முழுசாகப் போய்ப் பார்ப்பது அதைவிட முக்கியம் இல்லையா? வழியில் ஜீப்போடு விழுந்து வைத்தால் . . . எலும்புகூட மிஞ்சாது தெரியுமா? ஒவ்வொரு வளைவிலும் எப் . .படிப் பயந்து நடுங்க வைத்துவிட்டாய்! பள்ளியில் உன்னைப் பார்த்ததும், கண் மண் தெரியாமல் அறைய வேண்டும் போல வந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு நின்றேன். நீயானால் ஒன்றுமே நடவாதது போல சாப்பாடு பற்றிக் கேட்கிறாய்!" என்றவனின் குரல் அப்போதும் கோபத்தைக் காட்டியது!

ஜீப்பை வெளியே கொண்டுபோய் இப்படியும் அப்படியும் ஓட்டிப் பார்த்தது அவளுக்கு நினைவு வந்தது. அவளைப் போய் யோசிக்காத முட்டாள் என்கிறானே! ஆண் புத்தி!

"என்னை என்ன, ஒன்றும் தெரியாத முட்டாள் என்றா எண்ணினீர்கள்?" என்றவள் தன் முயற்சி பற்றிக் கூறினாள்.

அவன் ஒப்புவதாக இல்லை. "என்ன, இந்தப் பக்கம் ஒருதரம், அந்தப் பக்கம் , முன்னே பின்னே எடுத்துப் பார்த்தாயாக்கும். அது போதுமா? ஏதோ உன் அம்மாவின் அதிருஷ்டம். இரண்டு பிள்ளைகளும் நல்லபடியாகப் பிழைத்திருக்கிறீர்கள். அத்தோடு விட்டுவிடு. பன்னிப் பன்னி முடிந்ததைப் பற்றிப் பேசி எரிச்சல் மூட்டாதே." என்று முடித்தான் அவன்.

திவ்யாவுக்கும் மேலும் சண்டை போடத் தென்பில்லை., மனமும் இல்லை.

தன் அங்கிள் வீட்டு விருந்தாளிக்கு எது நடந்தாலும், அவரைப் பாதிக்குமே என்று எண்ணியிருப்பான். கோபம் வந்துவிட்டது. போகிறான்.

எப்படியோ, அவளது நலத்துக்காகத்தானே அவன் கோபப்பட்டதும்? இவன் கூறுவது போல இத்தோடு விட்டுவிடலாம்.

"அங்கே ஹாலில் போய்த் தம்பிக்காகக் காத்திருக்கலாம்." என்று எழுந்தால், கால்கள் இன்னமும் வலுவற்று லேசாகத் தள்ளாடின.

சட்டென அவளைத் தோளோடு சேர்த்துத் தாங்கலாகத் தன் மேல்

லேசாச் சாய்த்தபடி நடந்தான் மனோரம்யன்.

அவள் தயக்கம் காட்டவும், “இது மருத்துவமனை. உனக்கும் உடம்புக்கு ஏதோ என்று நினைப்பார்களே தவிரத் தப்பாக எண்ண மாட்டார்கள். உனக்கும் இன்னும் திடமாக இல்லைதானே? வா.” என்று அழைத்துச் சென்றான்.

அவளும் சரிதான் என்று அவனது ஆதரவோடு செல்லலானாள்!

அத்தோடு, அவளும்தான் என்ன, கால்கள் இப்படித் துவளாமல் இருந்தால் இவ்வளவு திட்டிப் பேசிய இவன் மேல் ரோஷமில்லாமல் சாய்ந்துகொண்டு நடப்பாளா?

ஏதேதோ சமாதானம் சொல்லிக் கொண்டாலும், மனோரம்யனின் பரிவும் கனிவும் திவ்யாவுக்கு சுகமாகத்தான் இருந்தன.

மரத்திலிருந்து விழுந்து தம்பி கையை உடைத்துக்கொண்ட அதிர்ச்சி மாறி, மாவுக் கட்டு போட்டு, முழுதாகக் குணமாக்கி விடலாம் என்று தெரிந்த பிறகே, திவ்யாவின் கவலை மிகவும் குறைந்து போயிருந்தது.

எனவே மாவுக் கட்டு போட்டு முடித்து அவன் வருவதற்காகக் காத்திருந்த காலமும் அப்படி ஒன்றும் கஷ்டமாக இருக்கவில்லை.

இன்னும் தம்பிக்காகக் காத்திருந்த நேரத்தில் மனோரம்யன் வாங்கி வந்த காஃபியை அருந்தியபடி இருவரும் பேசிக் கொண்டிருந்ததும் நன்றாகத்தான் இருந்தது. இருவருக்குமே.

அவர்கள் இரண்டு பேருக்குமே ஒரு வகையில் ஒத்த மனப்போக்கு இருந்ததால், விஷயங்களைத் தேடிக் கண்டுபிடித்துப் பேசும் அவசியம் இல்லாமல் உரையாடல் சரளமாகப் போயிற்று.

விளக்கம் சொல்லத் தேவையில்லாமல் ஜோக்கை உடனே புரிந்துகொண்டு திவ்யா சிரித்த விதம் ரம்யனுக்கு ரொம்பப் பிடித்தது.

அனாவசியமான அங்க சேஷ்டைகள், அலட்டல்கள் நெளிவு குழைவுகள் இல்லாமல் சாதாரணமாகப் பேசும் பழக்கம் இப்போது மறைந்துவிட்டதோ என்று கூட மனோரம்யன் அவ்வப்போது நினைத்ததுண்டு.

அப்படி இல்லை என்பது போலத் திவி சாதாரணமாகப் பேசியதும் பழகியதும் அவனுக்குப் பிடித்துப் போயிற்று.

இவள் மட்டும் தந்தை இறந்ததும், பெரியப்பா சொத்துக்கு உடைமைக்காரர் ஆவதற்காக இங்கே வந்திராவிட்டால் . . .என்று ஒரு

தரம் அவன் வருத்தமாகக் கூட நினைத்தான்.

ஆனால் மூட்டை கட்டிக்கொண்டு அம்மாவும் மக்களும் வந்தே விட்ட பிறகு அதைப் பற்றி நினைப்பதில் பயனில்லை. மேலே எரிச்சல் ஏற்படாத வண்ணம் இவர்கள் நடந்து கொள்வதைப் பார்த்துக் கொஞ்சம் நிம்மதி அடைய வேண்டியதுதான்!

ஓரளவு அப்படித்தான் மனோரம்யன் மதுரைக்குச் செல்லு முன்னரும் இருவரும் பழகினார்கள்.  இப்போதும் அதையே தொடர்ந்தார்கள்!

கட்டுப் போட்டுக்கொண்டு வந்த சூரியப்பரகாசத்தை வீட்டில் கொண்டு வந்து விட்டுவிட்டு, வீட்டுப் பெரியவர்களிடம் சற்று பேசிவிட்டுத்தான் மனோரம்யன் அவன் வீட்டுக்குக் கிளம்பிப் போனான்.

திவ்யாவையும் அவனையும் பற்றி யாரும் தப்பாக நினைக்க மாட்டார்கள் என்று மனோரம்யன் மனதார நம்பித்தான் சொன்னான்.

ஆனால் அவர்களைத் தப்பாகவும் நோக்கி அதற்குப் பழிவாங்கவும் யாரேனும் துடிக்கக் கூடும் என்று அந்த இருவருக்குமே தெரியாது!

அசௌகரியமாக இருந்தபோதும், தம்பியின் முகத்தில் ஒரே பெருமிதம்!

“அந்தக் குஞ்சைக் காப்பாற்றி விட்டேன், பெரியப்பா! அதன் கூட்டிலேயே பத்திரமாக வைத்துவிட்டேன்!” என்று அவன் கையை உயர்த்திப் பெருமையாகக் கூறுகையில் வைத்த கண் வாங்காமல் பார்த்தார் திவ்யப்பிரகாசம்.

“அவன் அப்பா மாதிரியே பேசுகிறான், மனோ! அணில் குட்டி ஒன்றைக் காப்பாற்றிவிட்டுத் திரவியம் இதே போலத்தான் பெருமையடித்தான். அதையெல்லாம் பார்த்து விட்டுத்தான் , அவனை வெட்டினரி டாக்டருக்குப் படிக்க வைத்தேன். இவனுக்கும் அதுவே ஆசையாம். “ என்றார் ஒரு விதமான கனவுக் கண்களுடன்.

ஆமோதித்தோ மறுத்தோ, மனோரம்யன் எதுவும் சொல்லவில்லை.

இருவருமாக பண்ணை நிலவரம், இன்னும் பொதுவான விஷயங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு கிண்ணங்களில் பாயசம் போல ஒன்றுடன் சாந்தமதி வேலையாளுடன் அங்கே வந்தாள்.

ராக்கன் டீபாயில் பாயசக் கிண்ணங்களை வைத்துவிட்டுப்

போய்விட, சாந்தமதி நின்று மனோரம்யனைப் பார்த்துப் நன்றி உரைத்தாள்.

பொதுவாகக் கேட்டதற்குப் பதில் தவிர அவளாக வந்து யாரிடமுமே பேசியதில்லை.

அவளது வருகைக்காக எழுந்து நின்ற மனோரம்யன், “பெரிதாக நன்றி கூற என்ன இருக்கிறது? அதுதான் எனக்கு முன்பே உங்கள் பெண் அங்கே போய்விட்டாளே! “ என்றான் எந்த வித உணர்ச்சியையும் காட்டாத குரலில்.

இன்னமும் திவ்யா ஜீப்பை ஓட்டிக்கொண்டு அங்கே சென்றதை, அவனால் ஜீரணிக்க முடியவில்லை. சரி என்று ஏற்கவும் மனமில்லை. ஆனால் சும்மாவே மகனுக்காகப் பதறியிருக்கும் இந்தத் தாயிடம் அதை வேறு சொல்வானேன் என்று அவன் எண்ணினான்.

ஆனால், “அவள் சென்றதுதான் எனக்குப் பெரிய கவலை.” என்று சாந்தமதி கூறியது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவன் வியப்புடன் நோக்கவும், “ஆமாம் தம்பி. “மகனுக்கு வேண்டியதைப்  பள்ளியில் செய்திருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது . ஆனால் திவி? அவள் கெட்டிக்காரிதான். கவனமாகத்தான் ஓட்டியிருப்பாள். ஆனால் எதற்கும் அளவிருக்கிறதே! பழக்கமற்ற வாகனம், அறியாத மலைப் பாதை . . .கூடவே தம்பிக்காக மனம் பதறியிருந்த நிலை! கலா வீட்டிலிருந்து வந்து, விவரம் அறிந்ததில் இருந்து எனக்கு ஒரே தவிப்பாக இருந்தது. நீங்கள் மருத்துவமனையில் இருந்து தகவல் தெரிவித்த பிறகுதான் நிம்மதியாயிற்று. தாங்க்ஸ் தம்பி. சாப்பிடுங்கள்.” என்றவள் அதற்குமேல் நின்று அனாவசியப் பேச்சுக் கொடுக்காமல் திரும்பிச் சென்றுவிட்டாள்.

அனாவசிய அலட்டல்கள் இல்லாத அமைதி , உணர்ச்சி கொட்டாத தெளிவான பேச்சு, கர்வம் காட்டாத நிமிர்ந்த நடை!

நம் தாயாரும் இப்படி இருக்கலாமே என்று ஆசைப்பட்டக் கூடிய தோற்றம்.

ஆனால் தந்தையாய் வளர்த்தவரைத் தனியாக நிறுத்திவிட்டுத் தம்பியைப் பிரித்துப் போக எப்படி மனம் வந்தது? காதல், உயிர் நேசம் என்று கண்ட காரணம் சொன்னாலும், அப்படிப்பட்ட கணவர் இறந்ததுமே பிள்ளைகளோடு இங்கே வந்து உட்கார்ந்து விட்டதை என்ன சொல்லி நியாயப்படுத்த முடியும்?

முடிந்த வரை உறிஞ்சித் தின்ன வந்திருப்பதாக மட்டும்தானே கூற

முடியும்?

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே இந்தச் சொத்தும் பணமும்தான் இந்தப் பெண்மணியின் குறிக்கோளாக இருந்திருக்குமோ என்றுதானே எண்ணத் தோன்றுகிறது?

மறந்து தொலைக்க முடியாதபடி, திவ்யாவிடமும் இதே குறை!

“என்னப்பா, என்ன யோசனை?” என்று திவ்யப்பிரகாசம் கேட்ட பிறகே, பேசிக் கொண்டிருந்த விஷயம் பற்றிய நினைவு, மனோரம்யனுக்கு வந்தது.

“அங்கே ஒன்று கட்டாயம் நிறுத்தி வைக்க வேண்டும் அங்கிள். ஓட்டுவதற்கு ஆளோடு. கார் வாங்கப் பணம், டிரைவர் சம்பளம், பெட்ரோல் . . .எல்லாம் இருக்கிறது. என்றாலும், இதில் செலவைப் பார்க்கக் கூடாது என்று தோன்றுகிறது.” என்றான் அவன்.

“நீ சொல்வது சரிதான் ஆனால் . . .” என்று பெரியவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, “இப்போது இதில் கொஞ்சம் சாப்பிட முடியுமா என்று அம்மா கேட்கச் சொன்னார்கள். “ என்று இரு சிறு தட்டுகளில் புட்டு மாதிரி கொண்டுவந்து வைத்தாள் திவ்யா.

“காரப்புட்டும் சம்பலும். இப்போது வேண்டாம் என்றால் இரவுக்கு வைப்பதாகச் சொன்னார்கள்.”

“அங்கிள், இது ஒரு மா . .திரியான மிரட்டல் போல இல்லை? இப்போது வேண்டாம் என்றாலும், அதைச் சாப்பிடுகிற தண்டனையில் இருந்து இரவு தப்ப முடியாது என்கிறாளா?” என்று கேலியாகக் கேட்டான் இளைஞன்.

“தண்டனையா? அதெல்லாம் இல்லை. இந்தப் புட்டு ரொம்ப ருசியாக இருக்கும். பாயசத்துக்கு மேல் இதையும் இப்போது உண்டால் இரவு பசியெடுக்காது. பெரியப்பாவுக்கு நேரப்படிப் பசியாற வேண்டுமே. அதற்காகத்தான் இந்தக் கேள்வி.”

“ஆமாம் திவி. மனோவுக்கு மட்டும் வைத்துவிட்டு எடுத்துப் போய்விடு. இங்கேயே வைத்திருந்தால் ருசி பார்ப்போமே என்று தொடங்கி முடித்தே விடுவேன். அதனால் கொண்டு போய்விடு.” என்றார் திவ்யப்பிரகாசம்.

“இருந்தால்தானே?” என்று அடுத்த தட்டை எடுத்து திவ்யா தானே உண்ணத் தொடங்கவும், பெரிய தந்தைக்குச் சிரிப்பு வந்தது.

பதிலுக்கு முறுவலித்தபடி தட்டைக் கையில் எடுத்துக்கொண்டு,

பக்கவாட்டில் இறங்கித் தோட்டத்துக்கு செல்லும் படியில் அமர்ந்து அவள் உண்ணலானாள்.

ஆண்கள் இருவரும் தங்கள் பேச்சைத் தொடர்ந்தனர்.

“மற்ற உறுப்பினர்கள் இதை வீண் செலவு என்று தடுக்கக் கூடும். முழுதும் நாமே செய்வதும் தவறு. திமிர் காட்டுவதாகச் சொல்லுவார்கள்! அந்தக் காரை அவசியத்துக்கு எடுத்தாலும் நாமே பணம் போட்டு வாங்கிய திமிரில் செய்ததாகிவிடும். சங்கக் கூட்டத்தில் சொல்லி, பொதுவில் கொஞ்சம் நன்கொடையாக வசூலித்து, அப்புறம் வாங்கலாம். “

மனோரம்யன் கிளம்பும்போது, திவ்யா வந்து, ஜீப் சாவியைக் கேட்டாள்.

திவ்யப்பிரகாசம் அதிச்சியுற்று நிற்க, “ஏனோ?” என்று கேள்வி கேட்டான் மற்றவன்.

“ஓட்டிப் பழகிக் கொள்ளத்தான். பழகாத வாகனம் என்றுதானே, அவ்வளவு ஆத்திரப்பட்டீர்கள்? தேவை எப்போது ஏற்படும் என்று யாருக்கும் தெரியாது. ஓர் அவசரத்துக்கு வண்டியை எடுத்தால், அப்புறம் திட்டோ திட்டென்று திட்டுவீர்கள்!” என்று குத்திப் பேசினாள் அவள் .

“என்ன அவசரம் என்றாலும் நன்றாக ஓட்டத் தெரியாமல் ஒரு வண்டியை எடுத்து ஓட்டுவது பெரிய தப்பு.” என்றான் அவன் பிடிவாதக் குரலில்.

“என்ன பெரிய வித்தை, காரோட்டுவது? எல்லாம் அடிப்படை அந்த ஹென்றி ஃபோர்டுதானே? அது நினைவிருக்கும்போது, வேறென்ன கவலை? “

“தியரி எழுதிப் பாஸ் பண்ணுவதற்கு இது போதும். ஆனால் இந்த ரோடுகளில் எல்லாம் ஓட்டுகிற பழக்கம்தான் முக்கியம்.”

வினாடிக்குள், “அதற்காக ஓட்டிப் பழகத்தானே சாவி கேட்கிறேன்?” என்று மடக்கினாள் திவ்யா.

பதில் சொல்ல முடியாமல், “அங்கிள், ஜீப்பை எல்லாம் ஓட்ட வேண்டாம் என்று சொல்லி வையுங்கள், அங்கிள். “ என்று திவ்யப்பிரகாசத்திடம் கேட்டான் மனோரம்யன்.

இளம் தலைமுறையின் இந்த வாய்ப் போரை ரசித்து, “கொஞ்ச காலத்துக்குச் சாவியை ஒளித்து வைப்பா.” என்று யோசனை சொன்னார் அவர்.

“ஊகூம். அதில் ஒரு பயனும் இராது, அங்கிள். எத்தனை சினிமாக்களில் வரவில்லை? வயரைப் பிடுங்கி இணைப்புக் கொடுத்து ஓட்டி விடுவாள். வேறு வழி சொல்லுங்கள்.” என்றான் மனோரம்யன்.

“என்னமோ ஒரு பழமொழி . . கரெக்ட்!, பைத்தியம் தெளிந்தால்தான் கல்யாணம்., கல்யாணம் ஆனால்தான் பைத்தியம் தெளியும் என்று சொல்வார்களே! இந்த மனோரம்யன் பேசுவது அதைப் போலவே இல்லை? நீங்களே பாருங்கள் பெரியப்பா, இந்தச் சாலைகளில் பழகாமல் ஜீப்பை ஓட்டக் கூடாதாம். அதே சமயம் ஜீப்பை ஓட்டிப் பழகவும் கூடாதாம்! நியாயமாகத் தெரிகிறதா? நீங்களே சொல்லுங்கள்!” என்று பெரியவரிடம் முறையிட்டாள் திவ்யா.

அவர் கேள்வியாய் நோக்கவும், “அதெல்லாம் வேண்டாம். இந்த இடம் ஓட்டிப் பார்த்தேன், அந்த இடத்துக்குப் போய்ப் பார்க்கிறேன் என்று ஆபத்தான வளைவுகளில் போய் மாட்டிக் கொண்டால், விளைவு மோசமாகிவிடும். சும்மாவே இவள் தாயார் இவளைப் பற்றித்தான் கவலைப்பட்டதாகச் சொல்லவில்லை? அதனால் தனியே வண்டியை இவள் கையில் கொடுக்கிற வேலையெல்லாம் வேண்டாம் அங்கிள்.” என்று தீர்மானமான குரலில் கூறி முடிக்க முயன்றான் மனோரம்யன்.

“இப்படிப் பயப்பட்டால், பிறந்த குழந்தை போல அப்படியே படுத்துக் கிடக்க வேண்டியதுதான். எழுந்து நடந்து விழுந்துவிட்டால் என்ன செய்வது? பாவம்! கட்டிலோடு சேர்த்துக் கட்டியே போட்டுவிடலாம. “

“நடக்கும்போது விழுந்தால் எழுந்து விடலாம். ஆனால் மலைச் சரிவுகளில் வண்டி விழுந்தால், எலும்புகளைப் பொறுக்கி வருவது கூட இயலாது போகும்.”

“அதற்கு உங்களை நிச்சயமாகக் கூப்பிட மாட்டோம்.”

“முதலில் கூப்பிடுவதற்கு ஆள் இருக்க வேண்டுமே! அது புரியாமல் என்ன பிடிவாதம்?” என்று மனோரம்யன் முடித்தபோது அங்கே ஒரு சிறு அமைதி நிலவியது.

அவ்வளவு ஆபத்தா? ஆனால் அவள் ஓட்டிப் போய்விடவில்லையா? ஆனால் இறக்கத்தில் முடியுமா என்று அவளுக்கே சந்தேகம்தான்.

ஆனால் இங்கேயே வசிப்பது என்றால் இதெல்லாம் அறிந்துதானே ஆக வேண்டும்? சொன்னால் அதற்கு ஏதாவது சொல்லுவான்.

மௌனத்தைக் கலைத்தவர் திவ்யப்பிரகாசம்.

லேசாகத் தொண்டையைச் செறுமிக் கொண்டு அவர் பேசத் தொடங்கவும் சின்னவர்கள் இருவரும் அவர் முகத்தைப் பார்த்தனர்.

“இதற்கு ஒரு வழி இருக்கிறது மனோ. உன் வேலைகளை ஒதுக்கிக்கொண்டு, திவிக்கு நீயே ஜீப்பை ஓட்டக் கற்றுக் கொடுத்துவிடு. இவள் எப்படிக் கற்றுக் கொள்கிறாள் என்பதைப் பொறுத்து, சாவியைக் கையில் கொடுக்கலாம்.” என்றார் தீர்மானமாக.

ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்ட இருவரில் யாரும் இதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை.

ஏன் மறுக்கவில்லை? கிடைத்தது வாய்ப்பு என்று ஏதாவது தப்புக் கண்டுபிடித்துத் திட்டத்தானே செய்வான் என்று திவ்யாவின் யோசனை ஓடியது.

நல்லவர்கள் என்று முடிவு செய்ய வாய்ப்பே இல்லை. தட்டிக் கழிக்காமல் ஏன் ஒத்துக்கொண்டேன் என்று யோசித்தான் மனோரம்யன்.

ஆனால் ஜீப் ஓட்டப் பழகுவது தினமும் நடந்தது.

இருவரும் சிரித்த முகமாகவே திரும்பி வந்தனர்.

ஆனால் வேறு சிலருக்கு இந்த ஜீப் ஓட்டும் பயிற்சி வெறுப்பூட்டியது உண்மை.

அவளது கார் ரிப்பேர் என்று இவர்கள் செல்லும் வழியிலேயே நின்று பார்த்தாள்.

“பாதி தூரம் திவ்யாதான் ஓட்டப் போகிறாள். கூட வரத் தைரியம் இருந்தால் ஏறிக்கொள். அல்லது உன் வீட்டுக்கு போன் செய்து வேறு கார் வரழைத்து, அதில் போ.” என்றான் மனோரம்யன்.

மனோரம்யனுக்கு அவனது உயிர் பெரிதாக இல்லாதிருக்கலாம். ஆனால் வினோதினிக்கு அவளது உயிர் வெல்லமாயிற்றே! “உங்களுக்குத் தொல்லையாக இருக்க விருப்பமில்லை. வேறு கார் வரவழைத்துப் போய்விடுகிறேன்.” என்றவள், அவர்கள் கண் மறைந்ததும், தன் காரை ஓட்டிக்கொண்டு நேரே பாரிஜாதத்திடம் போனாள்.

கொணகொணவென்று அவளிடம் நிறையச் சொன்னாள்.

அதன் பலனாக, இந்த ஜீப் ஓட்டக் கற்றுக் கொடுப்பதை நிறுத்த அந்தத் தாயும்  பெருமுயற்சி செய்து பார்த்தாள்.

“அங்கிள் உத்திரவும்மா. அந்தப் பெண் மட்டும் ஜீப்பை ஓட்டப்

படித்துவிட்டால், அவளை அங்கே இங்கே அழைத்துப் பேசிற தொல்லை எனக்கு அடியோடு விட்டுவிடும். நீயே போய்க்கொள் என்று எளிதாகச் சொல்லி விடலாம்.” என்று மகன் சொன்னது, ஒருவாறு அவளுக்குச் சம்மதமாயிற்று.

கூடவே இந்தப் பயிற்சி பற்றி அவளுக்கு அவ்வளவாக எதிர்ப்பும் இருக்கவில்லை. ஏனெனில், இதுபோல ப் போய்விட்டு வரும் சமயங்களில் அந்த சிங்கப்பூர்க்காரி தந்தாள் என்று தின்பதற்குச் சுவையான பலகாரம் எதையேனும் மனோ கொண்டு வருவான்.

எவ்வளவு கெட்டவளாக இருந்தாலும் சாந்தமதி சமையலில் கெட்டிக்காரி என்பதை அவளும் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டியிருந்தது! எனவே மகன் கொண்டு வரும் தின்பண்டங்களுக்காக அவள் ஆவலாகவே காத்திருந்தாள் என்று கூடச் சொல்லலாம்!

அத்தோடு மகன் ஒன்றும் ஆசைப்பட்டு அந்தத் திவியோடு ஓடவில்லை. சீக்கிரமே அவளைக் கழற்றிவிடவே அவனுக்கும் விருப்பம்!

கடமை உருவாக பாரிஜாதம் இந்த விவரத்தைச் சிறு பபூச்சு வேலையுடன் வினோதினிக்குத் தெரிவிக்க, அவளும் அமைதி அடைந்தாள்.

எல்லாத் தரப்பிலும் நிலவிய இந்த சுமுகமான சூழ்நிலை சட்டெனா ஒருநாள் கலைந்து போயிற்று!

# அத்தியாயம் - 11

அவ்வப்போது தன் லாப்டாப்பை வைத்துக்கொண்டு ஏதாவது செய்து கொண்டிருப்பது திவ்யலட்சுமியின் வழக்கம்.

பொழுது போகாமல் ஏதோ கேம் ஆடிக் கொண்டிருக்கிறாள் என்பதே திவ்யப்பிரகாசம், மனோரம்யன் இருவரின் எண்ணமாக இருந்தது.

இப்படிச் சும்மாப் பொழுதைக் கழிப்பதற்கு உருப்படியாக ஏதாவது வேலை செய்தால் என்ன என்று மனோரம்யனுக்கு உள்ளூர எரிச்சல் வரும்.

ஆர்த்தோ மருத்துவருக்கு வரவேற்புக்கு ஆள் தேவை., பூரணி குடும்பம்  கணக்கெழுத ஆன் தேடுகிறார்கள். நல்ல ஊதியம் கிடைக்கும் என்றெல்லாம் திவ்யாவிடம் அவ்வப்போது சொல்லிப் பார்த்தான்.

ஆனால் விழிகளை விரித்துக் கேட்டிருப்பாளே தவிர, இந்த வேலைக்கு முயற்சி செய்து நாலு காசு சம்பாதிக்கும் எண்ணம் அவளுக்கு வரவே இல்லை!

எப்படி வரும்? அதுதான் சுகமாக உட்கார்ந்து சாப்பிடுகிறாளே! அடுத்தவரிடம் வேலை செய்ய உடம்பு வணங்குமா என்று அவனுக்குள் ஆத்திரம் பெருகும்.

ஆனால் வாய்விட்டு அதைச் சொல்ல அவனால் முடியவில்லை.

முதல் காரணம் அந்தக் குடும்பத்தைத் தன் வீட்டில் உட்கார வைத்துச் சோறு போடும் திவ்யப்பிரகாசம், தம்பி குடும்பத்தைச் சுமையாகக் கருதவே இல்லை.

அடுத்தது, இது பற்றி அவன் வாயைத் திறந்தாலே “வருங்கால இளவரசன்” சொத்து கரைந்து விடுமோ என்று அஞ்சுவதாகத் தோன்றிவிடும். அந்தச் சொத்து தனக்குத் தேவையில்லை என்று அவன் மறுத்தது யார் மனதிலும் இராது.

ஏனெனில் என்ன சொன்னாலும் கேளாமல், இந்தக் கருத்தைப் பரப்புவதே அவன் தாயாயிற்றே!

ஆனால், அப்படியொரு நிலையை எண்ணிப் பார்க்கவே மனோவுக்கு அருவருப்பாக இருந்தது. அவன் கையால் ஆகாதவனாக இருந்தால் அல்லவா அடுத்தவர் சொத்துக்கு ஆசைப்பட வேண்டும்?

ஆனால், திவியிடம் இது பற்றிப் பேசினால் “பாட் காலிங் த கெட்டில் பிளாக்”கா என்று நேரடியாகவே கேட்பாள். இன்னும் கேவலமாக, “உன் பங்குச் சொத்துக் குறைந்துவிடுமோ என்று கவலையா” என்று கூட நேரடியாகக் கேட்கக் கூடியவள்தாள் திவ்யா.

அவன் மறுத்தாலுமே, “அதை உன் அம்மாவிடம் போய்ச் சொல்லு” என்று கூட அலட்சியமாகச் சொல்லி விடக் கூடியவளே!

அது ரொம்பக் கேவலமாகிப் போகும்.

எனவே அது போல எரிச்சல் வரும்போதெல்லாம் சிரமப்பட்டு அடக்கிக் கொள்வான்.

எல்லாக் கணக்கும் சரியாக வைத்திருந்தாலும் காரியம் நடப்பதற்கு ஏதாவது “தள்ளி”த்தானே தீர வேண்டியிருக்கிறது? அதை சகிக்கவில்லையா? அந்த மாதிரி ஒன்று என்று விட்டுவிட முயற்சிப்பான்.

முயன்றால் முடியாதது என்ன இருக்கிறது?

ஒருநாள் ஜீப் பயிற்சி முடிந்து, மனோரம்யன் பெரியவரோடு பேசிக் கொண்டிருக்கையில் திவ்யா அங்கே வந்தாள்.

“ஆன்ட்டிக்குக் கொடுங்கள்” என்று ஒரு மூடியிட்ட பாத்திரத்தை அவன் அருகே வைத்தவள் திரும்பிச் செல்லாமல் நின்று, “ஒரு காரைப் பள்ளியில் நிறுத்த வேண்டுமானால், அதை நன்கொடை வாங்கித்தான் செய்ய வேண்டும் என்று பேசிக் கொண்டீர்களே . . .” என்று இழுத்தாள்.

“ஆமாம் சொல்லு.” என்றார் அவளுடைய பெரிய தந்தை.

“அதற்கு முதல் நன்கொடை நான் தருகிறேன். என் தம்பி விஷயமாகக் கஷ்டப்பட்டதால் என்று சொல்லிக் கொள்ளலாம் . . .”

“யெஸ் சொல்லு. மேடம் எவ்வளவு டொனேஷன் தரப்போவதாக உத்தேசமாம்?” என்று சிறு முறுவலுடன் கேட்டான் மனோரம்யன்.

“வந்து . .ஒரு . .ஓர் இரண்டு லட்சம்?” என்று கேள்வியாகப் பதில் சொன்னாள் அவள். “இப்போதைக்கு என்னால் இவ்வளவுதான் கொடுக்க முடியும்.”

ஆண்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வதைக் கவனித்து, “ஏன் மனோ சார், இது அதிகமா, குறைவா? “ என்று அவனிடம் நேராக வினவினாள்.

அவளது கேள்விக்குப் பதில் சொல்லாமல், “எதற்கு இந்தத் திடீர்க் கருணை? “ என்று கேட்டான் அவன்.

“திடீர் என்று இல்லை. அன்றிலிருந்து யோசித்ததுதான். இன்றுதான் முடிவெடுக்க முடிந்தது. “ என்று முறுவலித்தாள் அவள்.

உடனேயே முகம் மாற, “ தம்பியோடு எப்படித் திரும்பிப் போவது என்று அன்று நான் தவித்த நிலை, இனி யாருக்கும் வரக் கூடாது, ரம்யன். எல்லோரிடமும் கேட்டுச் சீக்கிரமே ஒரு காரை வாங்கி அங்கே விட்டுவிடுங்கள். “ என்றாள் அவள்.

“அதெல்லாம் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று அவசரமாகச் செய்ய முடியாது, திவ்யா. வேகம் காட்டினால், வேண்டாம் என்பார்கள். மனித இயல்பு அது. இப்போதுதான் கார் பற்றிய  கருத்தை மெல்லப் பரவ விட்டுக் கொண்டிருக்கிறோம். முதலில் அது எல்லோர் மனதிலும் யோசனையைக் கிளப்பட்டும் அப்புறமாகச் சங்கக் கூட்டத்தில் யார் மூலமாகவேனும் வேலையைத் தொடங்கலாம். ஆனால் என் கேள்வி அதுவல்ல. அதென்ன “இப்போது இவ்வளவுதான் முடியும்”? அப்படி அவ்வளவையும் கொடுப்பதற்கு, இப்போது என்ன அவசரம்? அதைத்தான் கேட்டேன்.” என்றான் மனோரம்யன்.

நீ என்ன கேட்பது? நான் ஏன் சொல்வது என்று கேட்கக் கூடிய நிலையைத் தாண்டியாயிற்று என்ற நம்பிக்கை அவனுக்கு.

அது சரியே என்றாலும், ஒழுங்கான பதிலையும் திவி சொல்லவில்லை.

கன்னம் குழியச் சிரித்துவிட்டு, “அதை இப்போது சொல்ல மாட்டேனே!” என்று அழகாகத் தலையசைத்துச் சொன்னாள் அவள்.

மனோரம்யன் யோசனையோடு பார்க்க, “இன்னொன்று மனோ சார், நாளை சென்னைக்குச் செல்லும் விமானத்தைப் பிடிக்க வேண்டும். அதற்காக மதுரைக்குச் செல்ல நம்பிக்கையான டாக்சி வேண்டும். எங்கே கேட்பது?” என்று விசாரித்தாள்.

பார்வை கூர்மை பெற, “உண்மையாகத்தான் கேட்கிறாயா?” என்று வினவினான் அவன்.

உச்சந்தலை மேல் கைவைத்து, “காட் ப்ராமிஸ், ரம்யன்! நாளை மறுநாள் எனக்கு ஒரு முக்கியமான மீட்டிங் இருக்கிறது. ஹோட்டல் கூட முன் பதிவு செய்துவிட்டேன். மதரை விமான நிலையத்துக்குச் செல்வதுதான் பாக்கி.” என்றாள் அவள் வெகு இயல்பாக.

“அதெப்படி . . ஓ! ஆன்லைன்! ஆன்லைனில் எல்லாம் “புக்” செய்திருக்கிறாய்! “

“கரெக்ட்! இந்த மதுரை டாக்சிதான் தெரியாமல் போயிற்று.

அல்லது . . .”

“பொறு. பொறு. நீயாக ஏதாவது வண்டியை எடுத்துக்கொண்டு கிளம்பி விடாதே தாயே. நானே கூட்டிப் போய் விடுகிறேன். எந்த ஃப்ளைட்?” என்று விவரம் கேட்டுக்கொண்டு, அழைத்துச் செல்லக் காலையில் வருவதாகச் சொல்லி மனோரம்யன் அங்கிருந்து கிளம்பினான்.

பெரிதும் மௌனமாகவே கேட்டுக் கொண்டிருந்த திவ்யப்பிரகாசம், தம்பி மனைவிடம் விவரம் கேட்டார்.

அவரது முக்கியமான கவலை, சென்னையில் தம்பி பெண் தனியே எப்படி இருப்பாள் என்பதே.

ஆனால் சாந்தமதி சற்றும் பதட்டப்படாமல், “பெரிய ஊர்களுக்குச் சென்று திவிக்குப் பழக்கம்தான் பெரியவங்களே. அங்கே கூட, பாங்காக், ஷாங்காய், கோஅ . .கோலாலம்பூர் . .. எல்லா இடத்துக்கும் போய் வந்திருக்கிறாள். அவள் வேலை அப்படிப் பட்டது.” என்றாள் சாதாரணமாக.

மறுநாள் சொன்ன நேரத்துக்குச் சரியாக காரோடு மனோரம்யன் வந்துவிட்டான்.

எலும்பு கூடி மாவுக்கட்டு பிரித்துவிட்ட கைக்கான பயிற்சிகளைத் தாயின் மேற்பார்வையில் தம்பி செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்த திவ்யா ஓடிப் போய்த் தன் பெட்டிகளை எடுத்து வந்தாள்.

ஆனால் மதுரையில் அவளை விட்டுவிட்டுத் திரும்பிச் செல்லாமல், கார்ச் சாவியை ஓர் ஆளிடம் கொடுத்துவிட்டு, அவனும் ஒரு ட்ராலியைத் தள்ளியபடி அவளோடு “செக்யூரிடி செக்” வரவும் ஒரு கணம் அவள் திகைத்துப் போனாள்.

செக்கிங் முடிந்து வந்ததும், அவனை ஆத்திரத்துடன் முறைத்துப் பார்த்தாள்.

“ஐய்யோ, பயம்மாக இருக்கிறதே!” என்று நடுங்குவது போல நடித்தவன் உடனே மாறி, “ஷ், சாதாரணமாக இரு திவி. இந்தப் பத்திரகாளி வேஷம் உனக்குச் சகிக்கவில்லை.” என்று சற்று அதட்டலாகக் கூறினான். “அத்தோடு மற்றவர்கள் பார்க்கிறார்கள்.” என்றான் தணிவாக.

இன்னமும் முறைத்திருப்பாள்தான். ஆனால் பொது இடத்தில் எதற்கு ரசாபாசம்?

உடனே இயல்புக்குத் திரும்பி காத்திருக்கும் ஹாலில் ஓர் இருக்கையில் அமர்ந்தாள்.

அவனும் அருகிலேயே அமரவும், “நீங்கள் என்னை நம்பவில்லைதானே? “ என்று சற்றுக் கம்மிய குரலில் கேட்டாள்.

“புரியவில்லை.”

“என்ன புரியவில்லை? சென்னையில் நான் என்ன செய்கிறேன் என்று வேவு பார்க்கத்தானே கூடவே வருகிறீர்கள்?” என்று நேரடியாகக் கேட்டாள் அவள்.

“தேவுடா!” என்றான் அவன். “இன்னைக்கு வரைக்கும் எனக்குத் தெரியாதம்மா! சிங்கப்பூர்க்காரர்கள் மட்டும்தான் சென்னையில் பிசினஸ் பண்ணலாம் என்று . . அப்படி ஏதும் சட்டம் இருக்கிறதா?”

அவள் திகைத்து நோக்க, “ என் ஏற்றுமதி விஷயமாக ஒரு சிறு வேலை. நாளை மறுநாள் கிளம்பலாம் என்று நினைத்திருந்தேன். சரி, நம் அருமை அங்கிளுடைய தம்பி மகள், கோபமே வராத குணவதி, எப்போதும் சிரிக்கச் சிரிக்கப் பேசும் சிங்காரி இன்று பயணம் செய்கிறாளே., கூடப் பயணம் செய்தால் சந்தோஷமாக இருக்குமே என்று டிக்கட்டை மாற்றிக்கொண்டு வந்தேன். ஆனால் இவ்வளவு சந்தோஷம் தாங்காதம்மா! கொஞ்ஞ்சம் குறைத்துக் கொள்ளேன்!” என்று பெருமூச்சு விட்டான் மனோரம்யன்.

சந்தோஷமாகச் சிரித்துவிட்டு, “சாரி மனோரம்யன். கூட வந்து பயணத்தை இனிதாக்குவதற்கு மிக்க நன்றி!” என்றாள் அவள்.

அவளையே பார்த்து, “எப்போதும் இப்படியே இருப்பதற்கென்ன? அவ்வப்போது அப்பம் கொதிக்கிற எண்ணையில் விழுந்து விடுவானேன்?” என்று கேட்டான் அவன்.

“அப் அப்பம் . .கொதிக்கிற . . . ஓ, சந்தேகமாய்க் கோபப்பட்டு விடுகிறேனாக்கும். எல்லாம் அவ்விடத்தில் பயின்றதுதான். முதலில் நான் சொன்னதில் ஒரு வார்த்தை நம்பியிருப்பீர்களா? எதையும் சந்தேக . . அது கூட இல்லை, தப்பாகத்தானே எண்ணினீர்கள்? இப்போதும் கூடவே வந்த காரணம் உங்கள் ஆழ் மனதின் ஐயம்தானோ என்று எனக்குத் தோன்றாதா?”

“இல்லை இல்லை. சந்தேகமே கிடையாது, திவி. ஆன்ட்டி, உன் அம்மா சொன்னார்கள். நீ புத்தகங்களுக்குத் தேவையான விதத்தில் அழகாகப் படம் வரைந்து கொடுப்பாயாமே! அதற்காகப் பாராட்டுகள் நிறையக் கிடைத்திருப்பதாகச் சொன்னார்கள்.

ஆன்ட்டிக்கு உன்னைப்பற்றி ரொம்பப் பெருமை! " என்றான் அவன்.

என்னவோ வேறுபாடாகத் தோன்றியது அவளுக்கு.

ஆன்ட்டி! இந்த அழைப்பு!

வயதால் . . . குணத்தாலுமே இந்த மாதிரியான அழைப்புக்கு சாந்தமதி உரியவளே என்றாலும், மனோரம்யன் ஒரு நாளும் அவளை ஆன்ட்டி என்று அழைத்தது கிடையாது.

அதற்கான தகுதி அவளுக்கு இருப்பதாக அவன் மனம் ஒப்பவில்லை என்பதே அவளது ஊகம்.

பெரியப்பாவே மெல்ல இளகி வந்தபோதும், இவன் சற்றும் தழைந்தது இல்லை.

இன்று என்னவோ?

அன்னையின் சுவையான உணவுகளா? நாவின் வழியே மனதை வசப்படுத்தலாம் என்பார்களே! ஒரு வேளை அவன் தாயாருக்கும் சேர்த்துச் செய்து அனுப்பியது, மனோரம்யனை இளக்கியதோ?

எப்படியோ? இவனோடு சண்டை போடாமல் சமாதானமாகப் பேசுவது இதமாகவே இருப்பதால், அவளாக எதையும் தொடங்க வேண்டாம்.

அருகருகே உட்கார்ந்து பயணம் செய்தபோது, அவளது வேலை பற்றி மனோரம்யன் விசாரித்தான்.

முழுப் புத்தகத்தை அவளிடம் கொடுத்து விடுவார்கள். இத்தனை படங்கள் என்பது சொல்லி விடுவார்கள். மொத்தத்தையும் படித்து ஏற்றவாறு அவர்கள் கேட்டது போலப் படங்கள் வரைந்து கொடுப்பாள்.

புத்தகத்தின் சாராம்சத்தை உள்வாங்கி ஏற்றவாறு வரைந்து கொடுப்பதால், அவளது படங்களை அப்படியே ஏற்றுக் கொள்வது வழக்கம்.

"புத்தகங்களுக்குப் படம் வரைந்து கொடுப்பது. இதில் எப்படி, என்ன வருமானம் கிடைக்கும்? என்று கேட்டான் மனோரம்யன்.

"அது புத்தகத்து விலைக்கு ஏற்றபடி வரும். பெரிய புத்தகம் என்றால் . . " என்று சாதாரணமாகத் தொடங்கிய திவ்யாவின் கண்கள் சட்டெனப் பளிச்சிட்டன். "என்னவோ ஆண்களிடம் மட்டும்தான் வருமானத்தைக் கேட்கக் கூடாதா? எங்களிடமும் அப்படித்தான்! கேட்கவே கூடாது! கேட்டாலும் சொல்ல மாட்டோம்!" என்று முடிக்கும்போது அவளுக்கே சிரிப்பு வந்துவிட்டது.

அவனும் சேர்ந்து நகைக்க, பயண நேரம் ரொம்பவும் சுருங்கிவிட்டது போல, இருவருமே உணர்ந்தார்கள்.

அந்தப் பயணத்தில் மனோரம்யன் நிறையத் தெரிந்து கொண்டான்.

வருமானமற்று, பெரியவர் திவ்யப்பிரகாசத்தை உறிஞ்சிச் சாப்பிட அந்தக் குடும்பம் சுந்தரவனத்துக்கு வரவில்லை.

அவளுக்குத் தனி வருமானம் இருந்தது. லாப்டாப்பில் திவ்யா கேம் விளையாடுவதாக அவர்கள் எண்ணியபோதெல்லாம், அவள் வேலைதான் செய்திருக்கிறாள் !

வருமானம் இதோ கண்ணெதிரில் கைக்கு வந்தது. பெரிய நிறுவனத்துப் புத்தகங்கள்! லட்சக் கணக்கில் வரும்!

இந்தப் பணம் வருவதற்காகவே இவ்வளவு நாள் காத்திருந்து, கையில் இருந்த பணத்தைக் கார் வாங்க நன்கொடையாகக் கொடுத்திருக்கிறாள்.

உணர்ச்சி வசப்பட்டு கையில் இருந்த அனைத்தையும் வழித்துக் கொடுத்துவிட்டு “பேபே” என்று விழிக்கவும் இல்லை!

தந்தை திவியிடம் பொறுப்பை ஒப்படைத்ததும், தாய் தம்பி இருவருமே அவளை எதற்கும் நம்புவதும் எல்லாமே சரியாகத் தோன்றியது.

என்னவோ ரொம்பவும் ஆறுதலாக உணர்ந்தான் மனோரம்யன்.

வீட்டுக்குத் திரும்புமுன் தம்பிக்கும் தாயாருக்கும், இன்னும் பணியாட்களுக்கும் பரிசாகத் திவ்யா சாமான்கள் வாங்கினாள். ஒரு சின்னப் பெட்டியை அடைக்கும் அளவுக்கு.

பார்த்துக்கொண்டே இருந்தவனுக்கு ஒரு நினைவு வந்தது.

அவளை அழைத்து, “சந்தேகமாக என்று நினைக்கக் கூடாது. பொருட்களை வாங்குவதில் உன்னைக் கருமி என்று யாரும் சொல்ல முடியாது. ஆனால், ஒரு குடித்தனத்தை மாற்றிக் கொண்டு வருவதை எண்ணிப் பார்க்கையில், நீங்கள் சிங்கப்பூரில் இருந்து கொண்டு வந்தது ரொம்பக் கொஞ்சமில்லை?” என்று கேட்டான்.

“கொஞ்சம்தான்.” என்று அவளும் ஒப்புக் கொண்டாள்.

தொடர்ந்து நடந்தபடியே, “அப்பாவுக்கு வந்தது ரொம்பக் கொடிய நோய், ரம்யன். முழுதும் குணப்படுத்தும் மருந்துகள் இன்னமும் கண்டுபிடிக்கப் படவில்லை. ஆனால் ஆராய்ச்சி நடக்கிறது. பணம்

பற்றாக்குறை என்றார்கள். அதுதான் முடிந்தவரை விற்று, அதற்குக் கொடுத்துவிட்டு வந்தோம். எங்கள் தேவைக்கு என்னாலேயே சம்பாதிக்க முடியுமே!”

“கேட்டிருக்கக் கூடாது!”என்று அவன். மன்னிப்புக் கோரும் பாவனை

இருவரும் வேலை முடிந்து சந்தோஷமாகவே திரும்பி வந்தார்கள்.

வந்ததும் வராததுமாக, “மிஸ்டர் தேவநாதன் உன்னைத் தேடி இரண்டு தரம் இங்கேயும் வந்து விசாரித்தார், மனோ.” என்றார் திவ்யப்பிரகாசம்.

“பண்ணை விஷயமாக ஏதாவது விவரம் தேவையாயிருக்கும்.” என்றான் மனோரம்யன்.

“வினோதினியுடைய அப்பா வேறு காரணமாகவும் உன்னைத் தேடியிருக்கலாம்.” என்றார் அவர் எங்கோ பார்த்தபடி.

“வேறு?” என்று புருவம் சுருக்கி யோசித்தவன், “ஓ மை காட்!” என்றான்.

“தள்ளிப் போடுவானேன்? எதுவானாலும் சீக்கிரமே பேசி முடித்துவிடு.” என்றார் பெரியவர்.

“நாளைக்கே போகிறேன்!” என்றான் அவன்.

அன்று பாரிஜாதத்துக்கு ஓர் அதிர்ச்சி! பேரதிர்ச்சி என்றே சொல்லலாம்.

அன்று ஒரு நிச்சயதார்த்த விழாவில் சைனீஸ் அயிட்டம் ஒன்று தயாரிப்பதற்கு உதவி செய்யுமாறு, பூரணி குடும்பத்தினர் வந்து, சாந்தமதியை கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்றிருந்தனர்.

அந்த நூடுல்ஸ் டிஷ் பற்றி பூரணி கலா பிரமாதமாகச் சொல்லவும், பெண் வீட்டார் அதை வைத்தே தீர வேண்டும் என்றுவிட்டனர்.

“போயேம்மா. நாலு பேரைப் பார்த்துப் பழகலாமே.” என்று பெரியவரும் கூறிவிட, சாந்தமதி அங்கே சென்றிருந்தாள்.

அங்கே பாரிஜாதமும் விருந்தாளிகளுள் ஒருத்தியாக அங்கே வந்து உட்கார்ந்திருந்தாள்.

எல்லோரும் “சாந்தாம்மா, சாந்தாம்மா” என்று சாந்தமதியைச் சுற்றுவது, அவளுக்கு எரிச்சலாக இருந்தது.

சுவையாகச் சமைக்கிறாள்தான். ஆனால் அதற்காக எல்லோரும்

அவளது காலடியில் கிடக்க வேண்டுமா?

இருக்கட்டும். அவளது கனவு நனவாகி, மூன்று பண்ணைகளின் முதலாளிக்கு அம்மாவாகி பெரிய்ய காரில் அவள் வலம் வரும்போது, இவர்கள் யாருக்குக் கும்பிடு போடுகிறார்கள் என்று பார்க்கலாம்!

இந்த மூன்று பண்ணை விஷயம் பாரிஜாதத்துக்கு இன்னொன்றை நினைவூட்டியது.

சும்மாவே சாந்தமதி மேல் அவளுக்கு இருந்த கோபம்!

இவளுடைய மகளால் அல்லவா, வினோதினி வீடு தேடி வந்து ஆத்திரப்பட்டாள்! அவளைச் சமாதானப்படுத்தி அனுப்புமுன் அன்று போதும் போதும் என்று ஆகிவிட்டதே!

ஒரு வசதியுள்ள இளைஞனிடம் ஜீப் ஓட்டக் கற்றுக்கொள் என்று தன் மகளை ஒருத்தி அனுப்பலாமா? அவனை மயக்கி வசப்படுத்திக்கொள் என்று சொல்லிக்கூட அனுப்பியிருப்பாள்!

என்னவோ அவளுடைய மகன் கெட்டிக்காரன். இந்த வலையில் விழவில்லை. சீக்கிரமே ஒதுக்கி விடுவதற்காகவே அந்தப் பெண்ணுக்கு அவன் கற்றுக் கொடுப்பதே! ஆனால் இவளுக்கெல்லாம் மண்டையில் தட்டிக்கொண்டே இருக்க வேண்டும்!

சாந்தமதியை வருத்தப்படுத்த வாய்ப்பு தேடிப் பாரிஜாதம் காத்திருக்கையில் அவளே கையில் ஒரு கப்புடன் பாரிஜாதத்தின் பக்கம் வந்தாள்.

இதுதான் சரியான சமயம் என்று சாந்தமதியிடம் இளப்பமாக ஏதோ சொல்ல அவள் வாய்திறக்கையில், “வேணி வாழ்க்கை உருப்பட்டாற்போலத்தான்!” என்று கடுங்குரல் ஒன்று கேட்டது.

திரும்பிப் பார்த்தால் வினோதினிதான்.

ஆகா! ஜோடி போட்டுக்கொண்டு சாந்தமதியைக் கொத்தலாம் என்று பாரிஜாதம் உற்சாகமுறும் போதே, வினோதினி மேலும் தொடர்ந்தாள்.

“ஒரு நல்ல விஷயம் நடக்க இருக்கிறது. உங்களுக்காக அறிவிருந்தால் யோசித்து வீட்டிலேயே இருந்திருக்க மாட்டீர்கள்? அபசகுனம் போல வாசலிலேயா, ஜோடியாக நன்றுகொண்டு இருப்பீர்கள்? அந்தம்மாதான் சிங்கப்பூரில் அப்படி இப்படி என்று சாக்குச் சொல்லிக் கொள்ளலாம். உங்கள் மூளை எங்கே புல் மேயப் போயிற்று, அத்தை? நல்ல காரியங்கள் நடக்கிற சமயம் ஒதுங்கிப்

போவதற்கு என்ன? மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வரப் போகிறார்கள், கண் மறைவாகப் போகாமல், அபசகுனமாக இங்கே வழியில் நின்று போஸ் வேறு கொடுக்கிறீர்களே! உடனே போங்கள், இங்கிருந்து!” என்று வினோதினி விரட்டியது அவளையும் சேர்த்துதான்!

# அத்தியாயம் - 12

இத்தனை ஆண்டு காலத்தில், இங்கே வந்தே பதினைந்து ஆண்டுகள் சென்று விட்டிருந்த இவ்வளவு காலத்தில் தன் கணவர் இல்லையே, இல்லாமல் போய்விட்டாரே என்று பாரிஜாதம் பெரிதாகத் தவிக்க நேர்ந்ததே இல்லை எனலாம்.

பழைய நினைவுகள் வரும், போகும். ஆனால் அவர் இல்லாததால் இப்படி ஆயிற்றே என்று வேதனைப்படும் படியாக ஒன்றும் நேர்ந்தது இல்லை.

உணவு, உடை, இருப்பிடம், நல்ல நிலைமை எதிலும் குறை நேராமல் மகன் காத்தான்.

பெரும்பாலும் பண்பாடு மிகுந்த அந்த மக்கள், அவளது அந்த நிலையை ஓர் அபசகுனமாகவோ குறையாகவோ கருதி அவளிடம் தவறாகப் பேசியதே கிடையாது.

எல்லோரும் படித்த நாகரீகமான மக்கள். மன நாகரீகம்!

அத்தோடு, பெரியவர் திவ்யப்பிரகாசம் அவள் மகனுக்குத் துணை நிற்கிறார் என்பதும் எல்லோரும் அவளை நல்லபடி வரவேற்கக் காரணமாக இருந்திருக்கலாம்.

எப்படியும் மனதைக் குத்தி வருத்தும் வார்த்தைகளை அவள் கேட்டதில்லை!

ஆனால் . . . மருமகளாக அவளே தேர்ந்தெடுத்த ஒருத்தி நாக்கில் நரம்பில்லாமல் எப்படி அனலை வாரித் தலையிலே கொட்டிவிட்டாள்.

இதே உணர்வை அனுபவித்து சாந்தமதி எத்தனை தரம் தவித்தாளோ? காரணம், இது போலத் தானே பேசிய பேச்சுதானே?

முகம் சூடேறித் தீயாய் எரிய சொல்வதறியாமல் பாரிஜாதம் முகம் கன்றி நிற்கையில், அவளது நிலை புரிந்தாற்போல சாந்தமதி அவளது கையைப் பற்றி லேசாகத் தட்டிக் கொடுத்தாள்.

தட்டிக் கொடுத்த கையை அவள் இறுகப் பற்றியபோதே, வினோதினியின் பேச்சைக் கேட்டபடி பெண்ணுடைய தாயோடு வந்த கலா, வினோதினியை விளாசித் தள்ளி விட்டாள்.

“என்ன பெண் நீ? பேச்சில் பண்பாடே இல்லையே! படித்தவளா நீ? கட்டுப்பெட்டியான கிராமப்புறங்களில் கூட, இப்போது இதுபோல உளறுவதில்லையே. சும்மா உடையில் மட்டும் ஹாலிவுட் நடிகை

போல அதி நாகரீகம் காட்டினால் போதுமா? படு பாமரத்தனமாக என்ன பேச்சு இது?" என்று படபடவென்று பொரிந்து கொட்டி விட்டாள்.

இது தனக்கும் சேர்த்துக் கொடுத்த சூடோ என்று மேலும் முகம் கன்றினாள் பாரிஜாதம்.

மணப்பெண் வேணியுடைய தாயும் இதில் சேர்ந்து கொண்டு பேசினாள்.

"போகட்டும் சின்னப் பெண். விடுங்கள்." என்று விலக்க முயன்ற சாந்தமதியின் கையைப் பற்றி, அன்போடு உதட்டில் ஒற்றிவிட்டு அந்தப் பெண்மணி பேசினாள்.

"உங்கள் மனது பெரிது சாந்தாம்மா. அதனால் இப்படிப் பேசுகிறீர்கள். மற்றபடி இவளது குணம் எல்லோரும் அறிந்ததுதான். வேறு மாதிரி ஒரு பேச்சு வந்ததே என்று எல்லோரும் பொறுத்திருந்தோம். ஆனால் இன்று அந்த மனோரம்யனுடைய தாயாரையே என்ன பேச்சுப் பேசிவிட்டாள்! " என்றவள், இந்த எதிர்பாராத தாக்குதலில் திகைத்துக்  கையைப் பிசைந்துகொண்டு நின்ற வினோதினியின் பக்கம் மறுபடி திரும்பினாள்.

"ஏதோ இங்கே வந்தது வந்துவிட்டார்கள், உறவாகவும் கூடும் போல இருக்கிறது., சங்கத்துக்குள் சேர்த்துக் கொள்ளலாம் என்று நேற்றுத்தான் பேசியதாகக் கணவர் கூறினார்.  அதற்குக் கொஞ்சமும் தகுதியற்ற குடும்பம் என்று உடனே காட்டிவிட்டாயே! வயதுக்கு மரியாதை கொடுக்கக் கூடத் தெரியாதா? . . ."

இந்த ரீதியில் கலா, கல்யாணப்பெண்ணுடைய தாயோடு இன்னும் சிலரும் வினோதினிக்குப் புத்தி சொல்கிற மாதிரி,  நிறையவே பேசினார்கள்.

எல்லோரும் அவளிடம் குற்றம் காணும் அந்த நிலை வினோதினிக்குப் புதிது. என்ன சொல்வது, என்ன செய்வது என்று ஒன்றும் புரியவில்லை.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே ஆத்திரத்துடன் தரையை உதைத்த வினோதினி, கைகளை உதறிக்கொண்டு அங்கிருந்து விரைந்து சென்றுவிட்டாள்.

ஆனால் மற்றவர் வினோதினியிடம் கூறியதெல்லாம் தனக்கே சொல்லப்பட்டது போல உணர்ந்து, பாரிஜாதம் மனம் குன்றிப்போனாள்.

வயதில் பெரியவள், அத்தோடு அங்கே எல்லோராலும்

விரும்பப்படும் மனோரம்யனுடைய தாய் என்பதால் அல்லவா எல்லோரும் பொறுத்துப் போயிருக்க வேண்டும்!

அதிலும், வினோதினியின் பேச்சில் குன்றி நின்றவளுக்கு முதல் ஆளாக உதவிக்கரம் நீட்டியவள், காரணமற்று அவளால் கொத்திக் குதறப்பட்ட சாந்தமதி.

இப்படிப்பட்ட நல்ல குணம் இருப்பதால் அல்லவா, இந்தக் குறுகிய காலத்துக்குள் எல்லோருக்கும் சாந்தமதியைப் பிடித்துப் போயிருக்கிறது!

சாந்தமதியின் கைகளை இறுகப் பற்றி, "உங்கள் மூவரையும் பற்றி மனோ நிறையச் சொல்லுவான். பிள்ளைகளோடு வீட்டுக்கு ஒரு நாள் வரவேண்டும், சாந்தமதி." என்று அன்பாகவே அழைத்தாள் பாரிஜாதம்.

அன்று வினோதினியும் மிகவும் கொதித்துப் போயிருந்தாள்.

அந்தக் கொதிப்பையெல்லாம் பாரிஜாதத்தின் மேல் கொட்டி அவளை முடிந்தவரையில் நோகடித்துவிடும் வெறியில்தான் வினோதினி முன்னதாகக் கிளம்பி விழாவுக்கு வந்ததே!

ஆனால் தப்பாகிவிட்டது என்னவென்றால், அடுத்தவரிடம் சொல்வது போல ஒரு திரையிட்டுப் பாரிஜாதம் செய்ததை, அவள் நேரடியாகப் பேசித் தரம் தாழ்ந்து போனாள்.

வாலைச் சுருட்டிக்கொண்டு ஓடி வரும்படி ஆகிவிட்டது.

ஆனாலும், அவளது வார்த்தைகளின் விளைவாகப் பாரிஜாதம் திகைத்துக் கூனிக் குறுகி முகம் கன்றி நின்றது வினோதினிக்கு மறக்கவில்லை.

ஓரளவுக்கு அதில் அவளுக்குத் திருப்தியே!

அந்தப் பாதகி பாரிஜாதம், வினோதினிதான் தன் மருமகள் என்று வார்த்தைகளாலேயே எத்தனைமுறை கூறியிருப்பாள்! இவளும் அந்த வார்த்தைகளை முழுதாக நம்பினாளே! ஆனால் அவள் சொன்னதோடு சரி!

அந்தப் பாதகி திவ்யா வேறு இடையிலே வந்து எல்லாவற்றையும் கெடுத்துவிட்டாள்.

அதைப் பற்றியும் வினோதினி பாரிஜாதத்திடம் எச்சரித்தாளே!

இந்தமாதிரி அவர்களுக்கிடையே ஒரு தினுசாக இருக்கிறது என்று ஒருத்தி மெனக்கெட்டுப் போய்ச் சொன்னால், ஓர் அம்மாக்காரி என்ன செய்திருக்க வேண்டும்?

மகனைக் கூட்டிக்கொண்டு பெண் வீட்டுக்கு வந்து திருமணத்தையே முடிவு செய்திருக்க வேண்டாமா?

அவர்கள் இருவரும் மட்டுமாகச் சென்னைக்குப் போய்க் கூத்தடித்துவிட்டு வரும்வரை நன்றாகத் தூங்கியிருக்கிறாள்!

இவளை நம்பி வேலை நடக்காது என்றுதான், அவளுடைய தந்தையையே திருமணம் பேசுமாறு வினோதினி விரட்டியது.

ஆனால் அது எவ்வளவவு பெரிய பாதகமாகிவிட்டது!

மனோரம்யனை வீட்டுக்கு அழைத்து, தந்தை தேவநாதன் அவனிடம் திருமணம் பற்றிப் பேச முயன்றால், அது போன்ற எண்ணமே தனக்குக் கிடையாது என்று சர்வ சாதாரணமாகச் சொல்லிவிட்டானே! மகளுக்கு வேறே நல்ல பையனாகப் பார்க்க வேண்டுமாம். அதைப் பற்றி அவன் என்ன சொல்வது?

திருமணம் பற்றிப் பேசுவதைக் கேட்டு ரசிக்க எண்ணி மறைந்திருந்து ஒட்டுக் கேட்ட அவளுக்கு எவ்வளவு பெரிய அதிர்ச்சி!

ஒரு நிமிஷம் உயிரே போய்விடும் போல அல்லவா இருந்தது!

பொய்யோ? வேடிக்கை செய்கிறானோ?

எத்தனை முறை தற்செயல் போல அவனைத் தேடிப் பிடித்து வழிமறித்துப் பேசியிருக்கிறாள்? அப்போதெல்லாம் தூரப்போ என்பது போல அவன் கூறியதே இல்லையே!

அதனால் வினோதினி எத்தனை கனவுகளை வளர்த்திருப்பாள்?

அது போலவேதானே அவன் தாயும் பேசினாள்! கொஞ்சமேனும் மகன் கருத்தை அறியாமலா, அவ்வளவு நம்பிக்கை ஏற்பட்டிருக்கும்?

மூன்று பெரிய பண்ணைகளினன் ஒட்டு மொத்த எஜமானி என்று எவ்வளவு தெளிவாகச் சொன்னாள்!

இடையிலே பெரிய பண்ணைக்கு வாரிசுகளே வந்தபோதும், அவர்களை எளிதாக விரட்டிவிடலாம் என்று திட்டமெல்லாம் போட்டாளே!

பெரிய திட்டம்! கொஞ்சமும் உருப்படாத மொட்டைத் திட்டம்!

ஆமாம். வெறும் வாய் வார்தையால் மயிலிறகை வாங்குகிற திட்டம்! அது எப்படி பலிக்கும்? பலிக்கும் என்று பாரிஜாதம் சொன்னதை நம்பியது, வினோதினி செய்த தப்பு. நம்பிச் சும்மா இருந்தது அதை விடப் பெரிய தப்பு.

ஆனால் அதற்காக, அதாவது அந்தப் பொம்பளையின் திட்டம் பலிக்கவில்லை என்பதற்காக வாலைச் சுருட்டிக்கொண்டு விலகிப் போய்விட முடியாது.

காரணம் . .முதலில் ஆறடி உயரத்தில் மனோரம்யன்! அவனது தோற்றம் பிரமாதம்!

அதை விட, அவனது மனோகரம் எஸ்டேட் இன்னும் பிரமாதம். அந்தப் பகுதியில் மிகவும் பெரிய நாலைந்து பண்ணைகளில் அதுவும் ஒன்று.

அதைவிட இன்னமும் பிரமாதமாய், ரொம்பப் பெரியதான சுந்தரவனம் எஸ்டேட் வேறு இருக்கிறது!

மனோரம்யன்! அவனது பண்ணைகள்! ஒன்றையும் விட முடியாது. எல்லாமே வினோதினிக்கு வேண்டும்!

அவை வேண்டும் என்றால் உருப்படியாக யோசித்து வேலை செய்ய வேண்டும்.

இவை எல்லாம அவளது கையை விட்டு நழுவக் காரணம் அந்தத் திவ்யா!

அவள் மட்டும் அங்கே வராமல் இருந்திருந்தால், அழகாக இன்றைக்கு எல்லாமே அவளது கைவசப்பட்டிருக்கும்!

இப்போதும்தான் என்ன கெட்டுவிட்டது?

திவ்யா இங்கிருந்து போய்விட்டால் எல்லாம் பழைய மாதிரியே மாறிவிடும். மாறித்தானே ஆக வேண்டும்?

அவளாகப் போகாவிட்டால் போக வைக்க வேண்டும்! எப்படி?

யோசித்தபோது வினோதினிக்கு விடை தெரிந்தது.

அதுவும், ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள்!

இன்னமும் திவ்யாவை இங்கிருந்து விரட்டிவிட்டால், எல்லா வகையிலும் சிறந்த தன்னை மனோரம்யன் மணந்தே தீருவான் என்பதில் அவளுக்கு முழு நம்பிக்கை இருந்தது.

அவனும் லாப நஷ்டக் கணக்குப் பார்த்துத் தொழில் செய்கிறவன்தானே? அழகான அவளோடு இன்னும் என்னென்ன வரும் என்று தெரியும்தானே? ஒரு வேளை தெரியாதிருந்தாலும் தெரிய வைத்து விட்டால் போகிறது.

அதே போல, திவ்யாவின் குடும்பம் இங்கிருந்து சென்றுவிட்டால், அந்தக் கிழவரின் பண்ணை தானாக மனோரம்யனுக்கு வரும். அவன் மனைவி என்ற நிலையில்  அவளுக்கும் சொந்தமாகிவிடும்!

இந்த இரண்டு மாங்காய்கள் போக, இன்னொன்றையும் கூட அடிக்கலாம்.

இவ்வளவு நாள் வெறும் வாய்ப் பேச்சில் மட்டுமாகக் கோட்டை கட்டி ஏமாற்றினாளே, அந்தப் பாரிஜாதத்தையும் ஆட்டிப் படைக்கலாம்!

ஆக ஒரு கல்லில் மூன்று மாங்காய்! அடித்தே ஆக வேண்டும்.

அவளது ஆசை நிறைவேற வேண்டுமானால் அதிரடி வேலைதான் செய்தாக வேண்டும். அந்த அதிரடி வேலை என்ன என்று அவளுக்குத் தீர்மானமாகிவிட்டது.              ஆனால் அதை அவசரப்பட்டு அசட்டுத்தனமாகச் செய்து கை நழுவ விட்டுவிடக் கூடாது.

நிதானமாக யோ . .சி . .த்து . . .

திவ்யாவுடைய குடும்பத்தவர் மூவரைப் பற்றி அவள் அறிந்த அனைத்தையும், பலமுறை மனதில் ஓட்டிப் பார்த்தாள். கண்டது, கேட்டது, காதில் விழுந்தது அனைத்தையும்!

அதன் விளைவாகச் சில நாட்களில், சாந்தமதிக்கு இரண்டு வரிக் கடிதம் ஒன்று வந்தது.

அந்தப் பக்கம் வசிக்கும் ஒருவனுக்குப் பச்சைப் பாம்பு இருக்கும் இடம் தெரியுமாம். தனக்கு ஒன்றைப் பிடித்துத் தருவதாகச் சொன்னானாம். பாம்பு வருகிற நேரம் பார்த்துப் பிடிப்பதற்கு இரண்டு மூன்று நாட்கள் ஆகக் கூடுமாம். தாய், தமக்கையிடம் சொல்லிவிட்டே கிளம்பியிருப்பானாம். ஆனால் பெரியவர்கள் வேண்டாம் என்றுவிட்டால் மீற முடியாதாம். சீக்கிரமே பாம்புப் பெட்டியோடு வருவானாம்!

இது பற்றி திவ்யப்பிரகாசமும், மனோரம்யனும் கவலைப்பட்ட அளவு திவியும் சாந்தமதியும் கலங்கவில்லை.

எதற்கும் காணோம் என்று போலீசில் சொல்லி வைக்கலாம் என்றார் பெரியதந்தை.

“அப்புறமாக அவன் நினைத்ததை சாதித்துவிட்டு சந்தோஷமாகத் திரும்பி வரும்போது, நம் முகத்தில்தான் லிட்டர் கணக்கில் அசடு வழியும்.” என்றாள் திவ்யா.

“பெண்கள் அதிகம் கலங்கிப் போவீர்கள் என்று பயந்தேனே!”

என்றான் மனோரம்யன்.

“சும்மா என்றால் கலக்கமாகத்தான் இருந்திருக்கும். ஆனால் தம்பிக்கு இப்படி ஓர் அசட்டு உந்துதல் அவ்வப்போது வந்துவிடும். எட்டு வயதிலேயே பட்டர்ஃப்ளை பார்க்க மலேஷியா வரை போய்விட்டு வந்திருக்கிறான். சொல்லாமல் கொள்ளாமல் இவன் அங்கே போனதற்கு, அங்குள்ள அதிகாரிகள் அப்பா அம்மாவுக்கு நீளமாக அறிவுரை வழங்கினார்களாம். ஆனால் ஒன்று, அதன் பிறகு எங்கே போனாலும், இது போல ஒரு தகவல் தந்துவிடுவான். “ என்றாள் அவள்.

ஆண்கள் இருவரும் சாந்தமதியைப் பார்க்க, அவள் லேசாக முறுவலித்தாள். “அவன் மரத்திலிருந்து விழுந்த பிறகு, அன்று கலா வீட்டில் கூட இதே பேச்சுதான். காய் பறிக்க, பழம் பறிக்க மரத்தில் ஏறுவார்கள் இவன் பறவைக் குஞ்சுக்காகக் கையை உடைத்துக் கொண்டானே என்றார்கள். பூச்சி பிராணிகளுக்காகத் தம்பி செய்த சில தடபுடல்களைச் சொன்ன பிறகு, இந்த மரமேறுதல் ஒன்றுமே இல்லை என்று எல்லோரும் சிரித்தார்கள்.” என்றாள் தன் மெல்லிய குரலில்.

“யாருக்கும் பயமில்லை என்றால் . .சரி.” என்றார் திவ்யப்பிரகாசம் சிறு தயக்கத்துடன்.

“அம்மாவின் பயம் ஒன்றே ஒன்றுதான் பெரியப்பா. பாம்புப் பெட்டியோடு வருவதாகச் சொல்லியிருக்கிறானே, பாம்பை எங்கே வைத்து எப்படி வளர்ப்பது என்று அதே யோசனை.”

திவ்யப்பிரகாசத்தின் சிரிப்பு எல்லோரையுமே வியக்க வைத்தது. “அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறான். அவன் தகப்பன் ஒரு தரம் பாதி வளர்ந்த நரிக்குட்டியை எடுத்து வந்தான். அது வளர்ந்தால் வீட்டுப் பிராணிகளுக்கு ஆபத்து என்று காட்டில் கொண்டு விட்டுவரச் செய்தேன். ஆனால் அதற்குள்ளேயே ராக்கன் வீட்டுக் கோழியை அந்த நரி விரட்டத் தொடங்கி, அதைக் கண்ணால் பார்த்த பிறகுதான் நரியை அனுப்பத் திரவியம் சம்மதித்தான்.” என்று அவர் ஒரு கதை சொன்னார்.

“ஆனால் . .” என்று அவர் உடனேயே முகம் மாறவும், காரணம் ஊகித்து, “கவலை வேண்டாம்.  அதிகமாக இராது என்றாலும், அவனிடம் கொஞ்சம் பணம் எப்போதும் இருக்கும். அதனால் பட்டினி கிடப்பானோ என்ற கவலை தேவையில்லை! “ என்று சாந்தமதி கூறினாள்.

“அப்படியானால் சரி.” என்று அமைதியானார் அவர்.

ஆனால் கலா வீட்டில் நடந்த பேச்சுதான் தொடக்கம்., அதில் தொடங்கி, அன்று வரை என்ன நடந்தது என்று அவர்கள் யாருக்கும் அப்போது தெரிந்திருக்கவில்லை!

தெரிந்தபோதோ . . .

சென்னைப் பயணம் முடிந்து திரும்பியதில் இருந்து, மனோரம்யனும் திவ்யாவும் சேர்ந்தே காலை நடையின்போது அடிக்கடி சந்தித்தார்கள்.

ஏதோ ஓர் இடத்தில் சந்தித்து, அதன்பின் சேர்ந்தே நடப்பார்கள்.

நடை முடிந்து திரும்பி வரும்போது அதே போல ஓர் இடத்திலிருந்து அவரவர் வழியே செல்வார்கள்.

பச்சைப் பாம்புக்காகத் தம்பி சென்று அன்றுடன் இரண்டு நாட்கள் ஆகியிருந்தன.

“உன் தம்பிக்கு ஒரு மொபைல் வாங்கிக் கொடுத்திருந்தால் எங்கிருக்கிறான் என்று தெரிந்து கொண்டிருக்கலாமே.” என்றான் மனோரம்யன்.

இரண்டு நாட்களாக ஒரு தகவலும் இல்லாதிருப்பது அவனுக்கு உறுத்தலாக இருந்தது.

“அது நிஜம்தான். ஆனால் படிக்காமல் அதிலேயே விளையாடப் பழகி விடுவானோ என்று அம்மாவுக்குப் பயம். சும்மா சொன்னதைக் கேட்பது போல இருந்தாலும், அப்பா போல அவனுக்கும் ஒரு பிடிவாத குணம் உண்டு என்று சொல்வார்கள். கல்லூரி செல்லத் தொடங்கிவிட்டால், அவனுக்கே நல்லது கெட்டது புரியும். அப்போது வாங்கலாம் என்றார்கள்.”

“ஆன்ட்டிக்கு அபிப்பிராயம் சொல்லும் உரிமை எல்லாம் உண்டா? உங்கள் வீட்டு சர்வாதிகாரி நீ என்று நினைத்தேனே!” என்றான் அவன் இலகுவாக.

“நா . .னா சர்வா . . ஹூம், இன்னும் என்னென்ன பழிகள் எனக்குச் சூட்டி வைத்திருக்கிறீர்கள்? அதையும் சொல்லி விடுங்கள்! ஒன்றாகச் சேர்த்து வருத்தப்பட்டுக் கொள்கிறேன்!” என்றாள் அவள் சோகம் போல.

“ம்ம்ம் . . இதைப் பழி என்று சொல்ல முடியாது. ஆனால், உன் கையில் சிண்டைக் கொடுத்துவிட்டு எவன் கஷ்டப்படப் போகிறானோ என்று அவ்வப்போது கவலைப்படுவேன்.” என்றான் மனோரம்யன்.

சிரிப்பை அடக்கிக்கொண்டு “அந்தக் கவலை அந்தச் சிண்டுக்குச் சொந்தக்காரன் அல்லவா பட வேண்டும்! உங்களுக்கு ஏன் அந்தக் கஷ்டம்?” என்று கேட்டாள் அவள்.

சோகமாகத் தோளைக் குலுக்கினான் அவன். “என்ன செய்வது? அந்தச் சிண்டு, என்னுடையதாக அல்லவா இருக்கப் போகிறது! கவலைப் பட்டுத்தானே தீர வேண்டும்!”

“ஹே!” என்று நின்று பெரிய விழிகளை அகல விரித்து, அவனை ஆழப் பார்த்தாள் திவ்யலட்சுமி.

குறுநகை புரிந்து, “என்ன? அவ்வளவு பெரிதாகக் கண்களை விரிக்கிறாயே? உனக்கு ஒன்றுமே தெரியாதாக்கும்?” “ என்று கேட்டான் அவன்.

அடக்க முடியாமல் இதழ்கள் வளைய, “தெரியும். ஆனால் சத்தத்தையே காணோமா? கொஞ்சம் சந்தேகம் வந்துவிட்டது.” என்றாள் அவள்.

“அதற்குள் சந்தேகமா? கடவுளே, காப்பாற்றப்பா!” என்று அவன் நடிக்க அவள் கலகலவென்று குதூகலத்துடன் நகைத்தாள்.

ரசித்து நோக்கிவிட்டு, “அம்மா இயல்புக்கு வந்துவிடட்டும் என்று எண்ணினேன். அன்று வினோதினி தன்னை வெளிப்படுத்திக் கொண்டதில், ரொம்ப மாற்றம் தெரிகிறது. தம்பி வந்ததும் சொல்லு. சீக்கிரமே வருகிறோம்.” என்றான் அவன்.

பிரிய மனமற்று மேலும் சற்று நேரம் கலகலத்துவிட்டு, “வேலை!” என்று அவன் கிளம்ப, “எனக்கும்!” என்று அவளும் திரும்பி நடந்தாள்.

“சுந்தரவனம்” செல்லும் இரண்டாவது திருப்பத்தில் வினோதினி அவளை வழி மறித்தாள்.

மெய்யாகவே! திவ்யா தன் வழியே செல்ல முடியாதபடி கைகளை அகல விரித்து அவளது வழியை மறித்துக்கொண்டுதான் மற்றவள் நின்றாள்.

என்ன இது என்று உள்ளூர எரிச்சலுற்று, “பாருங்கள் வினோதினி, எனக்கு நேரமாகிறது. நான் போக வேண்டும் வழியை விடுங்கள்.” என்றாள் திவ்யா.

“நெங்நநெங்நநெ” என்று அழகு காட்டிவிட்டு, “போக நேரமாகிவிட்டதா? ஆனால் இவ்வளவு நேரம் அந்த மாதிரி எண்ணம் ஏதும் இருந்த மாதிரியே தெரியவில்லையே!” என்றாள் அவள்

ஏளனமாக.

அவளது தோளில் கிடந்த பைனாகுலர்ஸ் அவளைக் காட்டிக் கொடுக்க அருவருப்பாக உணர்ந்தாள் திவ்யா.

இப்படியா அடுத்தவரை வேவு பார்ப்பார்கள்?

மனதை முகம் காட்ட, "நான் போக வேண்டும்." என்றவள் வினோதினியைச் சுற்றிக்கொண்டு நடக்கலானாள்.

"அவ்வளவு அலட்சியமா? தாராளமாகப் போ. ஆனால் உன் தம்பி திரும்பி வரவே மாட்டானே, அது பரவாயில்லையா?" என்று சீறலாகக் கேட்டாள் வினோதினி.

அந்தக் குரலில் திவ்யா நின்று மற்றவளைக் கூர்ந்து பார்த்தாள். "என்ன உளறுகிறாய்?" என்று ஆத்திரமாகக் கேட்டாள்.

ஜீவ்வென்று வினோதினியின் கண்கள் சிவந்தன. "உளறலா? உளறலா? என் பேச்சையா உளறல் என்கிறாய்? வேண்டாம். என் உளறலைக் கேட்காமல் போயே போய்விடு. ஆனால் அந்தப் பொடியன் உன் தம்பி எங்காவது பாம்பு கடித்துச் செத்துக் கிடப்பான். அப்போது சந்தோஷமாகத் தூக்கி வைத்து அழு!" என்று அவளே பாம்பாகி விஷத்தைக் கக்கினாள்.

"பத்து வயசு நிரம்பாத பையன் அவனைப் போய் என்னென்னவோ சொல்கிறாயே, என்ன மாதிரிப் பிறவி நீ? " என்று வெறுப்புடன் கூறிய திவ்யா, மறுபடியும் திரும்பி நகர முயன்றாள்.

"ஏய்ய் . .நில்லு நில்லு. இதோ பார். அந்தப் பையன் சாகக் கூடாது என்றுதான் நானும் நினைக்கிறேன். ஆனால் அது உன் கையில்தான் இருக்கிறது. . ." "என்ன? மறுபடியும் உளறலா?"

"உளறலா இல்லையா என்று இந்த வீடியோவைப் பார்த்துவிட்டு அப்புறமாகச் சொல்லு. சொல்லச் சொல்லப் பார்க்காமல் மட்டும் போனாய் என்றால் அப்புறம் நீதான் வருத்தப்படுவாய். ரொம்ப!"

ஒருவேளை இது வெறும் உளறல் இல்லையோ?

அரை மனதாக திவ்யா நிற்கவும் அவசர அவசரமாக தன் செல்ஃபோனில் ஒரு வீடியோவை ஓடவிட்டு, வினோதினி காட்டினாள்.

திவ்யாவின் கைக்கு எட்டாத தூரத்தில் மொபைலைப் பிடித்துக் கொண்டு!

அவ்வளவு முக்கியமாக, அதில் என்ன இருக்கிறது?

அவளது கவனத்தை உடனே கவரும் விதமாக, தம்பி ஒரு பச்சைப் பாம்பைப் பிடித்துக்கொண்டு நின்றான். அதைத் தன் மேல் நெளிய விட்டபடி !

நினைத்ததை நடத்தி இருக்கிறான் என்ற பெருமிதம் அவன் தமக்கை மனதில் தோன்றும்போதே மறைந்தது.

இது, இவள் கைக்கு எப்படி வந்தது? அப்படியானால் தம்பி? இது என்ன பைத்தியக்காரத்தனம்?

இவளே கொஞ்சம் அரைக் கிறுக்காகத்தான் இருக்க வேண்டும். இவளிடம் எச்சரிக்கையோடு பேச வேண்டும்.

"என்ன இது? " என்று தணிந்துவிட்ட குரலில் கேட்டாள்.

கவனத்துடன் மொபைலை ஆஃப் செய்து அணிந்திருந்த உடைக்குள்ளே பத்திரப் படுத்தினாள் வினோதினி.

வெற்றிப் பெருமிதத்துடன் திவ்யாவைப் பார்த்து, "என்ன நன்றாகத் தெளிவாகப் பார்த்துவிட்டாய் அல்லவா? உன் தம்பியேதானே? சந்தேகம் இல்லையே?" என்று வினோதினி கேட்டாள்.

அவளுக்குப் பதில் சொல்லாமல், "தம்பி வீடியோ உன்னிடம் எப்படி வந்தது? அவன் எங்கே இருக்கிறான்?" என்று விசாரித்தாள் திவ்யா.

"ஆமாமடி பெண்ணே! உன் தம்பி எங்கே இருக்கிறான் என்று முகவரி தந்து, அங்கே போவதற்கு வழியையும் காட்டத்தானே இவ்வளவு கஷ்டப்பட்டு இந்த வீடியோவை எடுத்துக்கொண்டு உன்னைத் தேடி ஓடி வந்தேன்! " என்று நக்கல் பேசினாள் வினோதினி.

உடனே முகம் மாறி, "அடச் சீ, வாயை மூடு! அந்தப் பையன் இப்போது என் பிடியில் இருக்கிறான். உனக்கு இது தெரிந்தால் போதும். பெரிய சிபிஐ மாதிரிக் கேள்வி கேளாமல், வாயை மூடிக்கொண்டு நான் சொல்வதைக் கேள். கேட்டு அதன்படி நடந்தால் உன் தம்பி உயிருடன் திரும்பி வருவான். இல்லாவிட்டால், சத்தியமாய்ச் சொல்லுகிறேன், அவன் பாம்பு கொத்திச் செத்துப் போவான்." என்று கடுமையான குரலில் கூறினாள் வினோதினி.

பிளாக்மெயில்! இவள் என்ன நிபந்தனை விதிக்கப் போகிறாள்?

# அத்தியாயம் - 13

பார்த்த முதல் நாளில் இருந்தே இந்த வினோதினிக்குத் திவ்யாவைப் பிடித்தது இல்லை. எந்த விதமான காரணமும் இல்லாமலே வெறுத்தவள்.

ஆனால் இப்போது ஒரு காரணம் கண்டுவிட்டாளோ?

கையில் பைனாகுலர்ஸ் வேறு! பொது இடத்தில் பார்ப்பதற்கு ப் பெரிதாக எதுவும் இருந்திராது என்றாலும் முகத் தோற்றமே போதுமே.

ஆனாலும் அது பற்றி இவள் பேச வேண்டியது மனோரம்யனிடம். இங்கே வந்து திவ்யாவை மிரட்டி என்ன லாபம்?

ஆனால் லாபம் பற்றி வினோதினிக்குத் தெளிவாக கருத்து இருந்தது. அதை அவள் வெளிப்படுத்திபோது, திவ்யா பொடிப் பொடியாக நொறுங்கிப் போனாள்!

வினோதினி நேராக விஷயத்துக்கு வந்தாள். "இதோ பார், உன் பக்கத்தில் நின்று சுற்றி வளைத்துப் பேச எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவே இல்லை. அதனால் நொணநொணவென்று குறுக்கே பேசாமல் நான் சொல்வதைக் கவனமாகக் கேள். நீ இங்கே, இந்தப் பிரதேசத்தில் இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. உடனே உன் மூட்டை முடிச்சோடு இங்கிருந்து போய்விடு. எங்கிருந்து வந்தாயோ, அங்கேயே போய்விடு. இல்லாவிட்டால், நான் நிச்சயமாக உன் தம்பியைக் கொன்றுவிடுவேன்!" என்று, நின்று நிதானித்துத் தெளிவாகச் சொன்னாள்.

ஒத்திகை பார்த்ததுபோலத் தெளிவு!

"ஆனால் . ." என்று தொடங்கிய திவ்யாவை ஒற்றை விரல் உயர்த்தி அடக்கிவிட்டு அவள் மேலே சொன்னாள்.

"குறுக்கே பேசாதே என்றேன். முதலில், நான் சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லி விடுகிறேன்.

"நான் சொல்கிறபடி நடக்காவிட்டால், என்ன நடக்கும் என்று முதலில் தெரிந்துகொள்.

"முதலில் குயுக்தியாக இந்தக் காலை ட்ரேஸ் பண்ணலாம் என்று நினைக்கிறாயா? பிரயோசனமே கிடையாது. என்னிடமிருந்து உத்திரவு கிடைக்காமல் ஒரு பிடி சாப்பாடு கூட உன் தம்பிக்குக் கிடைக்காது. பட்டினியில் செத்துப் போவான். அல்லாமல் என்னையே

தொடர்வதானாலும், அதுவும் பயன்படாது. நான் நேரடியாக இதில் சம்பந்தப் படவே மாட்டேன்!

"அடுத்தது நான் சொன்ன பாம்புக் கடி!

"உன் தம்பிக்கு அப்படி எதுவும் ஆகாதிருக்க நீ என்ன செய்ய வேண்டும் தெரியுமா? இங்கிருந்து இந்த நாட்டில் இருந்தே நீ போயாக வேண்டும். ஒரேயடியாக! திரும்பி வரவே கூடாது. எஎன்ன நடந்தாலும் வரக் கூடாது! "

திவ்யாவின் கூர்ப்பார்வையில் ஒன்று தெரிந்தது.

எனவே, "யோசி வினோதினி. அப்படியே இங்கிருந்து நான் போனாலும், ரம்யன் உன்னை மணப்பாரா? ஏன் வீணாக . . ." என்றவளின் பேச்சில் கொதிப்புடன் குறுக்கிட்டாள் மற்றவள்.

"ஓகோ "ரம்ய"னா? அது வரை போய்விட்டதா? எங்கே போனாலும் அது பற்றி எனக்குக் கவலையில்லை! நீ இந்த நாடு விட்டுப் போயே தீரவேண்டும்.

"அத்தோடு இன்னொன்றையும் நன்றாகத் தெரிந்துகொள். உன் தம்பியைத் தேடிக் கண்டுபிடித்து விடலாம் என்று மட்டும் ஒரு போதும் எண்ணாதே. தேடுகிற வேலை தொடங்கினால் போலீஸ், உன் பெரியப்பா . .உன் ரம்ம்மியன், பணியாட்கள் . ..  யார் அந்த வேலை தொடங்கினாலும் அங்கே அந்தப் பையனுக்குச் சாப்பாடு போகாது. அவன் ஆசைப்பட்ட பச்சைப் பாம்புப் பெட்டிகளோடு கூடவே, நல்ல பாம்புப் பெட்டியும் திறந்து விடப்படும்.

"இதற்கு மேல் உன்னிடம் பேசப் போவது கிடையாது. சொன்னதைச் செய்கிறாயா என்று கவனிக்க மட்டுமே செய்வேன். மேலே உன் தம்பியின் கதி உன் கையில்." என்று முடித்துவிட்டுத் திரும்பிச் செல்லலானாள்.

என்னவோ காட்டாற்று வெள்ளம் அவளை உருட்டிப் புரட்டிப் போட்டது போல உணர்ந்தாலும், அதனுள்ளும் இந்த வெறி பிடித்தவளிடம் மாட்டிக் கொண்டிருக்கும் தம்பியின் நிலையே பெரிதாகத் தோன்ற, "ஒரு நிமிஷம். ஒரு நிமிஷம்!" என்று அவள் பின்னோடு ஓடி இப்போது வழி மறித்தவள் திவ்யா.

"இதோ பார், நாங்கள் மூவரும் இங்கே குடியேற உரிமை கேட்டு அதற்கான அடிப்படை வேலைகள் எல்லாம் செய்துவிட்டு வந்திருக்கிறோம். இப்போது . . "

"அது உன் தலைவலி. என் நிபந்தனை எதற்காகவும் மாறாது. போ.

போய் மூட்டையைக் கட்டு. போ!” என்று வேகமாக அவளைப் பிடித்துத் தள்ளிவிட்டு, தள்ளியதில் தடுமாறி விழுந்தவள் எழுமுன் வினோதினி விரைவாகப் போயே போய்விட்டாள்.

சற்று நேரம் திவியால் எதுவுமே முடியவில்லை. யோசிக்க, செயல்பட . .எதுவுமே!

எழுவதற்காகக் கையை ஊன்றிய நிலையிலேயே இருந்தவள் சில நிமிஷங்கள் கழித்தே மெல்ல எழுந்தாள்.

வெகு தூரத்தில் வினோதினி அணிந்திருந்த சிவப்பும் கறுப்புமான உடை வேகமாகப் போவது தெரிந்தது.

ஆக, எல்லாமே நிஜம்!  ஒரு பத்திருபது நிமிஷங்களில் அவளது உலகம் தலை கீழாகிவிட்டது உண்மையே!

வினாடிக்குச் யோசித்து, சட்சட்டென்று முடிவெடுக்கும் திவி அடியோடு காணாமலே போய்விட, தலையைப் பிடித்துக்கொண்டு அருகில் நின்ற மரத்தின்மேல் அப்படியே சாய்ந்து நின்றாள் அவள்.

மலைத்து மருண்ட மூளையைக் கசக்கி என்ன யோசித்தாலும் கடைசியாக வந்த முடிவு ஒன்றே!

அந்த வெறி பிடித்த வினோதினியிடம் இருந்து தம்பியைக் காத்தாக வேண்டும். அதற்கு அவள் கேட்கும் எந்த விலையையும் கொடுத்துதான் தீர வேண்டும்! அது அவளது எதிர்காலமே என்றாலும் சரியே!

தண்ணொளி வீசிக் கிளம்பிய காதல் நிலவு, எரி நட்சத்திரமாய் விழுந்து மறைந்தது.

தம்பி!

அம்மாவும் தம்பியும் உன் பொறுப்பு என்ற தந்தை!

இரும்பாய்க் கனத்த கால்களைத் தூக்கிப் போட்டு நடந்து ஒரு வழியாக வீடு வந்து சேர்ந்தாள்.

அறைக்குள் போய் மூலையில் முடங்கிக் கொள்ளவே மனம் துடித்தது. ஆனால் தலைக்குமேல் கத்தி தொங்குகிறதே! கவனித்துக்கொண்டே இருப்பேன் என்றாளே!

பெரிதும் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு, தாயை நோக்கிச் சென்றாள்.

மகளின் முகத்தைப் பார்த்ததும், “என்னம்மா ரொம்ப தூரம்

நடந்துவிட்டாயா?" முகம் வாடிக்கிடக்கிறதே. ஏதாவது பழச்சாறு குடிக்கிறாயா?" என்று கேட்டாள் சாந்தமதி.

உதடு துடிப்பதை வரை அடக்க வேண்டியிருந்தது இப்போது!

தொண்டையில் அடைத்ததை விழுங்கிக் கொண்டு, "அம்மா, நான் . .வந்து நான் ஒன்று கேட்டால் செய்வீர்களா? நாம் . .நாம் மூவரும் இங்கிருந்து போய்விடலாமாம்மா?" என்று ஒருவாறு கேட்டேவிட்டாள் பெண்.

ஆனால் இந்தச் சில வார்த்தைகள் இதயத்தைக் கசக்குவது போல இவ்வளவு வலிக்குமா? வலித்தன!

மகள் பேசும் மொழியே புரியாதவள் போல சில கணங்கள் அவளை வியந்து நோக்கினாள் பெற்றவள்.

சிறு முறுவல் செய்து, "என்னடாம்மா? என்ன விஷயம்? மனோவுடன் ஏதாவது சண்டையா?" என்று வினவினாள்.

ஐயோ! காயத்தில் கத்தியால் திருகுவது என்றால் அதுவும் இப்படித்தான் நோகுமா?

வெகுவாகச் சமாளித்து, "இஇல்லைம்மா. ஆனால் நான் ரொரொம்ப சீரியசாகத்தான் சொல்கிறேன். நிஜமாகவே நாம் . .. நம் நாட்டுக்குப் போய் விடலாம். " என்றாள் மகள்.

"நிஜமாகவா?" மகள் முகத்தை ஒரு தரம் ஆழப் பார்த்துவிட்டு "முடியாதேம்மா." என்றாள் அன்னை.

மகள் திகைத்து நோக்கவும், "பாரம்மா அப்பா சொல்லியிருக்கிறார். நாம் இங்கே வந்திருப்பது நம் பாதுகாப்புக்காக அல்ல. தந்தையைப் போல வளர்த்தவரைத் தனிமரமாக விட்டுவிட்டு வெளிநாடு போனதற்கு, அவரது பிராயசித்தமே! மகனைப் போல வளர்த்தவருக்குப் பேரப் பிள்ளைகளாக உங்கள் இருவரையும் கொடுக்க வேண்டும் என்றார்! என்ன காரணம் கொண்டும் அதை மீற என்னால் ஆகாது திவி! நாம் இங்குதான் இருக்க வேண்டும்." என்றாள் தாய் உறுதியோடு.

இதற்கு என்ன சொல்வது?

"ஆஆனால் தம்பியைக் காணோமேம்மா!" என்றுரைத்துத் தன்னை மீறித் திவ்யா அழுதாள்.

செல்லமாக நோக்கி, "ச், பைத்தியம்! தம்பி குணம் தெரியாது? பச்சைப் பாம்பு பிடித்து வருவதாகச் சொல்லிவிட்டுத்தானே போனான்? பயப்படாதே. எல்லாம் பத்திரமாக வருவான்." என்றுவிட்டு சமையல்

அறையை நோக்கிப் போனாள் சாந்தமதி.

இப்போது என்ன செய்வது? தாங்க மாட்டாமல் கனத்த தலையைக் கையில் தாங்கிக்கொண்டு அமர்ந்து யோசிக்க முயன்றாள் திவ்யா.

தன் மீதுதானே வினோதினிக்கு அவ்வளவு வெறுப்பு? புத்தக வேலை என்று சொல்லிச் சென்னைக்குப் போய்விட்டால்? அங்கிருந்து சிங்கப்பூருக்கும் . ..

ஆனால் அந்த வெறி பிடித்த வினோதினி நம்புவாளா? நம்பாவிட்டால்?

மேலே நினைத்துப் பார்க்கவும் முடியாமல் திவ்யாவின் உடல் நடுங்கியது.

வேறு வழி காணாமல் வினோதினியையே தொடர்பு கொண்டு நடப்பு நிலையை விளக்க முயன்றாள்.

ஆனால், "அதெல்லாம் உன் பிரச்சினை. உன் தம்பி மேல் உனக்கு உண்மையிலேயே அன்பு இருந்தால், பிரச்சினையைச் சமாளித்து என் நிபந்தனையை நிறைவேற்று. எல்லாத் தொடர்புகளையும் . . .சொல்வது புரிகிறதா? எல்ல் . .லாத் தொடர்புகளையும் அறுத்துக்கொண்டு இங்கிருந்து நீ அடியோடு போயாக வேண்டும். போகிறாய் என்பதைச் சொல்ல மட்டுமே இதற்கு மேல் என்னோடு தொடர்புகொள். இது போலச் சாக்குப் போக்குச் சொன்னால், அப்புறம் கோபத்தில் அந்தப் பையனை என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது. வை." என்று ஸ்விட்ச் ஆஃப் செய்தாள் அவள்.

இப்போது என்ன செய்வது? மீண்டும் முட்டிக்கொண்டு அழுகை வந்தது அவளுக்கு.

தேவை இல்லாதபோதும், ஒரு சின்னச் சாக்கைச் சொல்லிக்கொண்டு திவ்யப்பிரகாசத்தின் இல்லத்துக்கு மனோரம்யன் வந்தான். சற்றுப் பேசிவிட்டு அவரவர் பண்ணைகளுக்குப் போவதாக ஏற்பாடு.

புரிந்துகொண்டு புன்னகை செய்த பெரியவரோடு இரண்டு வார்த்தை பேசிய மனோரம்யனின் கண்கள் சுற்றிலும் தேடலாயின.

தோட்டத்து அன்னாசிப் பழச்சாறு கொண்டு வந்து கொடுத்துவிட்டு, "தம்பிக்காகவோ என்னவோ மூடு கெட்டு அறைக்குள் உட்கார்ந்திருக்கிறாள் சிங்கப்பூருக்குப் போக வேண்டுமாம். " என்றாள் சிறு முறுவலோடு.

வியப்பாக இருந்தது அவனுக்கு. அன்று காலையில்தானே . . .என்று யோசனை ஓடியது.

“உட்கார்ந்திருங்கள் அங்கிள். நான் போய் திவியிடம் சொல்லிக்கொண்டு வருகிறேன்.” என்று எழுந்து சென்றான்.

அவளைப் பார்த்த வினாடியே ஏதோ என்று அவனுக்குத் தோன்றிவிட்டது. அப்போதுதான் மலர்ந்த பூப்போலக் காலையில் இருந்த திவ்யா!

அதற்குள் என்ன நேர்ந்தது? இடைப்பட்ட நேரத்தில்தான் ஏதோ நேர்ந்திருக்க வேண்டும்! அது என்ன?

கூட வந்த சாந்தமதியிடம் திரும்பி, “ஆன்ட்டி, என்னிடம் நம்பிக்கை உண்டுதானே? திவியோடு சற்று நேரம் தனியே பேச அனுமதிக்க வேண்டும்.” என்றான் தணிந்த குரலில்.

அவளுக்குமே மகளின் போக்கு குழப்பம்தான். திவி எதற்கும் இப்படி இருக்க மாட்டாள். ..

தலையாட்டிவிட்டு அவள் சென்றுவிட, ஒரே எட்டில் மனோரம்யன் திவ்யாவை அணுகினான்.

அவன் மார்பில் புதைந்து ஒரு கணம் அந்த சுகத்தை அனுபவித்தவள், உடனேயே விலக முயன்று “நீங்கள் ஏன் இங்கே வந்தீர்கள்? போய்விடுங்கள் போய்விடுங்கள்!” என்று தவித்தாள்.

வினோதினி இங்கே யாரை ஏற்பாடு செய்து வைத்திருக்கிறாளோ? அவர்கள் மூலம் தப்புத் தவறாக விவரம் எட்டி, அவசரப்பட்டு அவள் ஏதாவது செய்துவிட்டால்?

பதிலாக அவன் அவளை இறுக அணைத்தான்.

அவள் மெல்லத் தளரவும், “சொல்லு. என்ன நடந்தது? எதற்காக இந்தக் கண்ணீர்? ஏதாவது சாக்குப் போக்கு சொல்லாதே. உன்னை உணர்ந்தவன் நான். எந்தப் பிரச்சினை என்றாலும் அது நம் இருவருக்குமேதான்.” என்று அவளைத் தேற்ற முயன்றான்.

“இதில் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. . .”

“ஷ். அதை நான் அல்லவா சொல்ல வேண்டும்? ஆக, இப்போது பிரச்சினை இருப்பதை ஒத்துக்கொண்டுவிட்டாய். அது என்னவென்று தெரியாமல் நான் இங்கிருந்து செல்லப் போவதில்லை. மறுத்து நேரத்தை வீணாக்காமல் விஷயத்தைச் சொல்லு.” என்றான் அவன்.

அவனது அருகாமையும் பேச்சும் திடம் தர, அவள் நடந்ததைச்

சொன்னாள்.

சில நிமிஷங்கள் அவனுக்குமே ஒன்றும் ஓடவில்லை.

“உன்னை விரட்டிவிட்டால், நான் அவளை மணந்து விடுவேனாமா? நினைத்ததை எல்லாம் நடத்திச் செல்லப் பெண்ணாக வளர்ந்ததின் சீரழிவு! அது, அவள் நினைப்பது ஒருபோதும் நடக்காது எனும்போதுதான் புரியும்! ஆனால் இப்போது பிரச்சினை அதுவல்ல. தம்பி . . . “ என்று யோசித்தவன் ஏதோ தோன்ற நிமிர்ந்தான்.

“சூர்யா பாம்போடு இருப்பதாகப் படம் காட்டினாள் என்றாயல்லவா? இன்னும் . .என்ன சொன்னாள்? பச்சைப் பாம்புப் பெட்டிகளோடு நல்ல பாம்புப் பெட்டியும் . . .திவி, கிட்டதட்ட நெருங்கிவிட்டோம். இங்கே பாம்பு பிடித்துத் விற்கிற சில குடும்பங்கள் உண்டு. “ஈகோ சிஸ்டம்” பாதிக்கப் படுகிறது என்று அவர்களில் பலரைப் பண்ணை வேலைகளில் சேர்த்திருக்கிறோம். முன்பே சேர்ந்து பெரிய வேலைகளில் கூட இருக்கிறார்கள். அவர்கள் மூலம் கண்டுபிடித்து விடலாம். “

நம்பிக்கையும் பயமுமாக, “ஆனால் ஜாக்கிரதை, மனோ. அவளது லிஸ்டில் போலீசோடு, நீங்களும் பெரியப்பாவும் கூட இருக்கிறீர்கள்!” என்று எச்சரித்தாள்.

“அதுதான் அவளே வழிகாட்டி இருக்கிறாளே! நானும் நேரடியாக எதுவும் செய்யப் போவதில்லை. அப்புறம், இங்கே ஆன்ட்டி . . அங்கிளுக்குக் கூட எதுவும் தெரிய வேண்டாம். தாங்க மாட்டார்கள். பார், சும்மாச் சும்மா மல்லுக் கட்டுகிற நீயே இப்படி இருக்கிறாயே!” என்று அவள் கன்னத்தில் லேசாகத் தட்டிவிட்டு அவன் கிளம்பினான்.

இரண்டே மணி நேரத்தில் பெருமையுடன் தம்பி சூர்யப்பிரகாசம் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். பச்சைப் பாம்பை எப்படித் தொட்டான் எப்படித் தடவினான் என்று சொல்ல அறுத்ததோடு, “பாம்பை எல்லாம் வீட்டில் அடைத்து வளர்த்தால் “ஈகோ சிஸ்டம்” கெட்டுப் போய்விடுமாம். மனோ சார் சொன்னார். அத்தோடு, அவைகளுக்கு உணவாகத் தவளை, எலிக் குட்டி எல்லாம் உயிரோடு கொடுக்க வேண்டுமாமே! என்னால் எப்படிக்கா முடியும்? அதனால் அவைகளைக் காட்டிலேயே விட்டுவிட்டு வந்தோம். “ என்று சிறு வருத்தத்துடன் கூறி முடித்தான்.

ஆனால் மனோரம்யனின் வருகைக்காக மேலும் சில மணி நேரம் காத்திருக்க நேர்ந்தது.

அந்த அவகாசத்தில் அவன் பெரிய வேலை செய்தான். நடந்தது பற்றி வினோதினியுடைய தந்தை தேவநாதனிடம் பக்குவமாகப் பேசினான்.

சும்மாவே அங்கே பொருந்த முடியாமல் வெளி ஆளாகவே உணர்ந்து உள்ளூரச் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தவர் அவர். மகள் எந்த அளவுக்குப் போனாள் என்பதோடு, அவளது குற்றம் நிரூபிக்கக் கூடியது என்பதும் தெரிந்தவுடன் குடும்பத்தோடு அங்கிருந்து கிளம்பி விடுவதாக அவராகவே ஒத்துக் கொண்டுவிட்டார்.

அவரது பண்ணைக்கு நல்ல விலை வாங்கித் தரும் பொறுப்பை மனோரம்யன் ஏற்றுக் கொண்டான்.

மகள் இன்னும் என்னவேனும் பண்ணி வைத்துவிடக் கூடாதே என்று குடும்பத்தோடு அவரும் அன்றே சொந்த ஊருக்குக் கிளம்புவதாகத் தெரிவித்ததோடு கிளம்பியும் விட்டார்.

எல்லாமாக திவ்யப்பிரகாசத்தின் இல்லத்தில் அன்று ஒரு விருந்து நடந்தது.

பாரிஜாதமும் வந்திருந்தாள்.

அவள் தயங்கிப் பேசுவதைக் கண்டுகொள்ளாதவள் போல, இங்கே உள்ள சில பழக்க வழக்கங்கள் பற்றி சாந்தமதி அவளிடம் விவரம் கேட்கவும் சற்று நேரத்தில் விருந்து களை கட்டிவிட்டது.

எதையோ எடுக்கிற சாக்கில் உள்ளே சென்ற திவியைத் தொடர்ந்து போய்த் தனிமையில் பிடித்த மனோரம்யன், “என்ன பாடு பட்டு உன் தம்பியைக் காப்பாற்றி இருக்கிறேன். பரிசு ஒன்றும் கிடையாதா?” என்று குறையோடு கேட்டான்.

கண்ணில் சிரிப்புடன் “கிடையாது என்று யார் சொன்னது?” என்றாள் அவள் எடுப்பாக.

“அப்படியானால் தருவது! “

“தரமாட்டேன் என்று நினைத்தீர்களா?”

“பேச்சு என்னமோ தாராளம்தான். ஆனால் அவ்வளவு தூரத்தில் நின்று என்னத்தைத் தருவாயாம்?” என்றான் அவன் ஆவலாக.

“இருக்கிறதே! தருவேனே! அதுதான் . .. ஃப்ளையிங் கிஸ்!” என்று கண் சிமிட்டிச் சிரித்தாள் அவள்.

“ஃப்ளையிங்கை விட்டுவிடலாம். மற்றதை நீ தருவதாகச் சொன்ன பிறகு நான் வாங்காமல் விட்டு விடுவேனா?”

இரண்டெட்டில் அவள் அருகே வந்து கையைப் பற்றி அவன் இழுத்தபோது, “தம்பி படம். இங்கேதான் எடுத்து வைத்தேன் . . . “ என்று திவ்யப்பிரகாசத்தின் குரல் கேட்டது.

வெளியில் இருந்து அங்கேதான் வந்து கொண்டிருக்கிறார்!

வெற்றிப் புன்னகையோடு புருவம் உயர்த்தி, “இனி வசூல் எப்படியாம்?” என்று அவள் கிசுகிசுக்க, தோளைக் குலுக்கி “எப்படியும் கிணற்று நீர்! சமயம் வரும்போது இரு மடங்காக வசூலித்துக் கொள்ளப் போகிறேன். அவ்வளவுதானே?” என்று சமாளித்தான் அவன்.

அவனது கண்களில் சிறு ஏமாற்றத்தைக் கவனித்தவள் மின்னல் வேகமாகப் பார்வையைச் சுழற்றிவிட்டு, அதே மின்னலாய் அருகில் வந்து எம்பி அவன் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு விலகி ஓடினாள்.

முகம் விகசிக்க அவளைத் தொடர்ந்து நடந்தான் அவன்!